# தொல்காப்பியம்

## பொருளதிகாரம்

## தொகுதி -1

தமிழண்ணல்

புதிய முறை எளிய உரை

# தொல்காப்பியம்

## பொருளதிகாரம்

## தொகுதி -1

## அகத்திணையியல், புறத்திணையியல்

**தமிழண்ணல்**

விற்பனை உரிமை

**மீனாட்சி புத்தக நிலையம்**

மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு, மதுரை - 625 001.

தொலைபேசி: அலுவலகம் : 2345971 வீடு : 2560517

ஈமெயில்: meenakshiputhakam@hotmail.com

திருத்திய முதற் பதிப்பு : ஏப்பிரல், 2010

திருவள்ளுவர் ஆண்டு : 2041, சித்திரை

உரிமை : உரையாசிரியருக்கு

விலை உரூவா : 35.00

## நூல் விவரம்

நூலின் பெயர் : தொல்காப்பியம் பொருளதிகாரம் (தொகுதி 1)

உரையாசிரியர் பெயர்: தமிழண்ணல்

முதற்பதிப்பு : ஏப்பிரல், 2010

நூலின் தன்மை : இலக்கண விளக்கம்

நூல் அளவு : 14 X 22 செ.மீ. டெம்மி

அச்சு எழுத்து அளவு : 12 புள்ளி

பக்கங்கள் : 88

நூலின் விலை : உரூவா 35.00

அச்சிட்டோர் : மோனார் கிராபிக்ஸ், சென்னை.

ஒளி அச்சுக் கோர்வை: ஆதவன் பிரிண்டர்ஸ், மதுரை.

வெளியீடு : சிந்தாமணிச் செல்வம்

---

SELLING RIGHTS

MEENAKSHI PUTHAKA NILAYAM

Mayura Complex 48, Dhanappa Mudali Street, Madurai - 625 001.
☎ Off : 2345971 Resi : 2560517
E-Mail: meenakshiputhakam@hotmail.com

# முன்னுரை

தொல்காப்பியம் எழுத்தும் சொல்லும் வெளிவந்து மாணவர்களும் மக்களும் பயன்பெற்றனர்.

எழுத்தும் சொல்லும் அறிந்தோர் **பொருளதிகாரத்தைக்** கட்டாயம் படிக்க வேண்டும்.

உலக இலக்கண நூல்களில், இவ்வளவு தொன்மை மிக்க காலத்தில் இலக்கியத்திற்கு – அதன் படைப்புத் திறனுக்கு –அதில்இடம்பெறும் இலக்கிய வகைகள், கொள்கைகள், உத்திகளுக்கு ஒரு பெரிய பகுதியை ஒதுக்கி எழுதித் தந்திருப்பது நம் தொல்காப்பியம் ஒன்றேயாகும். **தொல்காப்பியர்** நம் வணக்கத்திற்குரியவர். ஆண்டு தோறும் அவருக்கு விழா எடுக்கத் தமிழர் கடமைப்பட்டுள்ளனர். தமிழிலக்கியத் தோற்றம் புராணம் அன்று; இதிகாசம் அன்று; கட்டுக்கதைகள் அன்று. அது மானுட வாழ்வு பற்றியது; இவ்வுலகம் பற்றியது; நம்மைப் பற்றியது. காதல் வாழ்வும் அதனுடன் இணைந்த புறஉலகமும் பற்றியது.

பொருளதிகாரத்தைப் படித்தால், அது தமிழர் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கம் பற்றிய வரலாறோ என்று தோற்றும். அத்துணை அளவு அது மனித வாழ்வு பற்றிப் பேசுகிறது. ஆனால், உண்மையில் அது இலக்கியக் கலை பற்றியது.

தொல்காப்பியம் உலகப் புதுமைகளில் ஒன்று. இலக்கிய வானின் உச்சத்தைத் தொடுவது. உலகிற்கு இன்னும் முழுமையாக அறிமுகப்படுத்தாதது.

தமிழ்ப் பண்பாடு தனித்தன்மையுடையது. தமிழிலக்கியம் உலக இலக்கியப் பரப்பில், வேறுபட்டு நின்று, தனிச்சிறப்புக்களுடன் ஒளிவீசித் திகழ்வது. ஆனாலும் தமிழர்களே இன்னும் சரிவர அறியாதது.

இதை உணர இப்பொருளதிகாரம் துணைசெய்யும். தொல்காப்பியம் விளங்கவில்லை என்பவர்கள் அறிவு விளங்காதவர்கள்.

இந்நூல் **'இயல் கருத்துநிரலை'**ப் படித்து முடித்தாலே, நூலின் சாரம் முழுதும் விளங்கிவிடும்.

நூற்பாக்களுக்குத் தரப்பட்டுள்ள தலைப்புக்கள் மிக விரிவானவை. வேண்டுமென்றே தொடர்ச்சி தோன்றத் தரப்பட்டவை.

**சுருக்கமாக ஆனாலும் விளக்கமாக உரை எழுதப்பட்டுள்ளது.**

**இளம்பூரணர்** முதல் இன்று வரை உரை எழுதியவர்களுக்கு, இவ்வுரை கடமைப்பட்டுள்ளது. எனினும் இவ்வுரையில் தொல்காப்பியனார் கருத்தை அடியொற்றியேபோகும் முயற்சி காணப்படும்.

சதாசிவ நகர்,
முதன்மைச்சாலை, மதுரை – 625 020.

தமிழண்ணல்

## புதிய முறை எளிய உரைப் பதிப்புப் பற்றிய குறிப்பு

தொல்காப்பியம் எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் போல, பொருளதிகாரமும் செம்பதிப்பாக வெளியிடப்படுகிறது. எழுத்தும் சொல்லும் கற்பது, இப் பொருளதிகாரத்தின் பொருட்டே என்பது தமிழ் நூல் வல்லார் கருத்து, இது பெரிய அளவினதாகலான் நான்கு தொகுதிகளாக அமைக்கப் பெற்றது. முதல் இரண்டு இயல்கள் (அகத்திணை இயல், புறத்திணை இயல்) தனிப்பதிப்பாக இதிலுளது.

இச் செம்பதிப்புக்களின் புதுமை எளிமை அருமை மூன்றும் கருத்திற்கொள்ளற்பாலன. ஒவ்வோரியலிலும் முதலில் தரப்படும் **'இயல் கருத்து நிரல்'**, அவ்வியலில் வரும் அனைத்து நூற்பாக்களின் கருத்தையும், நிரல்பட உட்தலைப்புக்களுடன், ஒரு கட்டுரையைப் படிப்பது போலத் தருகிறது. ஒரு மாணவனுக்கு, இதைவிட எளிமையாக ஓர் இயலில் வருவனவற்றைப் பருந்துப் பார்வை போலத் தொகுத்துணர்த்த முடியாது.

அடுத்தடுத்து நூற்பாக்களின் தலைப்புக்கள், அவை மட்டும், தொடர்ந்து படிக்கப்பட்டாலே, தொல்காப்பியர் எவ்வெக்கருத்தை, எவ்வாறு வரிசைப்பட நெறிமுறை பிறழாது சொல்லிச் செல்கிறார் என்பது விளங்கி விடும்.

குறிப்புரையில் அருஞ்சொற்பொருள் மட்டுமன்று, நூற்பாக்களின் உள்ளார்ந்த சாரமான குறிப்புகளும் தேவைப்படுமிடங்களில் விளக்கமாகத் தரப்படுகின்றன.

திருவனந்தபுரத்திலுள்ள பன்னாட்டுத் திராவிட மொழியியற் கழகம், **'தொல்காப்பிய மூலம் - பாட வேறுபாடுகள்'** பற்றி ஒரு நூலை பேரறிஞர் வ.அய்.சுப்பிரமணியம் வழிகாட்டுதலில் வெளியிட்டுள்ளது (1996). அந்நூலுடன் ஒப்பிட்டு அதில் காணப்படும் மூலபாடங்களில் பொருத்தமுடையன எனக் கருதப்பட்டவை இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளன.

# தொல்காப்பியச் செல்வம்

தொல்காப்பியர் தரும் தொல்காப்பியமிது
ஒல்காத் தமிழினுக் குயிர்தரும் செல்வம்!

பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
பழந்தமிழ் மொழிநலம் இழந்திடும் நிலையினில்
வழக்கொழிந் திடாது வழங்கிய செல்வம்!

மலிதிரை ஊர்ந்து மண்கடல் வௌவலின்
பொலிதரு தமிழினம் தமிழ்மொழி யாவையும்
இழிசினக் கடலது விழுங்கிட நினைத்ததே!

விழுங்கிட நினைத்த அழுங்கட லதனை
அடக்கினன், நிலந்தரு திருவுடைப் பாண்டியன்!
புலந்தரு திருவுடைப் புலவரைக் கூட்டினன்!
நலந்தரு செல்வ மனைத்தையும் மீட்டனன்!

ஒன்றோ பலவோ உறுபகை தமிழுக்கு
நன்றோ தீதோ நாற்றிசைப் பகைவர்
அன்றோ இன்றோ அயலவர் அறிவிலர்
கடலோ செல்லோ அடிமையோ மடமையோ
உடன்றனள் தமிழ்த்தாய் உயிர்வாழ்வதற்கே!

தமிழைக் கொண்டே தமிழை அழிப்பவர்
தமிழால் வாழ்ந்தே தமிழ்ப்பகை ஆபவர்
தமிழ்மண் வாழ்ந்து தமிழ்நீர் பருகித்
தமிழையே அழிப்பவர் தரணியில் பல்கினர்!

இரக்கமொன்றில்லா அரக்கர்க ளாயினர்!
தமிழ்க்காப்பு முயற்சியுள் தலைமை ஏற்ற
முதற்பெரும் சான்றோன் தொல்காப் பியனே!
காப்பு முயற்சியே காலங்கள் தோறும்
வாய்த்தது, தமிழும் வாழ்ந்தது; பகைஞர்
வீழ்ந்திட வில்லை விளையாடு கின்றார்!

ஆயிரம் ஆயிரம் ஆண்டுக ளாகத்
தாயினும் மேலாய்த் தமிழைக் காத்த
தொல்காப்பிய மிதைநாம் தொழுது கற்றிடுவோம்!
தோளை உயர்த்தி எழுவோம்,
நாளைய உலகம் தமிழ தாகுமே!

# உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| தமிழரின் முதல் அடையாளம் | 7 |
| பொருளதிகாரம் - முன்னுரை | 9 |
| அகத்திணையியல் | 11 |
| நூற்பா முதற்குறிப்பு | 51 |
| புறத்திணையியல் | 52 |
| நூற்பா முதற்குறிப்பு | 88 |

# தமிழரின் முதல் அடையாளம்

தொல்காப்பியம் தமிழரின் முதல் அடையாளம். தமிழ்மொழிக் காப்பு முயற்சி மட்டுமன்றி தமிழின வரலாற்றுக் களஞ்சியப் பதிவாகவும் மன்னாயமாம் சமுதாய வாழ்வு பற்றிய சான்றுகளைப் பொதிந்து வைத்த ஆவணமாகவும் இது திகழ்கிறது.

திருக்குறள் தமிழர்தம் பண்பாடு – தமிழ்ச் சமய நெறிக் காப்பு முயற்சியின் வெளிப்பாடாய்த் தோன்றியது. எழுதப்பெற்றுள்ள முறையால் மானுட இனத்தின் பொது நூலாகத் திகழ்கிறது. இந்திய நாட்டின் தேசிய நூலாகும் அனைத்துத் தகுதிகளும் திருக்குறள் ஒன்றனுக்கே உண்டு. தமிழ்ப் பண்பாட்டுக் குறிக்கோட்பதிவும் அதுவே.

சங்க இலக்கியமும் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தமிழர்தம் நாகரிக முதிர்ச்சியையும் பண்பாட்டு வளர்ச்சியையும் உலக முள்ளளவும் நிலைபெறக் கூடிய மானுட விழுமியங்களையும் உணர்த்தும் கருவூலங்களாகும்.

இவற்றுள் தொல்காப்பியப் பொருளதிகாரத்தைப் பழந்தமிழர் நாகரிகக் கையேடு என்றே குறிப்பிடலாம். இதன்கண் தொல் பழங்கால – பண்பாட்டு மானுடவியல் சார்ந்த – தமிழினத் தோற்ற வளர்ச்சி பற்றிய வரலாறு சார்ந்த குறிப்புக்களும் உள. தொல்காப்பியரின் சமகாலத் தமிழின வாழ்வியல் பதிவுகளும் உள. முன்னையவற்றின் எச்ச மிச்சங்களுடன், சங்க இலக்கியச் சான்றுகளுடன் ஒப்புநோக்கக் கூடிய அவ்வக்காலப் பதிவுகளும் கலந்திருப்பதால், இவற்றைப் பிரித்தறியும் வரலாற்று வரைவியலாய்வு தேவை. இதற்குத் தொல்காப்பியப் புலமையுடன், திருக்குறள் – சங்க இலக்கியம் – இரட்டைக் காப்பியங்கள் பற்றிய புலமையும் தேவைப்படும். இவற்றிற்கும் அப்பால், தொல்காப்பியர் தமது கால எல்லையைத் தாண்டி, எதிர்கால மானுட இனம் – குறிப்பாகத் தமிழினம் எவ்வாறு வாழ வேண்டுமென வழிகாட்டுகிற இடங்களும் பலவுள. இவையும் தனியே எடுத்தெழுதி விளக்கப்பட வேண்டும்.

மொழியைப் பொறுத்தவரை, அவர் மிகமிக அடிப்படையான மொழி வழங்கும்படியான நெறிமுறைகளை மட்டுமே ‘புலங்’ களெனத் தொகுத்துத் தந்துள்ளார். உரையாசிரியர்கள் தொல்காப்பியத்தை விளக்கும் கலங்கரை

விளக்கங்களாக உள்ளனர்; அதே சமயம் தத்தம் கால வெளிப்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் "காலப் பின்னணி உரையும்" எழுதியுள்ளனர். இதனால் அதில் உள்ள இலக்கணம் 90 விழுக்காடு, தமிழுள்ளளவும் உடன் நிலவ வேண்டிய விதிகளின் தொகுப்பாகவே உளது. மொழி இலக்கணத்திலும் கடந்த காலத்தைக் காட்டுவது சிறு பகுதி; சம காலப் பகுதி பல; என்றும் பொருந்தி வருபவை செம்பாதிக்கு மேற்பட்டவை. இவையும் பிரித்தறியப் படவேண்டும்.

பொருளதிகாரத்தில் இலக்கியக் கொள்கைகள், இலக்கிய உருவாக்க உத்திகள், திறனாய்வுகள் பற்றிய பகுதிகள், செய்யுளியலில் மிகுதியாகவும் ஏனையவற்றில் ஒரு பகுதியாகவும் உள்ளன. இவை உரையாசிரியர்களின் துணையோடு, இன்னும் முழுமையாக ஆராயப்பட வேண்டும். இதுபற்றி தொல்காப்பியர் அடிச்சுவட்டில் மேலும் முழுமையாகத் தெளிவுபடுத்தப்பட வேண்டியவை மிகப்பல உள.

தொல்காப்பியர் வடமொழிப் பண்பாட்டு நுழைவுக்குப் பின்னரே நூலை எழுதியுள்ளார். வடவர் நுழைவு ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுக்கு முன்பிருந்தே ஏற்பட்டுவிட்டது. தமக்கு முன்பும், தம் காலத்தும் ஏற்பட்ட இரண்டுவகை இழப்புகளை, எதிர்த்து நின்றார் அவர். கரை கடந்துவரும் வெள்ளத்தைத் தடுத்துநிறுத்தி, அணைகட்டி, அந்நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்துவது போலத் தமிழுக்கு எதிரான வெள்ளங்கள் – சமயம், மொழி, பண்பாட்டுப் படையெடுப்புக்களாக இங்கு நிகழ்ந்த போது, தொல்காப்பியர் எடுத்துக்கொண்ட தமிழ்க் காப்பு முயற்சிகளே தொல்காப்பியமாக உருவெடுத்துள்ளன.

இயற்கைச் சீற்றத்தால், தென்பகுதிக் குமரிக் கண்டம் அழிந்தபோது, அதைத் தடுத்துத் தமிழைக் காப்பாற்றிய பெருமையும் அப் பேராசானுக்கு உண்டு. இதனால் தொல்காப்பியத்தைத் தமிழ்க் காப்பு இயக்கத்தின் முன்னோடி – முதல் முயற்சி எனலாம்.

கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் இந்நூல்களை மிக விரும்பிப் பயிலத் தொடங்கியுள்ளனர். இவை அறிமுகமானபின், இடைக்காலப் பேருரைகளையும் இக்கால ஆய்வுரைகளையும் அவர்கள் பயிலவும் ஈடுபடவும் இந்நூல்கள் வழிகாட்டும்.

ஏரகம் தமிழண்ணல்
சதாசிவ நகர், மதுரை 625 020

# பொருளதிகாரம்

## முன்னுரை

உலக மொழிகளுக்கான இலக்கண நூல்களில் இவ்வாறு ஒரு பிரிவு தமிழில் மட்டுமே காணப்படுகிறது. இலக்கியம் படைக்கும் நெறிமுறைகளைக் கூறுவது இவ்வதிகாரம்.

பொருளதிகாரம் என்று பெயர் வைத்தது ஏன்? திருக்குறளில் 'பொருட்பால்' தான் பெரிய பகுதி. அரசு, அரசு சார் ஆட்சியாளர், படைஞர், குடிமக்கள், உணவு, உழவு, மக்களில் சான்றோர், கயவர், வறுமை, வறுமை ஒழிப்பு அனைத்தும் பற்றியது திருக்குறட் பொருட்பால். இதிலிருந்து 'பொருள்' என்பது உலகத்தை உலகியலை மானுட வாழ்வைப் பற்றியது என அறியலாம். தொல்காப்பியப் பொருளதிகாரம், இந்த உலக வாழ்வை, இலக்கியமாகப் படைக்கும் நெறிமுறைகளைக் குறிக்கிறது.

கிரேக்கம், இலத்தின், சமற்கிருதம் அனைய தொல்பழங்கால மொழி இலக்கியங்கள் தொன்மங்கள் அதாவது புராண வடிவானவை அல்லது மனித வாழ்வும் நம்பவியலாத் தெய்வக் கதைகளும் இணைந்தவை. தமிழரின் பழைய இலக்கியம் மனித வாழ்வு ஒன்றையே பற்றியது. முன்னையவை மக்களிடம் பெரும் செல்வாக்குப் பெற்றதற்கு, அவற்றின் அற்புதக் கதை நவிற்சிகளே காரணம். சங்க இலக்கியம் கற்றறிந்த மக்களையே பெரிதும் கவர்வதன் காரணம் அதன் ஒப்புயர்வற்ற மனிதத்தன்மையேயாகும்.

இலக்கியப் பொருளாக இந்த உலகமும் உலக மக்களும் அவர்கள் வாழ்வுமே படைக்கப் படுதலால் இது பொருள் அதிகாரம் ஆனது. இம் மானுட வாழ்வு அகம், புறம் எனப் பகுக்கப்பட்டது. அகம் காதல், குடும்பம் பற்றியது; தனிப்பட்டோர் வாழ்வு பற்றியது. அகம் – உள்ளத்துணர்வால் நுகரும் இன்பம், தனித்த மறைபொருள்; வெளிப்படப் பகரப்படாதது. புறம் – அதுதவிர்த்த அனைத்து உலக வாழ்வும் பற்றியது. அகம் வரையறைக்குட்பட்டது. அகம் அல்லாதன எல்லாம் புறம். உயர்திணை – உயர்திணை அல்லாதன எல்லாம் அல் + திணை (அஃறிணை). வேற்றுமை – வேற்றுமை அல்லாதன எல்லாம் அல்வழி. அகம் – அகமல்லாதன எல்லாம் புறம். இதுதான் மரபு வழி விளக்கம்.

பொருளதிகாரத்தில் **அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல்** நான்கும் அகம் பற்றியன. **புறத்திணையியல்** ஒன்று புறம் பற்றியது.

**மெய்ப்பாட்டியல்** நாடக வழக்கான அகப்பாடலில் மெய்ப்பாடுகளை விளக்குகிறது. உவமை ஒன்றே ஒரே ஒரு அணியாய்த் தொல்காப்பியர் ஏற்றது. மெய்ப்பாட்டியல், **உவமவியல்** இரண்டையும் ஒரு சாரார் தமிழ் அணி இலக்கணம் பற்றியன என்பர். **செய்யுளியலுக்கு** இன்று பெயர் சூட்டினால் **'இலக்கிய இயல்'** எனலாம். செய்யுளியல் ஓர் ஆலமரத்தின் அடிமரம் போல் விளங்குகிறது. எழுத்தையும் சொல்லையும் கற்பது, இலக்கியங்களைப் படைப்பதற்கும் படிப்பதற்குமே என்பது போன்ற தோற்றத்தை இப்பெரிய இயல் தருகிறது. மொழி மக்களிடையே வழங்கவும் நிலைபெறவும் இலக்கியப் படைப்புகளே, காலந்தோறும் ஒரு தொடர்ச்சியைத் தருகின்றன என்பதைத் தொல்லாசான் நமக்கு இவ்வியல் மூலம் நினைவூட்டுகின்றார். எனவேதான் இலக்கியம் படைக்கும் யாப்பு வடிவம், இலக்கிய வகைகள், இலக்கியக் கொள்கைகள், இலக்கிய உறுப்புக்கள் அனைத்தையும் விளக்குகிறது இது. **மரபியல்** அகப்பாடல்களில் இயற்கைப் பின்புலமும் சிற்றுயிர்களின் வருணனையும் வருவதால் அவற்றின் பெயர்கள் மற்றும் சொல் மரபுகள் பற்றியது.

காலப் பழைமையால், பல்வேறு நூற்றாண்டுகளில், ஏடு பெயர்த்து எழுதியவர்கள், தம் காலநிலை, விருப்புகளுக்கேற்பச் சிலவற்றை மாற்றி எழுத வாய்ப்பிருந்தது. எனவே, இந்நூல்களில் வரும் பெரும்பான்மையான கருத்துக்களின் அடிப்படையிலேயே, இவை ஆராயப்பட வேண்டும். ஒன்றிரண்டு இடங்களில் வருவனவற்றை, அப் பெரும்பான்மையுடன் ஒப்பிட்டே உண்மை காண முயல வேண்டும்.

# 1. அகத்திணை இயல்

அகத்திணையின் தோற்றுவாய் இது. அகத்திணையின் உள் வகைகள்; முதல் கரு உரி என அகப்பாடலில் அமையும் பொருள்கள்; பிரிவு வகைகள்; காதலர் உடன் போக்கு; அச்சூழலில் நிகழும் கூற்றுவகைகள்; அகப்பாடலுக்கே மிக இன்றியமையாத உள்ளுறை; சிறு வரவிற்றான கைக்கிளை, பெருந்திணைகளின் இலக்கணம்; அகப் பாடலின் அடிக்கருத்து உலக வாழ்வு என்பது; அது நாடக வழக்காகப் புனையப்படும் என்பது; அகம் எனும் காதல்பாட்டு உலக மக்களுக்கெல்லாம் பொதுவானதாதலின், எந்த ஒரு அகப்பாடலிலும் யார் ஒருவர் இயற்பெயரும் இடம் பெறாமை - இவை யாவும் நிரலே விளக்கப்படுகின்றன.

அகப்பாடலுக்குள் வரும் புறச்செய்தியிலும் புறப் பாடல்களிலும் சுட்டி ஒருவரது இயற்பெயர் வரலாமே தவிர, அகப்பாடலில் வராது. அங்ஙனம் வரின் அகப்பாடற் கருத்துள்ளதாயினும், அது புறமாகிவிடும் என்ற கருத்தும் தொனிக்கின்றது.

## இயல் கருத்து நிரல்

**அகத்திணை எண்ணிக்கை**

1.1. கைக்கிளை முதலாக பெருந்திணை ஈறாக, அகத்திணை ஏழு என முன்னதாகப் பகுக்கப்பட்டது.

1.2. முற்கூறிய ஏழில், இடையிலுள்ளவை ஐந்து. அவற்றிற்குப் பொதுவான திணை பாலை என்பது. அது நீங்கலாக ஏனைய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நிலவுலகம் பகுக்கப்படும் இயல்பினது. இவை முறையே மலை, காடு, வயல், கடல் ஆகும். தமிழகத்தில் முல்லை குறிஞ்சி நிலங்களின் எல்லையோரப் பகுதிகள், மழையில்லாத கோடையில் பாலையாக மாறும். பாலைக்குத் தனிநிலம் இல்லை. காலம் உண்டு.

**அகத்திணைப் பாட்டு - மூன்று பொருள்கள்**

2.1 அகப் பாடலினுள் வருபவை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் எனும் மூன்றுமாகும். இவை முறையே ஒன்றைவிட ஒன்று சிறந்தவை. அதனால் உரிப்பொருளே ஆகச் சிறந்தது.

2.1.1. முதற்பொருள் எனப்படுவது; பாடலுள் வரும் நிலமும் பொழுதும் பற்றிய பின்னணி வருணனைகள்.

**நிலம்**

2.1.2. காடு சார்ந்தது முல்லை நிலம். அதற்குத் தெய்வம் கரிய நிற மாயோன். மலை சார்ந்தது குறிஞ்சி நிலம். தெய்வம் செந்நிற முருகன். இனிய நீர்நிலை சார்ந்தது மருத நிலம். தெய்வம் வேந்தன் (இந்திரன்). கடல்சூழ் மணல் நிலம் நெய்தல். தெய்வம் வண்ணன் (வருணன்). முன்னோர் பெயரிட்ட முறைப்படி இவை அழைக்கப்படும்.

**பொழுது**

2.1.3.1. முல்லை நிலப் பின்னணியில் கார் காலமும் மாலைப் பொழுதும் பாடப்பெறும். குறிஞ்சிப் பின்புலமாக கூதிர்காலமும் நள்ளிரவும் (யாமம்) இடம்பெறும்.

2.1.3.2. முன்பனிப் பருவமும் குறிஞ்சித் திணைப் பாடலில் வரலாம்.

2.1.4. மருதம் வைகறை (விடியுமுன்), விடிகாலை இரு பொழுதுகளையும் பின்புலமாக வருணித்துப் பாடப்படும். நெய்தலுக்கு எற்பாடு எனப்படும் சாயுங்காலமே பின்புனைவாக வரும். இவை இரண்டிலும் பெரும்பொழுது – பருவ வருணனை இராது.

2.1.5. நான்கு நிலங்களுக்கும் நடுத்திணை எனப்படும் பாலை நிலத்திற்கு, இளவேனில் முதுவேனில் (கோடைப் பருவம்) ஆகிய இரண்டும் நண்பகல் எனப்படும் உச்சிப்பொழுதோடு சேர்த்து, வழியிடை வருத்தும் பொழுதாகப் புனையப்படும்.

2.1.5.1. இதற்குப் பின்பனிப் பருவப் புனைவும் பின்புலமாக அருகி வருமிடங்கள் உள.

2.1.5.2. காலிற்பிரிவும் (தரைவழி), கலத்திற்பிரிவும் (கடல் வழி) ஆகிய இரண்டும், தனித்தனியே குறிப்பிட்டுப் பாடப் பட்டாலும் பின்பனிப் பருவப் புனைவ பிரிவு அவலத்திற்கு உரியதாகும்.

2.1.5.3. மேலே முதற்பொருள் எனச் சுட்டியதில், திணை மயங்கிவரும் – 'திணை மயக்கம்' தவிர்க்கப் படுவதில்லை. ஆனால் ஒரே பாடலில் ஒன்றற்கு மேற்பட்ட நிலங்கள் ஒன்றினொன்று மயங்கி வருவதில்லை. இலக்கிய மரபை நன்கறிந்தவர்கள், இதனை நன்கு புலப்படுத்தியுள்ளனர்.

**'உரி' என விதந்து கூறப்படாதவை**

2.2. பின்னர் உரிப்பொருள் என ஐந்து மட்டும் கூறப்படும். ஏழு திணையுள் அங்ஙனம் 'உரி' என்று கூறப்படாத கைக்கிளை பெருந்திணை இரண்டும் ஏனைய ஐந்து திணைகளிலும் கலந்து வரும். (திணை மயக்கம் கூறியதால், அடுத்து இவ்வாறு மயங்கியும் வருமெனக் கூறிவிட்டு, பின்னர் உரிப்பொருள் பற்றி விளக்குகிறார்).

**ஐந்து 'உரி'ப் பொருள்கள்**

2.3. ஐந்து திணைக்கும் உரிய உரிப்பொருள்கள் முறையே புணர்தல் (குறிஞ்சி), பிரிதல் (பாலை), இருத்தல் (ஆற்றியிருக்கும் முல்லை), இரங்கல் (ஆற்றாமையைப் பாடும் நெய்தல்), ஊடல் என்பனவும் இவற்றிற்கு நிமித்தமாக வருவனவும் ஆகும். அதாவது புணர்தல் பிரிதலேயன்றி, அவற்றுடன் தொடர்புடையனவும் அவற்றில் பாடப்படும்.

2.3.1. கொண்டுதலைக் கழிதல் – தலைவன் தலைவியை உடனழைத்துப் போகும் உடன்போக்கு; பிரிந்து அவண் இரங்கல் – தலைவியை அவள் சுற்றத்தார் வந்து, இடைமறித்து அழைத்துப் போதலால் இருவரும் பிரிந்து இரங்குதல் ஆகிய இவை இரண்டும் பாலை எனும் ஒரு திணைப்பாற்படும்.

2.3.2. அதுபோலத் தலைவன் தலைவியை எதிர்ப்படுதலும் கண்ணொடுகண் கலக்கும் காட்சியும் குறிஞ்சி எனும் ஒரு திணைப்பாற்படும். (நிரல்படச் சொல்லி வருதலுடன், இவ்வாறு இயைபுபட வருவன உளவேல் அவற்றை அங்கங்கே இடம் மாறிக் கூறிவிடுதலும் பழங்காலப் பாடங்கூறும் மரபாகும்)

2.3.3. இதுவரை கூறப்பட்டன, உரிப் பொருளை உளப்படுத்திய முதற்பொருள்கள், அவையாவன நிலமும் பொழுதும் என இரண்டும் அங்கு நிகழும் மாந்தர்ம் வாழ்வுமாம்.

**கருப்பொருள்**

2.4. ஒவ்வொரு நிலத்திற்கும் தெய்வம் உணவு அங்கு வாழும் விலங்குகள் மரங்கள் (பூக்கள்) பறவைகள் பறை (தோற்கருவிகள்) மக்களும் அவர்களின் தொழில்களும் யாழ் (இசைக்கருவிகள்) இவற்றின்

தொடர்பான பிறவும் சேர்ந்து கருப்பொருள்கள் ஆகும். இவை அன்று நான்கு நிலங்களும் தனித்தனித் தன்மைகளுடன் இருந்த தொடக்க காலத்தை நினைவூட்டுகின்றன.

2.4.1. முன் நூற்பாவில் மரம் எனப்பட்டது, இங்கு பூ, எனக்கூறப்படுகிறது. இவ்வாறு 'உடம்பொடு புணர்த்துச்' சொல்லாமற் சொல்வது தொல் காப்பியர் உத்திகளில் ஒன்று. எந்த நிலத்திற்குரிய பூவாயினும் பறவையாயினும் அவ்வந் நிலத்துடன் வராமல், வேற்று நிலங்களில் காணப்படுவதாகப் பாட்டுப் பாடினாலும், அவ்வந்நிலத்திற் குரியனவாகக் கருதப்படும்.

**அகப்பாடலில் வரும் திணை நிலம் சார்ந்த மக்களின் பெயர்கள்**

2.5. ஒவ்வொரு திணை நிலத்திலும் அவ்வந் நிலத்திற்குரிய நிலையான பொதுப் பெயர்கள் இருவகைப்படும். அவை அவ்வந் நிலத்தால் வரும்பெயர்களும் அவ்வந் நிலத்தொழிலால் வரும் பெயர்களுமாகும். (திணைப் பாடலில் தலைமக்கள் பெயர்களேயன்றி, கருப் பொருளாக வரும் மக்கட் பெயர்களும் 'சுட்டி ஒருவர்ப் பெயர்' எனப்படும் இயற்பெயராக வாரா.)

2.5.1. ஆயர் (ஆ காத்தலால் வரும் பெயர்), வேட்டுவர் (வேட்டையாடுதலால் வரும் பெயர்) என்பன முறையே முல்லைக்கும் குறிஞ்சிக்கும் நிலத்தொழிலால் வருவன. இவர்களில் தலைமக்களாக வருபவர்களும் உளர். இவை ஆண்மக்கள் பெயர்கள் என்பதால், இவற்றிற்கு நிகரான பெண்மக்கள் பெயர்களும் உள என்பது பெறப்படும்.

2.5.2. ஏனைய நிலத்தவர்களுக்கும் ஆராயுமிடத்து, இவ்வாறு திணைநிலத்தால் வரும்பெயர்கள், மிகப் பலவாய் இவ்வாறே வரும்.

2.5.3. அடியோர் (பிறர் ஏவியதைச் செய்வோர்), தாமாக ஒரு தொழில் செய்யும் வல்லுநர் (கைவினைஞர்) இருவரும், ஐந்திணைக்குள் அடங்காத கைக்கிளை பெருந்திணைப் பாடல்களில் இடம் பெறுவர். அவர்களும் பாடப் பெறுதல் நீக்கப்படுதல் இல்லை, அருகி வரும்.

2.5.4. பிறரை ஏவி வாழும் தலைமக்களும், ஐந்திணைப் புறத்தவாகிய கைக்கிளை, பெருந்திணை ஒழுக்க நிலைகளுக்கு உரியராவதுண்டு. எனவே அவர்களும் அத்திணைகளிற் பாடப்பெறுவர்.

அகவாழ்வியல் பிரிவு வகைகள்

3.1. தலைவன் ஓதுதற்கும் (கற்பதற்கும்), பகைவரோடு போர் செய்தற்கும் மன்னர்களிடையே தூதுவராகச் செல்லுதற்கும் தன் துணையைப் பிரிவான்.

3.2. கற்பதற்கும் தூதுரைத்தற்கும் பிரிவதென்பது, கல்வி, கேள்வி நிலையில் உயர்ந்தவர்களுக்கு உரியனவாகும். (கல்வி, கேள்வி, பண்பு, திறமைகளில் சிறந்தோர்க்கு என்பது பொருள்). உயர்ந்தோர் உயர்சாதியினர் என எந்த இடத்திலும் தொல்காப்பியர் சுட்டவில்லை.

3.2.1. வேந்தன் தானே படையெடுத்துப் போதலும் உண்டு. அவனொடு பொருந்திய தளபதிகள் குறுநில மன்னர்கள் போல்வார் போதலும் உண்டு. இரண்டுமே வேந்தன் மேற்றாய்ப் பகைவயிற் பிரிவாகவே கருதப்படும். (சக்கரவர்த்தி, பேரரசன் என்பது வேந்தன் எனும் சொற்பொருள்)

3.3. மிகுந்த சிறப்புக்குரியராய்ப் போரில் உயிர்நீத்தவர்களுக்குப் படிமம் சமைக்கவும் முல்லை முதலான நான்கு நிலங்களைக் குறைவின்றிப் பெறுமாறு பகைவரை வென்று, அங்கு குழப்பமேதும் ஏற்படாமல் அதைத் தவிர்த்து, திறைப்பொருள் பெறவும் பிரிவதுண்டு.

3.3.1. மேன்மக்கள் என்று கூறும் மரபு, நான்கு நிலத்தவர்களிலும் உண்டு. அதாவது உயர்ந்தோர், மேலோர், மன்னர் பாங்கின் பின்னோர் எனப்படுதல் ஒரு நிலத்தவர்க்கு மட்டுமுரியதன்று என்பதாம். (முல்லை முதலா என முன்வந்த நூற்பாவின் தொடர்ச்சி இது)

3.3.2. மன்னர் பின்னோர் - வணிகர். உள்நாட்டு வெளிநாட்டு வணிகத்தால் பெருங்குடிமக்கள் எனப்பட்டோர். மன்னர்க்குரியன பலவும் இவர்களுக்கும் உண்டு. (சிலம்பு மன்னர் பின்னோர், அரசர் பின்னோர் என வணிகரைக் குறிப்பிடும்)

3.3.3. கல்வியும் கல்வித் தொடர்புடையனவும் அறிவு, தேற்றம், கூர்மை, திறமைகளில் உயர்ந்தவர்களுக்கு உரியனவாகும். அற நூல்கள் கூறுவதிது.

3.3.4. வேந்தனுக்குரியவான செயற்பாடுகளை ஆற்றும் தன்மை வேந்தனைத் தவிர்த்து வணிகர், நிலக்கிழார்கள், ஊர்த்தலைவர்கள், குறுநில மன்னர்கள் போல்வார்க்கும் உரியனவாகும் இடங்களுண்டு.

3.3.5. மக்களிடையே உயர்ந்தோர் எனப்படும் ஒழுக்கச் சிறப்புக்கள் பொருட் செல்வத்தினாலாகும். அதனால் பொருள் வயிற் பிரிவு உயர்ந்தோர் அனைவருக்கும் உண்டு.

3.3.5.1. கடல்வழிப் பிரிவில், மனைவியரை அழைத்துப் போவதில்லை.

**மடலேறுதலும் மகளிரும்**

4. மடலேறுதல் என்பதும் மகளிர்க்கு இல்லை. ஆடவனே மடலேறுவேன் என்று அச்சுறுத்தவும் மடலேறவும் முயல்வான். மகளிர்க்கு அது சிறப்புடையதன்று. எத்திணையிலும் அது பெருந்திணையேயாயினும் ஒரு பெண் மடலேறுதல் என்பதில்லை.

**உடன்போக்கில் நிகழும் கூற்றுவகைகள்**

**நற்றாயின் கூற்று**

5.1. தன்னையும் தலைவனையும் அவனுடன் சென்ற தன்மகளையும் குறித்துப் பேசுதல் தொடங்கி இவ்வாறு முக்காலத்தையும் (நடந்தது, நடப்பது, நடக்கப் போவது) பலவாறு ஆராய்ந்து விளக்கமாகப் பேசி தோழியிடமும், தேடிப் போகும் போது கண்டோரிடமும் கேட்டுப் புலம்புவாள். இது போன்ற பேச்சுக்கள் பல நற்றாய்க்கு உரியனவாகும். ஏழு வகையாக இவை விரியும்.

5.1.1. பெருங்காவலையுடைய பேரூரின்கண்ணே பல சேரிகளிலும் சிலபோது, பாலை நிலமாம் சுரவழியிலும் தாயர் சிலர் தாமே தனித்துத் தேடியும் செல்வர்.

5.1.2. அயற்சேரிக்கண் பிரிந்து சென்றார் என்றாலும் அதுவும் பிரிவின் மேற்றாகும் (பாலைப் பாட்டாகும்).

**தோழியின் கூற்று**

6. தோழி வேறு, தலைவி வேறு அல்லரெனும்படி இருவரும் அத்துணை ஒன்றிப் பழகுபவர்கள். பாடல்களிலும் இது தலைவி பேசியதா, தோழி கூறியதா எனப் பிரித்தறிவது கடினம். அத்துணை ஒன்றித் தோன்றும் தோழி தலைவியிடமும் தலைவனிடமும் கூறுவன தொகுத்துரைக்கப் படுகின்றன. இவை ஆறு வகையாகவும் தொடர்பு படவும் விரியும்.

**பாலை வழியில் காதலரைக் கண்டோர் கூறுவன**

7. உடன்போக்கில் காதலர்கள் பாலை வழியில் தனியே போவதால், வழியிடையே துன்பம் நேரலாம்; நேரமல்லா நேரத்தில் இடையூறு ஏற்படலாம். அச்சந்தரும் இவ்வழியினால் உண்டாகக் கூடிய, ஆபத்துக்களை எச்சரிக்கையாக வழியிடையே அவர்களைக் காண்பவர்கள் எடுத்துக் கூறுவர். இவையே அகப்பாடலில் காணப்படுபவை. இது ஏழு வகையாகவும் தொடர்புபடவும் விரியும்.

**பலவகைப் பிரிவிலும் தலைவன் கூற்று**

8. தலைமகன் உடன்போக்கில் தலைவியுடன், தங்கள் சுற்றத்தாரைப் பிரியும் பிரிவில் பேசுவான். பொருள் தேடவும் கல்விக்காகவும் தொழிலுக்காகவும் அரசர்க்குத் தூது செல்வதற்காகவும் போர் கருதியும் நாட்டைக் காக்கவும் பரத்தையர்க்காகவும் பிரியும் பிரிவுகள் என அனைத்தும் பற்றிய தலைவன் கூற்றுக்கள் இங்கு தொகுத்துரைக்கப் படுகின்றன.

9. ஏனைய தலைவி, பாங்கன் போல்வார்க்கும் இதுபோல் கூற்று நிகழ்த்துதல் உளதாகும்.

9.1. இப்போது பிரியக் கருதுவான், முன்பு பிரிவு தொடர்பாக நடந்தது ஒன்றை நினைத்துப் பார்த்தற்கும் இடமுண்டு. முன்பு பிரிந்ததை நினைக்கும் அடிக்கருத்தும் பாலையாகும்.

9.2. அவ்வாறு முன்பு தலைவி வருந்தியதால் நிகழ்ந்ததொன்றைக் கூறி, தலைவன் பிரியாது தவிர்தலும் பாலைத் திணையே. பிரிய நினைத்தும் பிரியாதிருக்கும் செலவழுங்குதல் (தவிர்தல்) என்பதும் பாலைப் பாடலேயாம்.

9.3. பாலை பொதுத்திணையாதலின் பிற திணைகள் சார்ந்த முதல், கரு, உரிப் பொருட் கூறுகள் கலந்து வரக்கூடிய அளவு கலந்து வரும்.

**உள்ளுறை உவமம்**

10. ஏனைய பொதுவான உவமை தவிர, உள்ளுறை உவமம் எனவும் ஒன்று உண்டு. இவை அவ்வத்திணக்குரிய முதற்பொருளுடன் கூடிய கருப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு, அவ்வத்திணைப்

பாடல்களில் வரும். அதனால் ஓர் அகப்பாடலை இன்ன திணை என உணர்வதற்கு இவை தெளிவுதரும் உறுதுணையாகும்.

10.1. உள்ளுறை கருப் பொருளடிப்படையில் கூறப்படும் பொழுது, அவ்வந் நிலத்திற்குரிய தெய்வத்தைத் தவிர்த்த, பிற கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டே கூறப்படும்.

**உள்ளுறை உவமையின் இலக்கணம்**

10.2. புலவன் உட்கருத்து ஒன்றை உள்ளே வைத்து, வெளிப்படச் சொன்ன உவமை, அவ்வுட் பொருளுடன் ஒத்து முடியும்படி, தான் சொல்வது அமைய வேண்டுமென, அதற்கேற்ற அனைத்தையும் உள்ளுறுத்தி முற்றமுடியப் பாடுவதே உள்ளுறை உவமையாகும்.

10.3. ஏனைய பொதுவான உவமை என்பது, அதனைப் படித்ததும் தானே விளங்கிவிடும் வகையினதாகும்.

**கைக்கிளை இலக்கணம்**

11. கைக்கிளை என்பது வயதுவந்த ஓர் ஆடவனிடம் தோன்றும் காம உணர்வு – ஒரு மனநிலை வெளிப்பாடு. அவள் காமஉணர்வு நிரம்பப் பெறாத அப் பருவத்தைத் தொடுகின்ற நிலையிலுள்ள் இளையவள். அவளிடம் எவ்விதச் சலனமுமின்மையால், இவன் கொண்டது பயனற்ற துன்பமானது. மேலும் தன்னையும் அவளையும் சேர்த்து, நல்லதும் அல்லதுமானவற்றைச் சிறிது மிகைப்படப்பேசுவான். அவள் மறுமொழியாதவிடத்தும் தானே தனக்குள் பேசி இன்புறுவான். இலக்கியத்தில் இது மிக அருகியே காணப்படும்.

**பெருந்திணை இலக்கணம்**

12. உலகில் பெரிதும் காணப்படுவது, அளவான் அமையாது மிகுதிப்படும் காம உணர்வு நிலைகளேயாகும். அளவாய் அமைந்தவையே சிறந்தவை. அவை அருகிக் காணப்படினும், பண்பட்ட கற்றறிந்த குடிமக்களிடம் அன்பின் ஐந்திணை விளங்கித் தோன்றும்.

தலைவன் தலைவியைத் தமர் தர மறுக்கும் நிலையிலும் பிறவாறு இடையூறுகளுற்ற நிலையிலும் மடலேறுவான். பனங்கருக்காற் செய்த குதிரை வடிவான ஒன்றில், தலைவி தோற்றமும் பெயரும் எழுதிய படம் ஒன்றை வைத்துக் கொண்டு, எருக்கம் மாலை முதலியன

அணிந்து, அதன்மேல் ஏறி ஊர்வது, இரத்தம் கசிய உயிர்விடுவதாகும். மடலேறுவேன் என வாயால் அச்சுறுத்துவது அன்பின் ஐந்திணையுள் அடங்கும். அதற்கு அஞ்சிப் பெற்றோரும் உற்றாரும் தலைவியை அவளால் காதலிக்கப் பட்டவனுக்கே மணம் செய்து கொடுப்பர். அல்லாமல் மடலேறிவிடுவதில் முடியுமாயின் அது பெருந்திணைப் பாற்படும். இருவரும் இளமைக் காலமெல்லாம் பிரிந்திருக்க நேர்ந்து, காலங்கடந்து போவது இளமை தீர்திறம். வெளிநாடு போனவன் இளமை கழிந்து மீண்டால், காலமெல்லாம் காமத்தால் நெடுங்காலப் பிரிவினால், தேறுதல் சொல்லித் தெளிவிக்க முடியாத காமத்தால் வருந்துவது அடுத்தது. 'காமம் மிக்க கழிபடர் கிளவி' என்று பறவை விலங்குகளைப் பார்த்துப் பேசுதலும் தனக்குத் தானே பேசிக்கொள்ளுதலுமாகிய நிலை இது.

நான்காவதாக வரும் 'மிக்க காமத்து மிடல்' என்பது, தலைவி ஊடியிருக்கவும், காம மிகுதியால் தனது மிடல் (வலிமை) கொண்டு, வலிதிற் கூடுவது. அன்பின் ஐந்திணை மக்களிடம் அளவானமைந்த காமமேயன்றி இவ்வாறான எல்லை கடந்த சூழல்களும் ஏற்படுவதுண்டு.

13. காமம் சாலாத (நிரம்பாத) இளையவள் தவிர்த்து, அவ்வுணர்வு நிரம்பப் பெற்றவளை ஓர் ஆடவன் காண்கின்றான். 'காட்சி' எனப்படும் அது. 'இவள் யாரோ? பேரழகியாக இருக்கிறாளே? தெய்வ மகளோ? என்றெல்லாம் அவன் மனம் ஆசையால் துள்ளும். 'ஐயம்' எனப்படும் அது. (ஒவ்வொருவருக்கு ஒவ்வொருவரது அழகு பேரழகாகப்பட்டு மனத்தை ஈர்க்கும். கண்டவர் மீதெல்லாம் செல்வதன்று அது) அவளை அவன் உற்றுநோக்கி, அவள் கண்ணிமைப்பதை, கூந்தலில் சூடிய மலர்களில் வண்டு மொய்ப்பதை, கால்கள் நிலத்தில் தோய்வதை எல்லாம் பார்த்து ஆராய்வான். பின்னர் 'இவள் தெய்வமகள் அல்லள்; இம் மண்ணுலக மகளே' எனத் தெளிவான். இவை இவனது தெரிதலும் (ஆராய்தலும்) தேறலும் (தெளிதலும்) ஆகும். அதன் பிறகு இவனது மனக் குறிப்பை, அவள் தன் கண்ணாற் காணவே, இருமனமும் ஒன்றுபடும் நிலை உருவாகும். மனம் ஒன்றுபடுவதற்கு முந்தைய நான்கும் 'கைக்கிளை'யின் பாற்படும்.

## புலனெறி வழக்கம்

### புலவர்கள் கையாண்ட இலக்கிய நெறி

14. திணைப் பாடல்களைப் பாடிய புலவர்கள் கையாண்ட புலவராற்று வழக்கம் புலன் நெறி வழக்கம் எனப்படும். அது உலகியல் வழக்கிலிருந்து பெறப்பட்ட அடிக்கருத்துக்களை உடையது. உலகியல் வழக்கு - உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒத்து வருவது என்றும் நாடக வழக்கு - சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல் என்றும் இளம்பூரணர் கூறுவர். உலகத்தில் உள்ளதில் நல்லதைக் கூறுவது என்றும் உயர்ந்தோர் ஒழுக்கத்தை மற்றவர்க்கு உணர்த்தக் கூறுவது என்றும் உலகியல் வழக்கை நச்சினார்க்கினியர் விளக்குவர். நாடக வழக்கு - அகப்பாடலில் முதல் கரு உரி இவ்விவ்வாறு அமையப் பாட வேண்டுமென்னும் வரையறை என அவர் விளக்குவார்; 'புனைந்துரை வழக்கு' என்றும் சுட்டிச் சொல்வார்.

உலகியல் வழக்கை இலக்கியமாக மாற்றுவதே நாடக வழக்கு ஆகின்றது. முனன்ர் அகப்பாட்டு கலிப்பாவாலும் பரிபாடலாலும் பாடப்பட்டு வந்தது. (நமக்குக் கிடைத்திருக்கும் சங்கப் பாடல்களில் ஆசிரியத்தாலானவையே மிகுதி)

14.1. மக்களை - அவர்களது வாழ்வைப் பாடுவதைக் கருத்தாகக் கொண்ட அகத்துள் நடுவிலுளதாகிய ஐந்திணைப் பாடல்களும், ஒருவரது இயற்பெயரைச் சுட்டிச் சொல்லிப் பாடப்பெறா. ஏணைய கைக்கிளையும் பெருந்திணையும் இயற்பெயர் சுட்டிப் பாடப் பெறாதபோது அகத்துள்ளும் அவ்வாறு இயற்பெயர் வரின் புறத்துள்ளும் அடக்கப்படும் என்ற குறிப்பும் பெறப்படுகிறது. (ஆயன், வெற்பன், ஊரன், சேர்ப்பன் என இவ்வாறான பொதுப் பெயர்களே ஐந்திணைப் பாடல்களில் வரும்)

14.2. இயற்பெயர் புறத்திணைப் பாடல்களில் பொருந்திவருமே அல்லாது அகத்திணையுள் வராது. (அகத்திணையுள் வரும் புறச் செய்தியில் கலந்து வருமென்பதும், இதனாற் கொள்ளப்படும்.)

## அகத்திணை இயல்

### அகத்திணை ஏழு

**947. கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**

**முற்படக் கிளந்த எழுதிணை என்ப.**

கைக்கிளை முதலாகப் பெருந்திணை இறுதியாக ஏழு திணைகள் முன்னதாகப் பகுக்கப்பட்ட அகத்திணைகளாகும்.

கைக்கிளை - சிறு உறவு. காதல் வாழ்வில் ஆடவனின் மனநிலை பற்றிய தொடக்கவுணர்வு. பெருந்திணை - இடையூறுகளால் தடைப்படும்போது மிகுதிப்படுவதும் எல்லைகடந்ததுமான காமவுணர்வு. இடைப்பட்டவை ஐந்தும் அளவான் அமைந்தவை. முற்படக் கிளந்த - முன்னதாக வரையறை செய்யப்பட்டவை.

### அவற்றுள் நிலப்பின்னணியுடைய நான்கு திணைகள்

**948. அவற்றுள்,**

**நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்**

**படுதிரை வையம் பாத்திய பண்பே.**

அவற்றுள், நடுவிலுள்ள முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை என்னும் ஐந்திணைகளுள், அவற்றிற்குப் பொதுவானதாகிய பாலைத்திணை நீங்கலாக ஏனைய நான்கு திணைகளுக்குமாக, இவ் ஒலிக்கும் கடலாற் சூழப்பட்ட உலகம் பகுக்கப்பட்டுள்ளது.

நடுவிலுள்ள ஐந்தனுள், பாலைக்குத் தனி நிலம் இல்லை. அது நீங்கலாக நான்கு திணைகளின் அடிப்படையில் இந்த வையம் பகுக்கப்பட்டுள்ளது. முல்லை - காடு சார்ந்த நிலம். குறிஞ்சி - மலை சார்ந்தது. மருதம் - வயல் சார்ந்தவை. நெய்தல் - கடற்கரைப் பகுதிகள்.

### அகப்பாடல் பொருள்கள் : முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள்

**949. முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே**

**நுவலுங் காலை முறைசிறந் தனவே**

**பாடலுள் பயின்றவை நாடுங் காலை.**

அகத்திணைப் பாட்டுள் வரும் பொருள்கள்

அகப்பாடல்களுள் வரும் பொருள்களை ஆராயுமிடத்து முதற்பொருள்,

கருப்பொருள், உரிப்பொருள் என்ற மூன்று பொருள்கள் வரும். இவை பாடப்படும்போது ஒன்றின் ஒன்று சிறந்தவையாய் அமையும். முதலைவிடக் கரு சிறந்தது; கருவைவிட உரி சிறந்தது. அதாவது உரிப்பொருளின்றிப் பாடல் அமையாது.

இளம்பூரணர் இதனடிப்படையில், ஓர் அகப்பாடலை, இன்னதிணை எனக் கண்டுகொள்ள வழிகாட்டுகிறார். ஓர் அகப்பாடலில் மூன்று பொருளும் வந்திருந்தால், நில அடிப்படையில் திணை பகுக்க வேண்டும்; கருவும் உரியும் வந்திருந்தால் கருப்பொருள் அடிப்படையில் திணை சொல்ல வேண்டும்; உரி மட்டுமே வந்திருந்தால் அதன்படி திணை குறிக்க வேண்டும்.

### முதற்பொருள் : நிலமும் பொழுதும்

**950. முதல்எனப் படுவது நிலம்பொழுது இரண்டின்**
**இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே.**

முதற்பொருள்

முதற்பொருள் எனப்படுவது; பாட்டுள் வரும் நிலமும் பொழுதுமாகிய இரண்டுமாகும். இலக்கிய இயல்பை அறிந்தோர் இவ்வாறு கூறுவர்.

முதற்பொருள் : நிலமும் பொழுதும். குறிஞ்சி நிலமும் அதற்குச் சிறந்த பொழுதும் சேர்த்தே பாடப்படும். இவ்வாறு பிறவும் அமையும். பொழுது - சிறுபொழுது, பெரும் பொழுது என இரண்டு. சிறுபொழுது ஆறு : பகல் - காலை, நண்பகல், எற்பாடு (சாயுங்காலம்) : இரவு : மாலை (முன்பு முன்னிரவை மணி 6-10 மாலை என்றனர்) யாமம் (நள்ளிரவு): வைகறை. பெரும்பொழுதும் (பருவம்) ஆறு : கார், கூதிர் (மழைக்காலம்): முன்பனி, பின்பனி (பனிக்காலம்); இளவேனில் (வசந்தம்) முது வேனில் (கோடைக்காலம்).

### அவற்றுள் நிலமும் அந்நிலத் தெய்வமும்

**951. மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் பெறுமே.**

மாயோன் (கருநிறமுடைய திருமால்) பொருந்தியிருக்கும் காடு நிறை நிலமும் சேயோன் (சிவந்த நிறமுடைய முருகன்) பொருந்தியிருக்கும் மேகங்கள் சூழ்ந்த மலைசூழ் நிலமும் வேந்தன் எனப்படும் இந்திரன் பொருந்தியிருக்கும் இனிய நீர்நிலைகள் நிறைந்த நிலமும் வருணன் பொருந்தியிருக்கும் கடல் சார்ந்த பெருமணல் வெளியான நிலமும் ஆகிய இவை முறையே முன்னோர் சொன்ன முறைப்படி, முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்று அழைக்கப்படும்.

மாயோன் - கருநிறமுடையவன், திருமால். சேயோன் - செந்நிறமுடையவன்; முருகன். சேயோனே சிவன் எனவும் குறிக்கப் பெற்றனன். சிலப்பதிகார வேட்டுவ வரியால் இதை நிறுவலாம். வேந்தன் - இந்திரன. செல்வத் தலைவன். வருணன் - ஒளி வண்ணமுடைய தெய்வம். மழைத் தெய்வம். தீம்புனல் - இனிய நீர்நிலைகள். பெருமணல் - கடற்கரை நிலங்கள். உலகம் என்றது இவை ஒவ்வொன்றும் தனித்தன்மையுடையன என்பது கருதி. சொல்லிய முறை - முன்னோர் இந்நிலங்களுக்கு இவ்வாறு பெயரிட்ட முறை. அவர்கள் சொல்லிய முறையாலேயே சொல்ல வேண்டும் என்பது கருத்து.

## திணைகளுக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும்
## முல்லைக்கும் குறிஞ்சிக்கும்

**952. காரும் மாலையும் முல்லை குறிஞ்சி**
**கூதிர் யாமம் என்மனார் புலவர்.**

பொழுது

முல்லை நிலத்திற்குக் கார்காலமும் மாலைப் பொழுதும் சிறந்தவை. குறிஞ்சிக்குக் கூதிர் காலமும் நள்ளிரவும் சிறந்தவை.

முல்லை நிலத்திற்குக் கார்காலமும் மாலைச்சிறு பொழுதும் சிறப்புடையன. கார்காலம் - ஆவணி, புரட்டாசி, மழைபெய்யும் பருவம். மாலை - முன்னிரவு. இதில் சூரியன் மறையும் நேரமும் கலந்து பாடப்படுவதைப் புலவர்களால் தவிர்க்க இயலவில்லை. குறிஞ்சிக்கு மழைக்காலத்திற்கு அடுத்த கூதிர்காலம். இன்று 'கூத காலம்' என்று மருவியது. மழையின் தொடர்ச்சியும் குளிர்ச்சியும் மிகுந்த காலம். யாமம் - நள்ளிரவு.

**953. பனிஎதிர் பருவமும் உரித்தென மொழிப**

குறிஞ்சிக்கு முன்பனிக்காலமும் பொருந்துவதாகும்.

பனி எதிர் பருவம் - முன்பனிக்காலம். இதில் இரவின் முன்னேரத்தில் பனி பெய்யும். குறிஞ்சிக்கு நான்கு மாதங்கள். கூதிர் - ஐப்பசி, கார்த்திகை. முன்பனி - மார்கழி, தை.

### மருதம் நெய்தலுக்குச் சிறுபொழுதுகள்

**954. வைகறை விடியல் மருதம்; எற்பாடு**
**நெய்த லாதல் மெய்பெறத் தோன்றும்.**

மருத நிலப் பாடல்களுக்கு வைகறை, விடியல் ஆகிய இரு சிறுபொழுதுகளே சிறப்புடையவை. நெய்தற் பாடல்களில் எற்பாடு எனப்படும் சாயுங்காலம் சிறப்பாக இடம்பெறும். பெரும்பொழுது வருணனை, இத்திணைப் பாடல்களில் பெரிதும் காணப்பெறா.

வைகறை - இரவின் பிற்கூறு. விடிவதற்கு முற்பட்ட நேரம். விடியல் - காலை. மருதப்பாடல்களில் இச்சிறுபொழுதுகளே பெரிதும் இடம் பெறும். பெரும்பொழுது பாடல்களில் வராததால் தொல்லாசான் விட்டுவிட்டார். 'பாடலுட் பயின்றவை நாடுங்காலை' என இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் எழுதியவர் அவர். நெய்தலுக்கு எற்பாடு. எல் + பாடு = சூரியன் மறையும் நேரம். இன்று அதை மாலை என்று சொல்கிறோம். முன்பே மாலை என்பதில் சாயுங்காலத்தையும் சேர்த்துப் புனையும் பாங்கு வந்துவிட்டது. எனினும் எற்பாடு, மாலை தனித்தனிச் சிறுபொழுதுகளே.

### பாலைத்திணைக்குப் பருவமும் பொழுதும்

**955. நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு**
**முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே.**

பொதுத்திணை எனப்படும் பாலைக்கு. இளவேனில் முதுவேனிலாகிய வேனிற் பருவத்துடன் நண்பகலும் கூடியமைந்த புனைவே சுரவழியாகும். முதுவேனிலும் நண்பகலும் சேர்ந்து புனையப்படும்.

நடுவு நிலைத்திணை - பொதுத்திணை. பிரிவு பற்றியது பாலை.

பிரிவு நான்கு நிலத்திற்கும் பொது. பிரிவைப் பாடும் பொழுது முதுவேனிலாகிய கோடை வெப்பத்தில் நண்பகலில் பிரிவதாகவே பாடுவர். அதுவே பிரிவு அவலத்தை மிகுவிக்கும். இவ்வாறு பின்னணி வைத்துப் பாடுவதே நாடக வழக்கு. இனிய சோலைகள் சூழ் பகுதியில் பிரிந்ததாகப் பாடினால், அதனால் பெறவேண்டிய அவலச் சுவை பிறவாது. வேனில் - இளவேனில் (சித்திரை, வைகாசி) முதுவேனில் (ஆனி, ஆடி). முடிவு நிலை மருங்கின் முன்னுதல் - இப்பெரும் பொழுதையும் சிறுபொழுதையும் அவற்றின் உச்சத்தைத் தொடுமாறு பொருந்தும்படி சேர்த்துப் புனைவது. நெறி - சுரவழி. அதுவே பாலை நிலம்.

**956. பின்பனிதானும் உரித்தென மொழிப**

இதற்குப் பின்பனிப் பருவமும் உரியதெனச் சொல்வர்.

பின்பனி - இரவின் பின் பகுதியில் பனி பெய்யும். மாசி, பங்குனி. பாலையில் கடல்வழிப் பிரிவுக்கு இது பெரிதும் பொருந்துவதாகலாம்.

**தரைவழி, கடல்வழிப் பிரிவுகளுக்குப் பின்பனிப் பருவம் உரியது**

**957. இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றினும்**
**உரிய தாகும் என்மனார் புலவர்.**

காலிற்பிரிவும் (தரைவழி) கலத்திற் பிரிவும் (மரக்கலம்) நிலைபெறுமாறு, பாடப்படினும் அவற்றுக்குப் பின்பனிப் பருவம் உரியதாகும். எனவே வேனிலிற்பிரிவு தரைவழிப் பிரிவுக்கே உரியதென்பது பெறப்படும்.

இருவகைப் பிரிவு - காலிற் பிரிவு (தரைவழி) கலத்திற்பிரிவு (கடல்வழி). நிலைபெறத் தோன்றுதல் - இது இன்னவழிப் பிரிவு எனத் தெளிவாகத் தோன்றும். பின்பனிப் பருவம் இவ் இருவகைப் பிரிவுக்கும் பொருந்தும். வேனில் எனும் கோடைக்காலப் பிரிவு காலிற் பிரிவுக்கே உரியது. கால் - சக்கரம், தேர், காலால் நடத்தல் உட்படத் தரைவழிப் பிரிவு.

**நிலம் ஒன்றினொன்று மயங்காது**

**958. திணைமயக் குறுதலும் கடிநிலை இலவே**
**நிலன் ஒருங்கு மயங்குதல் இன்றென மொழிப**
**புலன் நன்கு உணர்ந்த புலமை யோரே.**

### திணை மயக்கம்

புலன் என்னும் இலக்கிய மரபை நன்கு அறிந்த புலமையோர், மேலே கூறிய திணைப் பொருள்கள் மயங்கி வருதலும் நீக்கப்படாது என்றும் அவற்றுள் நிலம் மட்டும் ஒரு பாடலுக்குள் மயங்குதல் இல்லையென்றும் கூறுவார்கள்.

முன் குறிப்பிட்ட முதல் கரு உரி எனப்பட்ட பொருள்கள் அடங்கியது திணைப்பாட்டு, இவை மயங்கி வருதல் தவிர்க்கவொண்ணாது. உலகியல் நடைமுறையில் எல்லா நிலத்தும் எனைத்து ஒழுக்கமும் நிலவும். ஆயினும் இலக்கியப் படைப்பு என வரும்போது, நிலம் மட்டும் ஒரு பாடலில் ஒன்றே வரும். இரு நிலங்கள் மயங்கி வரா. புலன் நன்கு உணர்தல் - இலக்கியப் புலனெறி வழக்கை - மரபுவழி வருவனவற்றை நன்கு அறிதல். மயங்குதலும் என்றதால் - ஏனையவும் மயங்காமையே மிகுதி. திணைப்பாடல்கள் நிலம் சார்ந்து தோன்றியவை என்பதை இது உறுதிப்படுத்துகிறது.

### உரிப்பொருள் என விதந்து ஓதாத கைக்கிளையும் பெருந்திணையும் ஏனைய நான்கிலும் மயங்கிவருதல்

**959. உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே.**

உரிப்பொருள் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவன ஐந்து. அடுத்த நூற்பாவில் அது வருகிறது. கைக்கிளை, பெருந்திணை என்பன அவற்றுள் கூறப்படவில்லை. அவ்வாறு உரிப்பொருள் என ஓதப்படாதனவும், ஏனைய திணைகளில் மயங்கிவரும். அதாவது இவ் அகன் ஐந்திணைக்குள்ளேயே, கைக்கிளையும் பெருந்திணையும் இடம்பெறும்.

சங்கப் பாடல்களில் குறிஞ்சியில் கைக்கிளைக் காதலும் நெய்தலில் பெருந்திணைக் காமமும் கலந்துவரக் காணலாம்.

### உரிப்பொருள் ஐந்து

**960. புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்**
**ஊடல் இவற்றின் நிமித்தம் என்றுஇவை**
**தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே.**

### உரிப்பொருள்

அகப்பாடல்களை ஆராயுமிடத்து திணைப் பாட்டுக்கு உரிமையுடையதாய்

வரும் அடிக்கருத்துக்கள் ஐந்து; புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல். இவற்றின் நிமித்தம் என்பன இவற்றை நேரே பாடாமல் இவற்றுடன் தொடர்புடையனவற்றைப் பாடுவதும் அவ்வவற்றில் அடங்கும் என்பதாகும்.

ஐந்து திணைக்கும் ஐந்து உரிப்பொருள்கள். அவையே பாடலின் அடிக்கருத்துக்கள். அவை இல்லாத அகப்பாடல் இல்லை. அவை மாந்தர்தம் காதலுறவு பற்றியன. புணர்தல் (உள்ளத்தாலும் உடலாலும் கூடுதல்) (குறிஞ்சி), பிரிதல் (பாலை). இவை இரண்டும் கூடலும் பிரிவும் பற்றியன. ஏனைய மூன்றும் பிரிதலின் தொடர்புடையனவே. இருத்தல் (முல்லை, பிரிந்த தலைவன் வரும்வரை ஆற்றியிருத்தல்). இரங்கல் - நெய்தல், ஆற்றாது வருந்துதல். ஊடல் - மருதம், பிரிந்தவன் வந்தபின் தலைவி ஊடுதல். நிமித்தம் - இவற்றை நேரே பாடுவதைவிட, புணர்தல் முதலியவற்றுக்கு நிமித்தமான - சூழல்களைப் பாடுவதும் அவ்வத்திணைப்பாற்படும். அவ்வந் நிலத்திற்கு அவ்வவ் உரிப்பொருள் உரிமையுடையன; சிறுபான்மை எல்லாப் பொருளும் எல்லாத்திணைக்கும் உரித்தாகும் என்பார் இளம்பூரணர்.

**உடன்போக்கும் பிரியநேர்ந்து வருந்துதலும் பரிவின் பாற்படும்**

**961. கொண்டுதலைக் கழிதலும் பிரிந்தஅவண் இரங்கலும்**
**உண்டென மொழிப ஓரிடத் தான.**

தலைவியை உடனழைத்துப் போதல் உடன்போக்கு, இருவரும் சேர்ந்து சென்றாலும் பெற்றோரை, வீட்டைப் பிரிந்து போவதால் அதுவும் பிரிவின் பாற்படும்; இடைவழியில் தலைவியின் சுற்றத்தார் அவளைக் கைப்பற்றிச் சென்றுவிட வருந்துவனவும் பிரிவின் பாற்படும்.

கொண்டுதலைக் கழிதல் - தலைவியைப் பெற்றோர் மணம் செய்துதர மறுத்தபோது, தலைவன் அவளை அழைத்துக் கொண்டு போதல் உடன் போக்கு. அங்ஙனம் பிரிந்த போது, தாயர் பிரிவால் வருந்துதலும், பிரிந்த அவர்கள் இடைச்சுரத்து வருந்துதலும் இவை போல்வனவும் பாலைத் திணைக்கு உரியனவே. உடன்போக்கில் இருவரும் ஒருங்கிருத்தலின் பாலையாகுமா என்றால் அங்கு பிரிவுணர்ச்சியே மேலோங்கி நிற்குமாதலால் அதுவும் பாலையே என்பர்.

### காதலர் முதன் முதல் எதிர்ப்படுதல்

**962. கலந்த பொழுதும் காட்சியும் அன்ன.**

அதுபோல, முதன் முதல் காதலர் சந்தித்தலும், ஒருவரை ஒருவர் நோக்கி மனங்கலத்தலும் கைக்கிளையோடு சேரும் (இவை பெரிதும் குறிஞ்சித்திணைப் பாற்படும்).

கலந்த பொழுது – முதன் முதல் எதிர்ப்படுதல். காட்சி – இருவரும் ஒருவரை ஒருவர் கண்டு மனம் ஒன்றுபடுதல். இவை இரண்டும் கைக்கிளைக்கு உரியன. எதிர் பாராது எதிர்ப்படுதல்; இருவரும் மாறி இதயம் புகுதல். இவை ஐந்திணைக் காதலுக்கு முன் நிகழ்வன.

### முதற்பொருள் நிலமும் பொழுதும்

**963. முதல்எனப் படுவது ஆயிரு வகைத்தே.**

முதற்பொருள் என்பது இவ்வாறு நிலமும் அதனுடன் இயைந்த பொழுதும் என இருவகைப்படும்.

நிலச் சூழலுடன் ஒன்றிய உரிப்பொருளும் உடன் கூறப்பட்டுளது. குறிஞ்சி என்பது நிலத்தையும் சுட்டும்; புணர்தலாகிய உரியையும் குறிக்கும். எனினும் நிலமும் பொழுதும் அடிப்படையாகும்.

### அகப்பாடலில் இடம் பெறும் கருப்பொருள்கள்

**964. தெய்வம் உணாவே மா மரம் புள்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருஎன மொழிப.**

ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய தெய்வம் முன்னரே கூறப்பட்டது (951) அதன் சிறப்பு நோக்கி ஆகும். அத் தெய்வத்துடன் அந்த அந்த நிலத்தில் கிடைக்கும் உணவு வகை, விலங்குகள், மரவகைகள், பறவைகள், பறை முதலாம் தோற்கருவிகள், நிலத்துக்கேற்ற தொழில் வகைகள், யாழ் முதலாம் இசைக் கருவிகள் இவையும் இவை போல்வன பிறவும் ஒரு நிலத்திற்குரிய கருப் பொருள்கள் ஆகும். மரம் என்பதால் பூக்களும், பிற செடிகொடிகளும் அடங்கும். மா – விலங்கு. செய்தி – தொழில். பகுதியொடு தொகை – அவற்றைச் சார்ந்த அனைத்தும் அடங்கும். அவ்வகை பிறவும் என்பதால் ஊர், நீர்நிலை என கருப்பொருள்களை மேலும் பலவாக விரிப்பர்.

ஒவ்வொரு நில இயற்கைப் பின்னணி இது. அகப்பாடலில் உரிப்பொருளுக்கான பின்புல இயைபுப் பின்னணி - நாடகத்திரைச் சீலை அனையது.

**பூவும், புள்ளும் பொது**

**௨௬௫. எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்**
**அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்**
**வந்த நிலத்தின் பயத்த வாகும்.**

(முன் நூற்பாவில் மரம் எனப்பட்டது. இங்கு பூ எனப்படுகிறது இவ்வாறு 'உடம்பொடு புணர்த்துச்' சொல்லாமற் சொல்லுவது தொல்காப்பியர் உத்திகளில் ஒன்று) எந்த நிலத்திற்குரிய பூவாயினும் பறவையாயினும், அந்தந்த நிலத்தொடும் பொழுதொடும் வராமல், வேற்று நிலங்களில் காணப்படுவதாகப் பாடல்களில் வருமாயினும், அவை வந்துள்ள அந்தந்த நிலத்திற்குரியனவாகவே கருதப்படும். (இது திணைமயக்கம் ஆகாது). (பெரிதும் அவ்வந்நிலத்திற்குரியனவே வரும் என்பது 'வாராவாயினும்' என்ற உம்மையால் பெறப்படும்.)

பூக்களும் பறவைகளும் பருவ மாறுதல்களுக்கேற்ப இடம் மாறக் கூடியனவே. இவை வேறு நிலங்களிலும் உள்ளனவாகப் பாடப்படினும், அவ்வந் நிலத்தனவாகவே கொள்ளலாம். திணைமயக்கம் அன்று என்பது கருத்து.

**அகப்பாடலில் இடம்பெறும் மாந்தர்கள் நிலமக்கட் பெயர்**

**௨௬௬. பெயரும் வினையும்என்று ஆஇரு வகைய**
**திணைதொறும் மரீஇய திணைநிலைப் பெயரே.**

ஒவ்வொரு திணைப்பாடலிலும் அவ்வத்திணைக் குரிய நிலம் சார்ந்த மக்கட் பெயர்களே இடம்பெறும். அவை நிலத்தால் வரும் பெயரும் அவ்வந்நிலத்துத் தொழிலால் வரும் பெயரும் என இருவகையின.

அகத்திணைப் பாடல்களில் குறிஞ்சி முல்லை முதலான திணை அடிப்படைப் பெயர்களே மாந்தர் பெயர்களாக இடம்பெறும். அவை நிலத்தால் வருபெயரும் (குறவன்) தொழிலால வரும் பெயரும் (வேட்டுவன்) என்பன போல வரும். பெயர் - நிலத்ததல் வருபெயர். வினை - தொழிலால் வருபெயர். மரீஇய - பொருந்திய.

## நிலமக்கட் பெயரும் தலைமக்கட் பெயரும்

**967. ஆயர், வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்**
**ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே.**

அகப்பாடலில் வரும் திணை மாந்தர் பெயர் முல்லை நில ஆயர் என ஆ காத்தல் தொழிலால் வருபெயரும் குறிஞ்சி நில வேட்டுவர் என வேட்டையாடுதலால் வரும் பெயரும் ஆண்பாற் பெயர்களாகும். அந்நிலங்களுக்குரிய தலைமக்களும் உள்.

**ஆயர் – 'ஆ' காக்கும் தொழிலால் வருபெயர். முல்லை நிலம். வேட்டுவர் – வேட்டையாடும் தொழிலால் வருபெயர், குறிஞ்சி நிலம். ஆடூஉ – ஆண்பாற்பெயர். ஆவயின் வரூஉம் கிழவர் – அவ்வந் நிலத்திற்குரியராய தலைமக்கள்.**

அகத்திணைப் பாடல்களில் மாந்தர்தம் இயற்பெயர்கள் இடம்பெறுவதில்லை.

பாடல்களுக்குரிய கூற்று நிகழ்த்தும் மாந்தர்கள் வேறு; பாடல்களில் கருப்பொருளாக இடம்பெறும் மாந்தர்கள் வேறு.

உழவர், உமணர், இடையர், குறவர், கானவர், கோவலர், எயினர், இவர்களின் பொண்பாற் பெயர்கள். இவர்கள் கருப்பொருளாக இடம் பெறுபவர்கள்.

கூற்று நிகழ்த்தும் மாந்தர் வெற்பன், சிலம்பன், கானக நாடன், சேர்ப்பன், துறைவன் என்றாற் போல்வன ஒருவகை. வேட்டுவன், ஆயன், கொண்கன், பரதவன் என்றாற் போல்வனவும் உள.

நாட்டை ஆள்பவர், மேன்மக்கள் போலும் மாந்தரைக் குறிப்பனவும் உள. அவை வெற்பணி நாடன், வளமலி ஊரன், மகிழ்நன் என்றாற் போல்வன.

பாலைத்திணைப் பாடல்களில் சுரனிறந்தோர், காடிறந்தோர், மீளி, விடலை, கலுழ்வோள் என நான்கு நிலத்திற்கும் பொதுவான பெயர்களாக வரும்.

பல பாடல்களில் இப்பெயர்களை வைத்தே, திணை அறியப்படுதலுமுண்டு.

எடுத்துக் காட்டிற்கு இளம்பூரணர் தரும் பட்டியல் பயன்படும். அவர் திணை தொறும் வருவன குலப்பெயரும் (நிலம் பற்றியது) தொழிற்பெயரும் கிழவர் பெயரும் (தலைமக்கள்) என்பார்.

| | மக்கட் பெயர் | தலைமக்கள் பெயர் |
|---|---|---|
| குறிஞ்சி | குறவன், குறத்தி | மலை நாடன், வெற்பன் |
| பாலை | எயினர், எயிற்றியர் | மீளி, விடலை |
| மருதம் | உழவர், உழத்தியர் | ஊரன், மகிழ்நன் |
| நெய்தல் | நுளையர், நுளைச்சியர் | சேர்ப்பன், துறைவன் |

இவ்வாறு இயற்பெயர் சுட்டாது, ஏதேனும் ஒரு வகையில் பொதுப்பெயர் சுட்டுவது அடிப்பட்டதோர் இலக்கிய மரபை விளக்குகிறது.

**பிற நிலங்களுக்குரிய திணைப்பெயர்**

**968. ஏனோர் மருங்கினும் எண்ணுங் காலை**
**ஆனா வகைய திணைநிலைப் பெயரே.**

இவ்வாறு ஆராயுமிடத்து ஏனைய நிலத்தவர்களுக்கும் திணைநிலம் சார்ந்த பெயர்கள் குறைவின்றி வரும்.

**அடியோரும், தொழில் செய்வோரும்**

**969. அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்**
**கடிவரை இல, புறத்து என்மனார் புலவர்.**

அடியோர் (பிறர் ஏவியதைச் செய்வோர்), தாமாக ஒரு தொழில் செய்வோர் (கை வினைஞர்) ஆகிய இருவரிடத்தும் உரிப்பொருட் புறத்தவாகிய கைக்கிளை, பெருந்திணைகள் நிகழ்வதாகப் பாடுவன நீக்கப்படா.

அடியோர் - குற்றேவல் புரிவோர். வினைவலர் - கைவினைஞர், தமக்கென ஒரு தொழில் செய்வோர். புறத்து - அன்பின் ஐந்திணைப் புறத்தவாகிய ஒழுக்கம். கைக்கிளை, பெருந்திணை என்பர். ஈண்டுக் கைக்கிளை என்பது அவள் ஒவ்வாதவிடத்தும் இவன் விரும்பும் மனநிலை.

**நிலமக்களுள் தலைமக்கள்**

**970. ஏவல் மரபின் ஏனோரும் உரியர்**
**ஆகிய நிலைமை அவரும் அன்னர்.**

பிறரை ஏவி வாழும் தலைமக்கள், நிலமக்கள் போல்வாரும், அகத்திணைப் புறத்தவாகிய ஒழுக்கங்களுக்கு ஆட்படக் கூடியவர்களாகும் போது அவ்வாறு கைக்கிளை, பெருந்திணைகளுக்கு உரியராவர்.

ஏவல் மரபின் ஏனோர் - பிறரை ஏவி வாழும் தலைமக்களும் நிலமக்களும். அந்நிலைமைகளை அவர்கள் அடையும் போது, கைக்கிளை, பெருந்திணைக்கு உரியவராவர்.

### தலைமையான பிரிவு வகைகள்

**971. ஓதல் பகையே தூதுஇவை பிரிவே**

தலைவன் ஓதுதற்கும் (கற்பதற்கும்), பகைவரொடு போர் செய்தற்கும் மன்னர்களிடையே தூதுவராகச் செல்லுதற்கும் தன் துணையைப் பிரிவான்.

பிரிவு வகைகள்: ஓதற்பிரிவு - கல்வி. அன்று வாய்மொழியால் ஓதி செவியாற் கேட்டுப் படிப்பதே கல்வி. ஏடுகள் மிகக் குறைவு. பகை - போர் கருதிய பிரிவு. தூது - அரசர்களிடையே தூது செல்லுதல்.

### உயர்ந்தோர்க்கு உரிய பிரிவுகள்

**972. அவற்றுள்,**

**ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன.**

கற்பதற்கும் தூதுரைத்தற்கும் பிரிவது சமுதாய நிலையில் உயர்ந்தவர்களுக்கு உரியதாகும். கல்வி, கேள்வி, பண்பு, திறமைகளில் சிறந்தோர்க்கு என்பது பொருள்.

உயர்ந்தோர் - மன்பதையில் முயற்சியுடைய உயர்ந்தோர். கல்வி கேள்வி பண்புகளிற் சிறந்தோர்; பிறப்பால் உயர்ந்தோர் என்பதன்று.

### பகைமேற் செல்லும் பிரிவு

**973. தானே சேறலும் தன்னொடு சிவணிய**

**ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே.**

வேந்தன் தானே படையெடுத்துப் போதலும் உண்டு. அவனொடு பொருந்திய தளபதிகள் போல்வார் போதலும் உண்டு. இரண்டுமே வேந்தன் மேற்றாய்ப் பகைவயிற் பிரிவாகவே கருதப்படும். சிவணிய - அணுக்கமாய்ப் பொருந்திய.

### பகைவயிற் பிரிவிற்கான காரணங்கள்

**974. மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய**

**முல்லை முதலாச் சொல்லிய முறையால்**

**பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்**

**இழைத்த ஒண்பொருள் முற்றவும் பிரிவே.**

மேவிய சிறப்பின் ஏனோர் – மிக்க சிறப்பினையுடையராய் போரில் உயிர் நீத்தவர்கள். படிமைய – அவர்களுக்குப் படிமம் சமைக்கவும்.

முல்லை முதலாச் சொல்லிய முறையால் – முல்லை முதலான நான்கு நிலத்தை வென்று, பிழைத்தது பிழையாதாகல் வேண்டியும் – இந்நிலங்களுள் குழப்பம் நேர்ந்துழி அதைத் தவிர்த்தற்காகவும். இழைத்த ஒண்பொருள் முடியவும் – பகைவரை வென்று திறைப் பொருள் பெறவும் தலைவன் பிரிவதுண்டு. இவை போர்வயிற் பிரிவிற்கான காரணங்கள்.

காலப் பழமையால் பொருள்தடுமாறும் நூற்பாக்களில் ஒன்று இது.

**நான்கு நிலத்தவரிலும் மேன் மக்கள் உளராவர்**

**975. மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே.**

மேன்மக்கள் என்று கூறும் மரபு. நான்கு நிலத்தவர்களிலும் உண்டு. அதாவது உயர்ந்தோர், மேலோர் , மன்னர் பாங்கின் பின்னோர் எனப்படுதல் ஒரு நிலத்தவர்க்கு மட்டுமுரியதன்று என்பதாம்.

மேலோர் – மேன்மக்கள் என்னும் தகுதிப்பாடு. நால்வர்க்கும் – முன் சுட்டிய முல்லை முதலான நான்கு நிலத்தவர்க்கும். எந்த நிலத்திலும் வினை செய்வோரும் உண்டு; படித்தோரும் உண்டு; வழிகாட்ட வல்ல சான்றோரும் உண்டு என்பது கருத்து.

**அரசகுடிகளை அடுத்த பெருங்குடிமக்கள் வணிகர் முதலானோர், அரச ஆட்சி வினைகளை ஆற்றுதற்குரியர்**

**976. மன்னர் பாங்கின் பின்னோர் ஆகுப.**

மன்னர் பின்னோர் – வணிகர், உள்நாட்டு வெளிநாட்டு வணிகத்தால் பெருங்குடி மக்கள் எனப்பட்டோர். மன்னர்க்குரியன பலவும் இவர்களுக்கும் உண்டு. (சிலம்பு மன்னர் பின்னோர், அரசர் பின்னோர் என வணிகரைக் குறிப்பிடும்).

பின்னோர் – மன்னருக்கு அடுத்த நிலையினர். வணிகர் – வெளிநாட்டு உள்நாட்டு வணிகத்தால் மன்னரனைய பெருஞ்செல்வர். அவர்களுக்கும் அரசரைப் போன்ற சிறப்பனைத்தும் உண்டு. சிலப்பதிகாரம் இதற்குச் சான்று.

### மன்பதையில் அறிவு மேம்பாடுடையோரே கல்வி முதலியவற்றுக்காகப் பிரிவர்

**977. உயர்ந்தோர்க்கு உரிய ஓத்தி னான.**

கல்வியும் கல்வித் தொடர்புடையனவும் அறிவு, தோற்றம், கூர்மை, திறமைகளில் உயர்ந்தவர்களுக்கு உரியனவாகும்.

நூல்களின்படி, உயர்ந்த முயற்சியுடையோர்க்கு உயர்ந்த செயற்பாடுகள் யாவும் உரிமையுடையன. ஓத்து - ஓதி உணரப்படும் நூல்கள். தங்களைத் தகுதிப் படுத்திக் கொள்ளும் எவருக்கும் உயர்ந்தன எல்லாம் உரியனவாகும். ஓத்தினான - ஓத்தின் படியான. பட்டாங்கிலுள்ளபடி என்ற ஔவை வாக்கும் காண்க.

### வேந்து எனப்படும் அரசாளும் தன்மைகள் வேந்தனைத் தவிர்த்து, உயர்ந்தோர் பிறராலும் ஆற்றுதற்குரியன

**978. வேந்துவினை இயற்கை வேந்தனின் ஒரீஇய**
**ஏனோர் மருங்கினும் எய்துஇடன் உடைத்தே.**

வேந்தனுக்குரியவான செயற்பாடுகளை ஆற்றும் திறமை வேந்தனைத் தவிர்த்து, நிலக்கிழார்கள், ஊர்த் தலைவர்கள், குறுநில மன்னர்கள் போல்வார்க்கும் உரியனவாகும் இடங்களுமுண்டு.

வேந்தனின் ஆள்வினை முதலான அரிய இயல்புகள் யாவும் வேந்தற்கு மட்டுமே உரிமை உடையன அல்ல. வேந்தரல்லாத ஏனைய எவருக்கும் அச்சிறப்புக்களை அடையும் வாய்ப்பிடங்கள் உண்டு. அவரவர் முயற்சியைப் பொறுத்தன அவை.

### உலக மன்பதையில் உயர்ந்தோர் யாவரும் பொருள் தேடப் பிரிதற்கு உரியவரே

**979. பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே**
**உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத் தான.**

சமுதாயத்தில் உயர்ந்தோர்தம் ஒழுக்கச் சிறப்புக்கள், பொருட் செல்வத்தினாலாகும். அதனால் பொருள் வயிற் பிரிவு உயர்ந்தோர் அனைவருக்கும் உண்டு. காலிற் பிரிவும் கடலிற் பிரிவும் உளவாகும்.

உயர்ந்த குடிமக்கள் பொருட் சிறப்பாலேயே, உயர்ந்த ஒழுக்கங்களுடன் பிறர்க்குக் காட்டாக வாழ முடியும். எனவே அவ்வுயர்ந்தோர் பொருள் தேடிப் பிரிதலும் உண்டு. வணிகர், அவர் இவரென்பதில்லை. எவர் வேண்டுமானாலும் ஒழுக்கமும் நலவாழ்வும் சமுதாய மேம்பாடும் கருதிப் பொருள் வயிற் பிரியலாம். சமுதாயத்திலுள்ள இந்நிலைகளே, சங்கப் பாடல்களில் புனையப் பட்டுள்ளன.

இவை தொடர்பாக, வருணாசிரமத்தை நினைத்து எழுதப்பட்ட இடைக்கால உரைகள் யாவும் காலக்கோட்பட்டவை; சங்கப் பாடல்களில் சான்றில்லை.

**மகளிரை அழைத்துக்கொண்டு கடல் கடந்து செல்வதில்லை**

**980. முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை.**

கடல்வழிப் பிரிவில், மனைவியரை அழைத்துப் போவதில்லை.

**மகளிர் மடலேறுவதும் இல்லை**

**981. எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்**
**பொற்புடை நெறிமை இன்மை யான.**

மடலேறுதல் என்பதும் மகளிர்க்கு இல்லை. ஆடவனே மடலேறுவேன் என்று அச்சுறுத்தவும் மடலேறவும் முயல்வான். மகளிர்க்கு அது சிறப்புடையதன்று என்பதால், எத்திணையிலும் அது பெருந்திணையேயாயினும் ஒரு பெண் மடலேறுதல் என்பதில்லை.

மடலேறுதல் - கைகூடாத காதலால், காம மிகுதியில் ஆடவர் மேற்கொள்வது. அது புகழுடைய செயலன்றாதலால், மகளிர் மடலேறுதல் இல்லை.

**உடன்போக்கில் நற்றாய் (பெற்ற தாய்) கூற்று**

**982. தன்னும் அவனும் அவளும் சுட்டி**
**மன்னும் நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்**
**நன்மை தீமை அச்சம் சார்தல்என்று**
**அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ**
**முன்னிய காலம் மூன்றுடன் விளக்கித்**
**தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும்**

**போகிய திறத்து நற்றாய் புலம்பலும்**
**ஆகிய கிளவியும் அவ்வழி உரிய.**

1. தன்னையும் தலைவனையும் அவனுடன் சென்ற தன் மகளையும் குறித்துப் பேசுதல்; 2. தொன்று தொட்டுப் பழக்கமான நிமித்தம் (சகுனம்) 3.நற்சொல் கேட்டல் (அசரீரி) 4. தெய்வக் குறி பார்த்தல் (கோடாங்கி, குறத்தி தெய்வமேறிக் கூறுதல்) என்பனவற்றால் இனி விளைவனவற்றை ஆராய்தல்; 5.நன்மைகளையும் தீமைகளையும் அச்சத்தையும் எப்பொழுது மீள்வர் என்பதையும் அவற்றொடு பிறவற்றையும் சேர்த்து, 'என்ன நேருமோ' என்ற கவலையில் தாய் இவ்வாறு ஆராய்வாள். 6. இவ்வாறு முக்காலத்தையும் (நடந்தது, நடப்பது, நடக்கப் போவது) பலவாறு ஆராய்ந்து விளக்கமாகப் பேசி, தோழியிடமும் தேடிப் போகும் போது 7. கண்டோரிடமும் கேட்டுப் புலம்புவாள். அதுபோன்ற பல பேச்சுக்களும் அவ்விடத்தே நற்றாய்க்கு உரியனவாகும்.

தலைவனும் தலைவியும் பிறரறியாமல் உடன்போக்கில் போனதும் நற்றாய் புலம்புவது இது. தன்னையும் தலைவனையும் தலைவியாம் தன்மகளையும் சுட்டிச் சொல்லிப் பொருந்திவரும் பல்லிசொல் முதலான நிமித்தம், மொழிப் பொருள் எனப்படும் நற்சொல் கேட்டல், தெய்வம் - கழங்கு (கோடாங்கி பார்த்தல்) கட்டு (சோழியை உருட்டிப் பார்த்தல், நெல்லை முறத்திலிட்டுப் பார்த்தல்), அருள் வந்து சாமியாடிக் குறி கேட்டல் இவற்றையெல்லாம் பார்த்து, இவற்றால் வரும் நன்மை தீமை அச்சம் என்றைக்கு மீள்வர் என்பன பற்றிக் குறியறிந்து கவலைப்படுவாள் நற்றாய். சார்தல் - மீண்டு வருதல். இவை போல்வனவற்றால் முன்பு நடந்ததை நினைந்தும் இப்போது நடப்பதை எண்ணியும் இனி நடக்கப் போவதை எதிர்பார்த்தும் தோழியிடமும் சுரவழியில் கண்டோரிடமும் மகளைப் போக்கிய வருத்தத்தைக் கூறிப் புலம்புவாள். இவை போல்வன உடன்போக்கில் நற்றாய்க்குரியன.

### உடன் போக்கில் தாயர் தேடிச் செல்லுதல்

**983. ஏமப் பேரூர்ச் சேரியும் சுரத்தும்**
**தாமே செல்லும் தாயரும் உளரே.**

பெருங் காவலையுடைய பேரூரின் கண்ணே பல சேரிகள் இருக்கும். அங்கு தாய் சேர்ந்து போய்விட்ட காதலர் எங்கேனும் மறைந்திருக்கக் கூடுமெனத்

தேடுவாள். சிலபோது, பாலை நிலமாம் சுரவழியிலும் தானே தனித்துத் தேடியும் செல்வாள். தாயர் சிலர்க்கு ஆற்றாமையால் இதுவும் நிகழும் என்பதாம்.

### அடுத்த சேரிப்பிரிவும் பாலைத் திணையே

**984. அயலோ ராயினும் அகற்சி மேற்றே.**

அயற்சேரிக்கண் சென்றார் என்றாலும் அதுவும் பிரிவின் மேற்றாகும். (பாலைப்பாட்டாகும்)

அயல்மனை, அயல்தெரு, அயல்சேரி எனச் சென்றாலும் பாலைத் திணைப் பாற்படும் என்பதே கருத்து.

### உடன்போக்கில் தோழி கூற்று

**985. தலைவரும் விழும நிலைஎடுத் துரைப்பினும்**
**போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்**
**நீக்கலின் வந்த தம்முறு விழுமமும்**
**வாய்மையும் பொய்ம்மையும் கண்டோர்ச் சுட்டித்**
**தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளினும்**
**நோய்மிகப் பெருகித்தன் நெஞ்சுகலுழ்ந் தோளை**
**அழிந்தது களைஇய ஒழிந்தது கூறி**
**வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தோடு**
**என்றிவை எல்லாம் இயல்புற நாடின்**
**ஒன்றித் தோன்றும் தோழிமேன.**

தோழி வேறு, தலைவி வேறல்லரெனும்படி இருவரும் அத்துணை ஒன்றிப் பழகுபவர்கள். பாடல்களிலும் இது தலைவி பேசியதா தோழி கூறியதா எனப் பிரித்தறிவது கடினம். அத்துணை ஒன்றித் தோன்றும் தோழி தலைவியிடமும் தலைவனிடமும் கூறுவன வருமாறு:

1. உடன்போகுமுன் பின்பு வரக்கூடிய துன்பங்களை எடுத்துரைத்து எச்சரிப்பாள் 2. உடன் போக்கிற்கு இசைவாள். 3. இருவரையும் வழி அனுப்பி வைப்பாள். 4. தலைவியைத்தான் விடுத்ததால், தங்கள் குடும்பத்தவர்க்கு உண்டான துன்பத்திற்கு வருந்துவாள். 5. வாய்மையையும் பொய்ம்மையையும் நன்கு அறிந்தவர்களின் அறிவுரைகளைச் சுட்டிக் காட்டித் தாயின் அவல நிலையை ஆழ்ந்து சிந்தித்துத் தலைவியைத் தேடிப் போகாமல் தடுத்து, மீட்டுக் கொள்ளவும் தோழி பேசுவாள். 6. தாய் மிகுந்த துன்பப்பட்டு தன் மனம் நொந்து

அழும்போது, நடந்ததை நீக்கிவிட்டு நடக்க வேண்டியதை எடுத்துச்சொல்லித் தாயை வருந்தாதிருக்க மிகவும் வற்புறுத்துவாள். இவை அனைத்தும் மிக இயல்பாக எண்ணிப் பார்க்கும் காலத்து, தோழியின் கூற்றுக்களாக இடம் பெறும்.

விழுமம் – துன்பம். போக்கல் – அனுப்பச் சம்மதித்தல். விடுத்தல் – வழியனுப்பி வைத்தல். பிரிந்ததால் வந்த தம்முறு – தமக்கான – விழுமம் – மனச்சங்கடங்கள். வாய்மையும் பொய்ம்மையும் கண்டோர் – உலகின் மெய்ம்மை பொய்ம்மைகளை அறிந்தோர். சுட்டி – விளக்கி. தலைப்பெயர்த்துக் கொள்ளும் – தாயை மீண்டு வருமாறு அழைத்துக் கொள்ளுதல். நோய் – துன்பம். கலுழ்தல் – அழுதல். அழிந்தது – கடந்து போனதை. களைஇய – நீக்குதற்காக; ஒழிந்தது – இனி நடக்க வேண்டியதை. வன்புறை – அவர்களுக்கு மணம் முடித்தலை வற்புறுத்துதல். ஒன்றித் தோன்றும் தோழி – தலைவி வேறு, தோழி வேறு எனப் பிரித்தறிய முடியாத உயிர்த்தோழி.

### உடன்போக்கில் சுரவழியிடைக் கண்டோர் கூற்று

**986. பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி**
**வழுவின் ஆகிய குற்றம் காட்டலும்**
**ஊரது சார்வும் செல்லும் தேயமும்**
**ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும்**
**புணர்ந்தோர் பாங்கின் புணர்ந்த நெஞ்சமொடு**
**அழிந்துஎதிர் கூறி விடுப்பினும் ஆங்குஅத்**
**தாய்நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும்**
**சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்**
**கண்டோர் மொழிதல் கண்டது என்ப.**

1. உடன் போக்கில் காதலர்கள் பாலைவழியில் தனியே போவதால், வழியிடையே துன்பம் நேரலாம்; நேரமல்லா நேரத்தில் இடையூறு ஏற்படலாம். அச்சந்தரும் இவ்வழியினால் உண்டாகக்கூடிய, ஆபத்துக்களை எச்சரிக்கையாக எடுத்துக் கூறுவர். 2. பக்கத்தேயுள்ள ஊர்கள் பற்றியும் போகக்கூடிய அடுத்துள்ள நாடுகள் பற்றியும் ஆர்வத்தோடு அவற்றுக்கான வழிகள் இவையெனக் கூறுவர். 3. சேர்ந்து செல்லும் காதலர்பால் ஈடுபாடுள்ள அன்பு மனத்துடன் வருந்தி, அவர்களின் வினாக்களுக்கு விடைகூறி, அனுப்புவர். 4. அங்கு தேடிவரும் அவளின் தாயின் அவலநிலை கண்டு மேலும் போகவேண்டாமெனத் தடுப்பினும்

5. இவ்வழியேதான் போனார்கள் என வழிகாட்டி விடுப்பினும் 6. மிக நீண்டதூரம் சென்று விட்டதனைப்பற்றியும் 7. திரும்பி வருகின்றதனைப் பற்றியும் அங்ஙனம் பார்த்தவர்கள் விவரம் கூறுவர். இவையே இலக்கியத்துள் கண்டவையாகும்.

உடன்போகும் காதலரை சுரவழியிடைக் கண்ட, அகவை முதிர்ந்த பெரியோர் கூறும் அறிவுரைகள் : பொழுதும் வழியும் அஞ்சும் படியாயிருத்தலால், வழுவின் - ஏதும் தவறுநேரின் என்னாவது என - அதனாலாகும் குற்றத்தை விளக்குவர். அணித்தே ஊர்களிருப்பின் அதனையும் மேலும் சென்றால் அடையக் கூடிய நாடு இது என்பதையும் அவற்றுக்காகும் வழியையும் ஆர்வ நெஞ்சுடன் கூறுவர். புணர்ந்தோர் - கூடிச்செல்வோர். புணர்ந்த நெஞ்சம் - அவர்கள்பால் அன்பு செலுத்தும் மனம். அழிந்து - மனம் வருந்தி. எதிர் கூறி விடுப்பினும் - அவர்கள் வினாக்களுக்கு மறுமொழி கூறி, வழிகாட்டி அனுப்பினும். அங்கு தேடிவரும் தாயின் நிலைகண்டு, அவளை மேற்போகாது தடுத்தலும், போகும்படி விடுத்தலும். நீண்ட தூரம் சென்றுவிட்டனரெனச் சென்றதனைப் பற்றியும் மீண்டுவருகின்றனரென வருவதைப் பற்றியும் வழியிடைக் கண்ட பெரியோர் கூறுவர்.

**பிரிவில் தலைமகன் கூற்று**

**987. ஒன்றாத் தமரினும் பருவத்தும் சுரத்தும்**
**ஒன்றிய தோழியொடு வலிப்பினும் விடுப்பினும்**
**இடைச்சுர மருங்கின் அவள்தமர் எய்திக்**
**கடைக்கொண்டு பெயர்த்தலிற் கலங்குஅஞர் எய்திக்**
**கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட**
**அப்பாற் பட்ட ஒருதிறத் தானும்**

**நாளது சின்மையும் இளமையது அருமையும்**
**தாளாண் பக்கமும் தகுதியது அமைதியும்**
**இன்மையது இளிவும் உடைமையது உயர்ச்சியும்**
**அன்பினது அகலமும் அகற்சியது அருமையும்**
**ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்**
**வாயினும் கையினும் வகுத்த பக்கமோடு**
**ஊதியம் கருதிய ஒருதிறத் தானும்**

**புகழும் மானமும் எடுத்துவற் புறத்தலும்**
**தூதிடை இட்ட வகையி னானும்**
**ஆகித் தோன்றும் பாங்கோர் பாங்கினும்**

**மூன்றன் பகுதியும் மண்டிலத்து அருமையும்**
**தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்**
**பாசறைப் புலம்பலும் முடிந்த காலத்துப்**
**பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினும்**
**காவற் பாங்கின் ஆங்கோர் பக்கமும்**

**பரத்தையின் அகற்சியில் பரிந்தோட் குறுகி**
**இரத்தலும் தெளித்தலும் எனஇரு வகையோடு**
**உரைத்திற நாட்டம் கிழவோன் மேன.**

பலவகைப் பிரிவில் தலைமகன் கூற்று

உடன்போக்கில்

தலைமகன் உடன்போக்கில் தங்கள் சுற்றத்தாரைப் பிரியும் பிரிவிலும் பொருள் தேடவும் கல்விக்காகவும் தொழிலுக்காகவும் அரசர்க்குத் தூது செல்வதற்காகவும் போர் கருதியும் நாட்டைக் காக்கவும் பரத்தையர்க்காகவும் பிரியும் பிரிவுகளிலும் என அனைத்தும் பற்றிய தலைவன் கூற்றுகள் இங்கு தொகுத்துரைக்கப்படுகின்றன. தங்கள் காதலுக்கு ஒப்புக் கொள்ளாத சுற்றத்தார், வெப்பமிக்க பருவம், கொடிய பாலைவழி ஆகியவை பற்றி, தங்கள் உடன் போக்கிற்கு ஒன்றிப் பழகும் தோழியுடன் பேசி, உடனழைத்துச் செல்ல வற்புறுத்தினாலும் தலைவியை விடுத்துத் தான்மட்டும் போக நினைத்தாலும் இவை பற்றிக் கூற்று நிகழ்த்துவான், தலைவன். சிலபோது பாலை வழியிடையே அவள் சுற்றத்தார் (தந்தை, தமையன்மார் போல்வார்)வந்து, அவளை மீட்டுக் கொண்டு போய்விடுவர். அதனால் மனங்கலங்கிப் பெருந்துயரடைந்து, தலைவியின் கற்பைக் காக்கும் முயற்சியை அறியாத ஊரார் அவள் மீது பழி தூற்றுவரே என வருந்துவான். இவை உடன் போக்கு எனும் ஒருவகைபற்றியன.

பொருள் வயிற் பிரிவில்

வாழ்நாள் சிறிது; இளமை அரிது (சென்றால் திரும்பாது). முயற்சி உயர்வு; குல மேம்பாடு அடைதல் சிறந்தது, வறுமை இளிவு (தாழ்வு); செல்வம் உடைமை உயர்வு. அன்பு பெரிது; பிரிவு துயர் மிகுந்தது. இவ்வாறு ஒன்றுடன் ஒன்று

ஒவ்வாத, இரண்டுமே தேவையென இருபக்கமும் இழுக்கின்ற நிலையில் பொருள் தேட ஊக்குகின்ற ஊழினை நினைந்து பேசுவான், தலைவன்.

**கல்விகற்க**

வாயினால் ஓதிக் கல்வி கற்றலும் கையினால் பழகும் தொழில் கற்றலும் – படைப்பயிற்சியும் – இவை இரண்டினால் பெறக்கூடிய வாழ்க்கை நன்மை கருதிய ஒருவகைக்காகப் பிரிவது பற்றியும் கூற்று நிகழ்த்துவான், அவன்.

உலகில் புகழுடனும் மானத்துடனும் வாழ வேண்டியதன் இன்றியமையாமையைத் தலைவிக்கும் தோழிக்கும் கூறி விளக்கி வற்புறுத்துவான்.

**தூது செல்ல**

அரசனுக்கு தூது போகப் பிரிய நேரிடும் ஒருவகைப் பிரிவு பற்றியும் கூற்று நிகழும். இவை யாவும் ஒருபகுதி.

**போர்கருதி**

தன்வலி, மாற்றான்வலி, துணைவலி என்ற மூன்று வலிமைபற்றியும் பகைவனது நாட்டு எல்லைக் காப்பு வலிமை பற்றியும் புகழமைந்த பகைவரது மேன்மை கருதியும் பேசுவான், தலைமகன். பாசறையில் நெடுநாள் தங்கிப் போரிட நேரும்போது, தனிமைத் துன்பத்தால் வருந்துவான். போர் முடிந்த காலத்துப் பாகனிடம் விரைந்து தேரைச் செலுத்துமாறு வேண்டுவான்.

**நாடு காவல்**

நாடு காவல் பற்றிய வகைகளிலும் பேச்சு நிகழும்.

**பரத்தையின் பொருட்டு**

பரத்தைக்காக அணித்தே அகன்று திரும்பிவரும் தலைவன்,தலைவி ஊடும்போது, ஊடல் தவிர்க்குமாறு இரந்து – கெஞ்சிக் கேட்பதுண்டு. இனி அவ்வாறு நடவேன் எனச் சூளுரைத்து நம்பிக்கையூட்டுவதுண்டு.

இவை யாவும் தலைவன் தனது பலவகைப்பட்ட பிரிவுகளில் நிகழ்த்தும் கூற்றுக்களாகும்.

**இதில் தலைமகன், பிரிவிடைக்கூறும் கூற்று அனைத்தும் தொகுத்துரைக்கப்படுகிறது. மணம் செய்துதர ஒப்பாத தலைமகள் சுற்றத்தார் பற்றிப் பேசுவான். கடைக்கொண்டு பெயர்தல் – தலைவியை**

அவள் தமர் (சுற்றத்தார்) வந்து மீட்டுப் போதல். அஞர் - துன்பம். கற்பொடு புணர்ந்த கௌவை - அவளது கற்புக்குக் களங்கமேற்படுத்தும்படி ஊரார் அலர் தூற்றுவரே என வருந்துதல். இவை உடன் போக்குப் பற்றியவை.

பொருள்வயிற் பிரிய எண்ணும்போது, தலைவன் ஒருபக்கம் காதல் உணர்வாலும் மறுபக்கம் பொருள் தேடும் முயற்சியாலும் மனம் ஒரு பாற்படாது ஊசலாட வருந்துவான். வாழ்நாள் குறைவு, இளமை போனால் மீளாது, என்பது ஒன்று. முயற்சியின் உயர்வு, குடும்ப மேம்பாட்டால் பெறும் பெருமை மற்றொன்று. வறுமையின் இளிவு, செல்வமுடைமையின் உயர்ச்சி, ஒன்றுடன் ஒன்று முரண்பாடானவை. அன்பின் பெருக்கமும் பிரிவின் அருமையும் இருபுறம். இங்ஙனம் இன்ப வாழ்வொடு பொருந்தாத பொருள்தேடும் முயற்சியில் ஈடுபடுத்தும் ஊழினை நினைவான். வாயால் ஓதும் கல்வி, கையால் பழகும் தொழிற் பயிற்சியும் படைப் பயிற்சியும் இவற்றினாலெல்லாம் ஏற்படும் வாழ்க்கை மேம்பாடு கருதிப் பிரிய நினைதல் ஒருவகை. பொருளுக்காகப் பிரிந்தால் புகழும் பிரியாவிடின் ஏற்படும் மானக்குறைவும் என இரண்டையும் சிந்திப்பான். தூது கருதிய பிரிவு பற்றிய கூற்றுமுண்டு.

அடுத்தது பகைவயிற் பிரிவு பற்றியது. மூன்றன் பகுதி - தன் வலி, பகை வலி, துணைவலி. மண்டிலம் - பகைவனது நாட்டின் வலிமை. மாற்றோர் - பகைவர் தன்னிலும் பெரியராதல். பாசறையில் பிரிவால் வருந்துதல். போர் முடிந்ததும் பாகனிடம் விரைந்து தேரைச் செலுத்தத் தூண்டுவான். காவற்பாங்கு - நாட்டைக் காத்தல் பற்றிய பிரிவு. அகற்சி - பிரிவு. அயற்சேரி முதலாய அணிமையான இடத்தே பிரிவது இது. பரிந்தோள் - வருந்தும் தலைவி. இரத்தல் - தன் குறை பொறுக்குமாறு கெஞ்சுதல். தெளித்தல் - இனி இத்தவறு செய்யேன் எனச் சூளுரைத்தல்.

### பிரிவில் பிறர் கூற்றுக்கள்

**௨௪௪. எஞ்சி யோர்க்கும் எஞ்சுதல் இலவே.**

ஏனைய தலைவி, பாங்கன் போல்வார்க்கும் இதுபோல் கூற்று நிகழ்த்துதல் உளதாகும்.

இன்றியமையாத தலைவி கூற்றுக் காணப்படவில்லை. ஏடு எழுதுவோர் ஏடு ஒன்று சேர்ந்துவிழ எழுதினார் போலும் என்பார் இளம்பூரணர்.

**முன்னைய பிரிவை நினைத்துப் பார்ப்பதும் பாலைத்திணையே**

**989. நிகழ்ந்தது நினைத்தற்கு ஏதுவும் ஆகும்**

இப்போது பிரியக் கருதுவான், முன்பு பிரிவு தொடர்பாக நடந்தது ஒன்றை நினைத்துப்பார்த்தற்கும், இடமுண்டு.

முன்பு பிரிய எண்ணியதும் தலைவி வருந்தியதும் போன்றவற்றை எண்ணிப் பார்ப்பதும் உண்டு. இதுவும் பிரியாமல் இருந்தபடி, பிரிவை நினைப்பதும் பாலையாம்.

**நிகழ்ந்ததை நினைத்துப் பிரிவைத் தவிர்ப்பதும் பாலையாம்**

990. நிகழ்ந்தது கூறி நிலையலும் திணையே.

தலைவி வருந்தியதால் முன்பு நிகழ்ந்ததொன்றைக் கூறி, தலைவன் பிரியாது தவிர்தலும் பாலைத் திணையே.

அங்ஙனம் முன்பு நடந்ததைக் கூறிப் போகாது தவிர்த்து வீட்டிலேயே தங்கினாலும் அதுவும் பாலையே. பிரியாவிட்டாலும் பிரிவு கருதிய நினைவும் பேச்சும் பாலையாகிவிடும் என்ற கருத்து நுட்பம் சிந்தித்தற்குரியது.

**பாலை நடுவுநிலைத் திணையாதலின் அதில் ஏனைய முல்லை முதலியவற்றின் பொருள்கள் விரவும் அளவு விரவி வருதல்**

**991. மரபுநிலை திரியா மாட்சிய வாகி**
**விரவும் பொருளும் விரவும் என்ப.**

பாலை பொதுத்திணையாதலின் பிறதிணைகள் சார்ந்த முதல், கரு, உரிப்பொருட் கூறுகள் கலந்து வரக்கூடிய அளவு கலந்துவரும்.

பாலைத்திணையில் முல்லை முதலிய பிறதிணைக் கூறுகள் மரபு மாறாது. விரவு மளவு விரவிவரும். அதாவது பொதுத் திணையாதலின் முதல் கரு உரிகளில் கலந்துவருவன வரும்.

## கூற்றுக்களில் திறமையுடன் பேச உதவும் இலக்கியக் கலை நுட்பங்கள் – உவமையும் உள்ளுறை உவமையும்

**992. உள்ளுறை உவமம், ஏனை உவமம் எனத்**
**தள்ளா தாகும் திணைஉணர் வகையே.**

**உள்ளுறை உவமம், ஏனைய பொது உவமம்**

ஏனைய பொதுவான உவமை தவிர, உள்ளுறை உவமம் எனவும் ஒன்று உண்டு. இவை அவ்வத்திணைக்குரிய முதற்பொருளுடன் கூடி கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு, அவ்வத்திணைப் பாடல்களில் வரும். அதனால் இன்னதிணை என உணர்வதற்கு இவை தடையின்றி, உறுதுணையாகும். (ஒரு பாடலில் உவமை வரும்போது, அப்பாடலுக்குரிய முதலும் கருவும் ஆகியவற்றைக் கொண்டே அது புனையப்படும்.)

உள்ளுறை உவமம் – உவமையினுள் உட்பொருள் ஒன்று உறைவது. ஏனை உவமம் – பொதுவான உவமை. இவை கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டவை. அதனால் ஓர் அகப்பாட்டு இன்ன திணை என அறிய இவை உதவும். தள்ளாதாகும் – தடை செய்யாது உதவும்.

## உள்ளுறைவைத்துச் சொல்லப் பயன்படும் கருப்பொருள்கள்

**993. உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலன்எனக்**
**கொள்ளும் என்ப குறிஅறிந் தோரே.**

உள்ளுறை உவமை உட்பட, உள்ளுறைகள் ஐந்து. இவை கருப்பொருளடிப்படையில் கூறப்படும்பொழுது, அவ்வந் நிலத்திற்குரிய தெய்வத்தைத் தவிர்த்த, பிற கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டே கூறப்படும்.

கருப்பொருள்கள் ஏழில், தெய்வம் ஒழிந்தவற்றைக் கொண்டு உள்ளுறைகள் கூறப்படும். குறி – இலக்கணம்.

## உவமை வடிவமான உள்ளுறையைப் பாடலில் அமைக்கும் விதம் – படைப்பவன் (பாடுபவன்) திறமை

**994. உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகஎன**
**உள்ளுறுத்து இறுவதை உள்ளுறை உவமம்.**

**உள்ளுறை உவமையின் இலக்கணம்**

புலவன் உட்கருத்து ஒன்றை உள்ளே வைத்து, வெளிப்படச் சொன்ன உவமை, அவ்வுட்பொருளுடன்ஒத்து முடியும்படி, தான் சொல்வது அமைய வேண்டுமென, அதற்கேற்றவாறு உள்ளுறுத்தி முற்றமுடிக்கப் படுவதே உள்ளுறை உவமையாகும். (வெளிப்படச் சொல்லப்பட்ட உவமை, அதற்கு இணையான உள்ளே உள்ள பொருளுடன், ஒன்றுக்கொன்று நன்கு பொருந்தும்படி, பாடுபவன் முற்றமுடிய நன்கு திறமையுடன் பாட வேண்டுமாம்.)

இதற்கு நச்சினார்க்கினியர் தரும் விளக்கம் மிகவும் சிறப்பாகவுளது.

"யான் புலப்படக் கூறுகின்ற இவ்உவமத்தோடே புலப்படக் கூறாத உவமிக்கப்படும் பொருள் ஒத்து முடிவதாக" என்று புலவன் தன் உள்ளத்தே கருதி, தான் அங்ஙனம் கருதும் மாத்திரையேயன்றியும் கேட்டோர் மனத்தின் கண்ணும் அவ்வாறே நிகழ்த்துவித்து அங்ஙனம் உணர்த்துதற்கு உறுப்பாகிய சொல்லெல்லாம் நிறையக் கொண்டு முடிவது உள்ளுறை உவமம் என்றவாறு.

இதனானே புலவன் தான் கருதியது கூறாத வழியும் கேட்டார் இவன் கருதிய பொருள் ஈதென்றாராய்ந்து கோடற்குக் கருவியாகிய சிலசொற்கிடப்பச் செய்தல் வேண்டுமென்பது கருத்தாயிற்று.

**ஏனைய பொதுவான உவமம் வெளிப்படையாய்த் தானே விளங்கும்**

**995. ஏனை உவமம் தான்உணர் வகையே.**

ஏனைய பொதுவான உவமை என்பது, அதனைப் படித்ததும் தானே விளங்கிவிடும் வகையினதாகும்.

**ஏனை உலகம் - பொதுவான பிற உவமைகள். தான் உணர்வகையே - தன்னைப் படித்ததும் வெளிப்படையாக உணர வைப்பன.**

**தலைமகனின் காம உணர்வு நிலை வெளிப்பாடு – கைக்கிளை**

**996. காமம் சாலா இளமை யோள்வயின்**
**ஏமம் சாலா இடும்பை எய்தி**
**நன்மையும் தீமையும் என்றுஇரு திறத்தால்**
**தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்**
**சொல்லெதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்**
**புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே.**

கைக்கிளை இலக்கணம்

கைக்கிளை இலக்கணம் வயதுவந்த ஓர் ஆடவனிடம் தோன்றும் காமஉணர்வு - ஒரு மனநிலை வெளிப்பாடு. அவள் காம உணர்வு நிரம்பப் பெறாத, அப் பருவத்தைத் தொடுகின்ற நிலையிலுள்ள இளையவள். அவளிடம் எவ்விதச் சலனமுமின்மையால், இவன் கொண்டது பயனற்ற துன்பமானது. மேலும் தன்னையும் அவளையும் சேர்த்து, நல்லதும் அல்லதுமானவற்றைச் சிறிது மிகைபடப் பேசுவான். அவள் மறுமொழியாதவிடத்தும் தானே தனக்குள் பேசி இன்புறுவான். இலக்கியத்தில் இது மிக அருகியே காணப்படும். (அவளும் காம உணர்வு நிறைந்த பருவத்தளாய், நோக்குவான் நோக்கிற்கு எதிர்நோக்கிக் கண்ணொடு கண் பேசும் நிலை ஏற்படின் அஃது அன்பின் ஐந்திணைப்பாற்படும். அதற்கு - மனங்கலத்தற்கு - முற்பட்டவை எல்லாம் கைக்கிளைப் பாற்படுத்தப்படும்.)

கை + கிளை - சிறு உறவு. முதல் தொடக்க உறவு. கை - ஒருபக்கம், பெண்ணின் இசைவு அறியுமுன்பு, ஆடவனிடம் தோன்றும் காதலுணர்வு. கைக்கிளை வயதுவந்த ஆடவரிடம் தோன்றும் காமஉணர்வு பற்றிய மனநிலை. பெண் வயது வந்ததும் அவ்வுணர்வு தோன்றுமேனும், புறத்தார்க்குப் புலனாக வெளிப்படுத்த மாட்டாள். இது தலைவி தன்னை விரும்பினாளா என்பதை அறியுமுன், தலைவன் தனக்குத்தானே நினைத்து மகிழ்வது. காமம் சாலா - நிறைவு பெறாத. தன்னொடும் அவளோடும் தொடர்பு படுத்தி நல்லதும். தீதுமாக அளவுக்குச் சிறிது அதிகப்பட்டவற்றைப் பேசி, அவள் மறுமொழி ஏதும் பேசாத நிலையில், தானாகவே தனக்குள் பேசி இன்புறுவான். இது சிறுகுறிப்பாகச் சிறிதளவே தோன்றி மறையும் ஒரு மனவுணர்வாகும். புல்லி - சிறிதளவாய். இது பெருமையுடையதன்று என்ற குறிப்புமுளது.

**காம உணர்வு கரைகடந்த நிலை - பெருந்திணை**

**997. ஏறிய மடல்திறம், இளமை தீர்திறம்**
**தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறன்**
**மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்**
**செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே.**

பெருந்திணை இலக்கணம்

உலகில் பெரிதும் காணப்படுவன, அளவான் அமையாது மிகுதிப்படும் காம

உணர்வு நிலைகளேயாகும். அளவாய் அமைந்தவையே சிறந்தவை. அவை அருகிக் காணப்படினும், பண்பட்ட கற்றறிந்த குடிமக்களிடம் அன்பின் ஐந்திணை விளங்கித் தோன்றும். கள்ளுண்டு களித்தவளிடத்தும் துயில்பவளிடத்தும் மற்றும் வலிந்து கூடுவனவாகிய வடமொழி மணவகைகளைத் தமிழர் "மணம்" என ஒப்பார். வடமொழியில் அவற்றையும் மணவகைகள் ஆக்குவர்.

தலைவியைத் தமர் தர மறுக்கும் நிலையிலும் பிறவாறு இடையூறுகளுற்ற நிலையிலும் தலைவன் மடலேறுவான். பனங்கருக்காற் செய்த குதிரை வடிவான ஒன்றில், தலைவி படமும் பெயரும் எழுதிய ஒன்றை வைத்துக்கொண்டு, எருக்கம் மாலை முதலியன அணிந்து, அதன்மேல் ஏறி ஊர்வது, இரத்தம் கசிய உயிர்விடுவதாகும். மடலேறுவேன் என வாயால் அச்சுறுத்துவது அன்பின் ஐந்திணையுள் அடங்கும். அதற்கு அஞ்சிப் பெற்றோரும் உற்றாரும் தலைவியை அவளால் காதலிக்கப்பட்டவனுக்கே மணம் செய்து கொடுப்பர். அல்லாமல், மடலேறிவிடுவதில் முடியுமாயின் அதுபெருந்திணைப் பாற்படும். இருவரும் இளமைக் காலமெல்லாம் பிரிந்திருக்க நேர்ந்து, காலங்கடந்து கூடுவது இளமை தீர்திறம். வெளிநாடு போனவன் இளமை கழிந்து மீண்டால் காலமெல்லாம் காமத்தால் எத்துணையளவு வாடி வருந்துவர்? இருவரும் நெடுங்காலப் பிரிவினால், தேறுதல் சொல்லித் தெளிவிக்க முடியாத காமத்தால் வருந்துவது அடுத்தது. 'காமம் மிக்க கழிபடர் கிளவி' என்று பறவை விலங்குகளைப் பார்த்துப் பேசுதலும் தனக்குத்தானே பேசிக்கொள்ளுதலுமாகிய நிலை இது.

நான்காவதாக வரும் 'மிக்க காமத்து மிடல்' என்பது, தலைவி ஊடியிருக்கவும், காம மிகுதியால் தனது மிடல் (வலிமை) கொண்டு, வலிதிற் கூடுவது. இவை அன்பின் ஐந்திணை. மக்களிடம் அளவானமைந்த காமமேயன்றி, இவ்வாறான சூழல்களும் ஏற்படுவதுண்டு. தனது மனைவியை வலிதிற்கூடுவதும் பெருந்திணை எனப்படுவது. தமிழிலக்கியம் போற்றிய பண்பாட்டைக் காட்டும்.

**பெரும் + திணை = காமம் மிகுதிப் பட்டநிலை. உலகில் பெரிதும் காணப்படுவதும் இது. அருகியே உலகில் காணப்படும் அரிய அன்பு நிலைகளை மிகுத்துப் பாடுவதும், உலகில் நல்லதல்லாததாய் மிகுதியாய் காணப்படுவதை மிகச் சுருக்கிப் பாடுவதும் இலக்கிய அறமாகும். 'மடலேறுவேன்' என்று அச்சுறுத்துவது அன்பின் ஐந்திணை. மடலேறிவிடுவது பெருந்திணை. இளமை தீர்ந்தபின் கூடுவது அதாவது இளமை வறிதே கழிந்து, அதன்பின் சேர்வது அனையன 'இளமை தீர்திறம்'. தேறுதல் – ஆற்றுதல். ஆற்றாமல் காமமிகுதியால் கழறுவன;**

காமம் எல்லை கடந்த நிலை. மிக்க காமத்து மிடல் - காம மிகுதியினால் வலிதிற் கூடுவது முதலியன. அளவான் அமைந்தவை ஐந்திணை - அளவைக் கடந்தன, மீறியன - பெருந்திணை. காம மிகுதியாதலினாலும் உலகில் பெருவழக்கு ஆதலினாலும் இது பெருந்திணை எனப்பட்டது.

### தலைவன் தலைவியர் முதற்காட்சி இருவரும் மாறி இதயம் புகுமுன் நிகழ்வன

**998. முன்னைய நான்கும் முன்னதற்கு என்ப**

காமம் சாலாத (நிரம்பாத) இளையவள் தவிர்த்து, அவ்வுணர்வு நிரம்பப் பெற்றவளை ஓர் ஆடவன் காண்கின்றான். 'காட்சி' எனப்படும் அது. 'இவள் யாரோ? பேரழகியாக இருக்கிறாளே? தெய்வ மகளோ?' என்றெல்லாம் அவன் மனம் ஆசையால் துள்ளும். 'ஐயம்' எனப்படும் அது. (ஒவ்வொருவருக்கு ஒவ்வொருவரது அழகு பேரழகாகப்பட்டு மனத்தை ஈர்க்கும். கண்டவர் மீதெல்லாம் செல்வதன்று அது.) அவளை அவன் உற்று நோக்கி, அவள் கண்ணிமைப்பதை, கூந்தலில் சூடிய மலர்களில் வண்டு மொய்ப்பதை, கால்கள் நிலத்தில் தோய்வதை எல்லாம் பார்த்து 'ஆராய்வான். பின்னர் இவள் தெய்வமகள் அல்லள்; இம் மண்ணுலக மகளே' எனத் தெளிவான். இவை தெரிதலும் (ஆராய்தலும்) தேறலும் (தெளிதலும்) ஆகும். 'அதன்பிறகு இவனது மனக்குறிப்பை, அவள் தன் கண்ணாற் காணவே, இருமனமும் ஒன்றுபடும் நிலை உருவாகும்'. இதற்கு முந்திய நான்கும் 'கைக்கிளை'யின் பாற்படும்.

**முன்னைய நான்கு - முதன் முதல் இருவரும் சந்திக்க நேர்தல், இவள் தெய்வ மகளோ என அவள் அழகைக் கண்டு ஐயுறுதல், கண்ணிமைத்தல் சூடியமலர் வாடியிருத்தல் என ஆராய்தல், இவ்வுலக மகளே எனத் துணிதல். காட்சி, ஐயம், தெரிதல் (ஆராய்தல்), தெளிதல் நான்கும் முன்னதாகிய கைக்கிளைப் பாற்படும்.**

### அகப்பாடலின் அடிக்கருத்து உலக நடைமுறை வாழ்வு அதன் இலக்கிய ஆக்கம் நாடக வழக்கு இது புலவர்கள் மரபுவழி பாடிவரும் புலனெறி வழக்கம்

**999. நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம்**
**கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்**
**உரிய தாகும் என்மனார் புலவர்.**

புலனெறி வழக்கம்

புலவர்கள் கையாண்ட இலக்கிய நெறி

திணைப் பாடல்களைப் பாடிய புலவர்கள் கையாண்ட புலவராற்று வழக்கம் புலன் நெறி வழக்கம் எனப்படும். அது உலகியல் வழக்கிலிருந்து பெறப்பட்ட அடிக்கருத்துக்களை உடையது. உலகியல் வழக்கு - உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒத்து வருவது என்றும் நாடக வழக்கு - சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல் என்றும் இளம்பூரணர் கூறுவர். உலகத்தில் உள்ளதில் நல்லதைக் கூறுவது என்றும் உயர்ந்தோர் ஒழுக்கத்தை மற்றவர்க்கு உணர்த்தக் கூறுவது என்றும் உலகியல் வழக்கை நச்சினார்க்கினியர் விளக்குவர். நாடக வழக்கு - அகப் பாடலில் முதல் கரு உரி இவ்விவ்வாறு அமையப் பாட வேண்டுமென்னும் வரையறை என அவர் விளக்குவார். 'புனைந்துரை வழக்கு' என்றும் சுட்டிச் சொல்வார்.

உலகியல் வாழ்க்கையை இலக்கியமாக மாற்றுவதே நாடகவழக்கு ஆகின்றது. முன்னர் அகப்பாட்டு கலிப்பாவாலும் பரிபாடலாலும் பாடப்பட்டு வந்தது. நமக்குக் கிடைத்திருக்கும் சங்கப் பாடல்களில் ஆசிரியத்தாலானவையே மிகுதி.

உலக வழக்கை அவ்வாறே எழுதினால் அது இலக்கியமாகாது. அதை ஒரு படைப்பாக்கமாக ஆக்க உதவுவதே நாடக வழக்கு. அக இலக்கியம் 'கூற்று' முறையினது. நச்சினார்க்கினியர் இதைப் 'புனைந்துரை' வழக்கு என்பார். புலனெறி வழக்கம் - புலவர்கள் கையாண்டு வரும் வழிவழி மரபு. முன்பு அகப்பாட்டு கலிப்பா, பரிபாடலில் பாடப்பெற்றது. நமக்குக் கிடைக்கும் சங்க இலக்கியம் பெரிதும் ஆசிரியமாகவுளது. நாட்டுப் பாடலாம் வாய்மொழி மரபில் தோன்றி வளர்ந்து இலக்கிய வடிவம் பெற்றது இது.

**அகத்திணை சுட்டி ஒருவரது இயற்பெயரைக் கூறிப் பாடப்பெறாது. தனி ஒருவர் வாழ்வாயினும் பொதுப்படவே பாடப்பெறும். உலக இலக்கியத்தில், சங்க இலக்கியத் தனித்தன்மை இது.**

**1000. மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்**
**சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅ.**

மக்களை - அவர்களது வாழ்வைப் பாடுவதைக் கருத்தாகக் கொண்ட அகத்துள் நடுவிலுளதாகிய ஐந்திணைப் பாடல்களும், ஒருவரது இயற்பெயரைச் சுட்டிச் சொல்லிப் பாடப்பெறா. ஏனைய கைக்கிளையும் பெருந்திணையும் இயற்பெயர் சுட்டிப் பாடப் பெறாத போது அகத்துள்ளும் அவ்வாறு இயற்பெயர் வரின் புறத்துள்ளும் அடக்கப்படும் என்ற குறிப்பும் பெறப்படுகிறது. (ஆயன், வெற்பன், ஊரன், சேர்ப்பன் என இவ்வாறான பொதுப் பெயர்களே ஐந்திணைப் பாடல்களில் வரும்.

அகன் ஐந்திணை - முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை. கைக்கிளை, பெருந்திணையும் இதனுள் அடக்கம். இவை ஒருவரது இயற்பெயரைச் சுட்டிப் பாடப்பெறா. நிலத்தால் வருபெயர் (ஊரன், நாடன், சேர்ப்பன்) தொழிலால் வருபெயர் இவை (ஆயன், வேட்டுவன்). தவிரப் பிறவாறு இயற்பெயர் வராது. மக்கள் நுதலிய - இது மக்கள் அனைவருக்கும் பொதுவான, அம் மக்களின் நல்வாழ்வு கருதியது; புலமைப் பெருமக்களால் பாடப் பெற்ற மக்கள் இலக்கியம். உலகப் பழைய இலக்கியங்களில் இதற்கு நிகரானது பிறிதொன்றில்லை. நுதலிய - கருதிய, பாடிய.

**புறத்திணைப் பாடல்களிலும், அகப்பாடலில் வரும் புறத்திணைப் பகுதிகளிலும் மட்டுமே இயற்பெயர்கள் இடம் பெறும்.**

**1001. புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது**
**அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே.**

இயற்பெயர் புறத்திணைப் பாடல்களில் பொருந்தி வருமே அல்லது அகத்திணையுள் கலந்து வராது. அகத்திணையுள் வரும் புறச்செய்தியில் வருமென்பதும் இதனாற் கொள்ளப்படும்.

புறத்திணை மருங்கின் - புறப்பாடல்களில் இயற்பெயர் வரும். அகப்பாடலில் வரும் புறச் செய்தியிலும் இயற்பெயர்கள் வரும். அகத்திணைக்குள் வராது. அவ்வாறுவரின் அதிலுள்ளன காதல், குடும்பம் சார்ந்த செய்திகளேயாயினும், அவை 'புறம்' எனத் தள்ளப்படும். இயற்பெயர் - பெற்றோரிட்ட பெயர்; சொந்தப் பெயர். அளவுதல் - கலந்து வருதல்.

## அகத்திணையியல்

## நூற்பா முதற்குறிப்பு



| வ.எண் | நூற்பா | நூற்.எண் | வ. எண் | நூற்பா | நூற்.எண் |
|---|---|---|---|---|---|
| 1. | அடியோர் | 969 | 28. | தன்னும் | 982 |
| 2. | அயலோர் | 984 | 29. | தானே | 973 |
| 3. | அகற்றுள், ஓதல் | 972 | 30. | திணைமயக் | 958 |
| 4. | அவற்றுள், நடுவண் | 948 | 31. | தெய்வம் | 964 |
| 5. | ஆயர் | 967 | 32. | நடுவுநிலை | 955 |
| 6. | இருவகைப் பிரிவும் | 957 | 33. | நாடகவழக்கினும் | 999 |
| 7. | உயர்ந்தோர்க்கு | 977 | 34. | நிகழ்ந்தது நினைத் | 989 |
| 8. | உரிப்பொருள் | 959 | 35. | நிகழ்ந்தது கூறி | 1901 |
| 9. | உள்ளுறுத்து | 994 | 36. | பனிஎதிர் | 953 |
| 10. | உள்ளுறை உவமம் | 992 | 37. | பின்பனி | 956 |
| 11. | உள்ளுறை தெய்வம் | 993 | 38. | புணர்தல் | 960 |
| 12. | எஞ்சியோர்க்கும் | 988 | 39. | புறத்திணை | 1001 |
| 13. | எத்திணை | 981 | 40. | பெயரும் | 966 |
| 14. | எந்நில மருங்கில் | 965 | 41. | பொருள்வயின் | 979 |
| 15. | ஏமய்பேரூர் | 983 | 42. | பொழுதும் ஆறும் | 986 |
| 16. | ஏவல் | 970 | 43. | மக்கள் | 1000 |
| 17. | ஏறிய | 997 | 44. | மரபு நிலை | 991 |
| 18. | ஏனோர் | 968 | 45. | மன்னர் | 976 |
| 19. | ஏனை உவமம் | 995 | 46. | மாயோன் | 951 |
| 20. | ஒன்றாத் | 987 | 47. | முதல் எனப் ஆயிரு | 963 |
| 21. | ஓதல் | 971 | 48. | முதல் எனப் நிலம் | 950 |
| 22. | கலந்த | 962 | 49. | முதல் கரு | 949 |
| 23. | காமம் சாலா | 996 | 50. | முந்நீர் | 980 |
| 24. | காரும் | 952 | 51. | முன்னைய | 998 |
| 25. | கொண்டுதலை | 961 | 52. | மேலோர் முறைமை | 975 |
| 26. | கைக்கிளை | 1 | 53. | மேவிய | 1016 |
| 27. | தலைவரும் | 985 | 54. | வேந்து வினை | 978 |
| | | | 55. | வைகறை | 954 |

# உ. புறத்திணை இயல்

உலகப் புற வாழ்வில் உள்ள அரசியல், பொது வாழ்வியல் யாவும் புறமாகும். கொடை, அளி, செங்கோல், வீரம் பற்றியன என்பர். பெதுவாகக் காதல் – குடும்ப வாழ்வு அல்லாதவை புறம்.

அகம் – காதல் – அ்வரவர் தத்தம் உள்ளத்துணர்வால், நுகரும் இன்பம். அதனை இன்னதெனப் புறத்தார்க்குப் புலனாகக் கூற இயலாது.

புறம் – பலரும் அறிய நுகர்வதும் இன்னதென வெளிப்படக் கூறக் கூடியதுமாகிய இன்பம்.

இதுவே, இலக்கியக் கொள்கையாகும் போது அகம் சுட்டி ஒருவர்ப் பெயர் கூறப்படாமை போன்ற சில கட்டுப்பாடான விதிகளுக்குட்பட்டது. காதற் பாடலேயாயினும் அவ்விதிகளில் இம்மியளவு வேறுபடினும் அது புறத்தில் சேர்க்கப்படும். இலக்கிய வளர்ச்சியின் செறிவு அறியத்தக்கது.

காதலர் இன்பமும் துன்பமும் அகம்; ஒருவரை ஒருவர் இழந்து தவிக்கும் பேரவலம் புறம். அவ்வாறு பார்க்கும்போது அகம் – அகமல்லாதவை புறம் எனலாம்.

இதில் அகம்போல ஏழுதிணைகள் உள. அவை சிற்சில காரணம் பற்றி ஒன்றுடன் ஒன்று இயைபு படுத்தப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| வெட்சி | – | குறிஞ்சிக்குப் புறன் |
| வஞ்சி | – | முல்லைக்குப் புறன் |
| உழிஞை | – | மருதப் புறன் |
| தும்பை | – | நெய்தல் புறன் |
| வாகை | – | பாலைப்புறன் |
| காஞ்சி | – | பெருந்திணைப்புறன் |
| பாடாண் | – | கைக்கிளைப் புறன் |

வெட்சி ஆநிரை கவரும் போர். ஆநிரை மீட்கும்போர் கரந்தை. இரண்டும் ஒன்றே. கவர்வதும் தடுப்பதுமல்லவா? வேறுபாடறியக் கவர்வோர் வெட்சிப்பூவும் காப்போர் கரந்தைப் பூவும் சூடுவர்.

இது தொன்மைமிக்க ஒரே போர்.

வஞ்சி நிலப்பகுதிகளைக் கவரவும் கவரவிடாமல் தடுக்கவும் நடக்கும் போர். மண் ஆசையே அடிப்படை.

உழிஞை தலைநகரைப் பிடிக்க மதில்களைக் கைக்கொள்ளவும் தடுக்கவும் நடக்கும்போர். தடுப்பவர் வேறுபாடு அறிய நொச்சிப்பூச் சூடியிருப்பர்.

தும்பை தத்தம் வலிமையைக் காட்டிப் பிறரினும் மேம்பட நடப்பது. நால்வகைப் படையும் திறந்த வெளியில் நேருக்குநேர் நின்று செய்யும் கடும்போர். யார் வலியவர் என்பதே போருக்குக் காரணம்.

வாகை – போரில் வெற்றி வாகை சூடுவதையும் தத்தம் இயல்பில் ஒருவர் பிறரினும் மேம்பட்டு வாழ்க்கையில் வெற்றி அடைவதையும் பாடுவது.

காஞ்சி – போரால் வரும் அழிவையும் நிலையாமையையும் பாடும். பொதுவாக உலக நிலையாமையைப் பாடும்.

பாடாண் – புகழ்ந்து பாடும் திறன். முற்கூறிய திணைகளில், வாழ்த்து நோக்கிலும் பாராட்டு நோக்கிலும் வருவன இதிலடங்கும். பொதுவாக மானுட விழுமியம், கடவுள் வாழ்த்து, அறவுரைகள், மக்கட் சமுதாய உயர்வு பற்றிய அனைத்தும் பாடாணில் பாடப்படும்.

## இயல் கருத்து நிரல்

### வெட்சித்திணை

1.1. அகத்திணை இலக்கியத்தைக் குற்றமறக் கற்றவர்களுக்குப் புறத்திணையின் இலக்கணத்தைத் திறம்பட விளக்கினால் வெட்சித்திணை என்பது குறிஞ்சித் திணையின் புறமாகும். அது அச்சம் பொருந்துமாறு அமைந்த பதினான்கு துறைகளை உடையது. (இது தொன்மைமிக்க காலத்துப் போர் முறையாகும்.)

1.2. வேந்தனால் ஏவப்பட்டு, போர்முனை செல்லும் வீரர்கள் பகைவர் நாட்டின்கண் உள்ள ஆநிரைகளை, யாருக்கும் தெரியாமல் கவர்ந்து கொண்டு வருவர்.

1.3. வெட்சிக்குப் பதினான்கு துறைகள் கூறப்படுகின்றன.

ஒரு போர் நிகழ்ச்சியின் தொடர்ச்சியை இதில் காணலாம். எனவே இது தனிப்போர் என்பது பெறப்படும்.

1.4. கொற்றவையாகிய வெற்றித் தெய்வத்திற்குத் துடிகொட்டி, வழிபட்டு ஆடும் கொற்றவை நிலையும் குறிஞ்சிக்குப் புறமாய் வெட்சித் திணைப் பாற்படும்.

**தொடக்க காலப் பொதுவான துறைகள்**

1.5. மேலும் வருவன சில போர்கள் அனைத்திற்கும் பொதுவானவை. இதில் **21 துறைகள்** கூறப்படுகின்றன.

கரந்தைப் பூச்சூடித் தங்கள் ஆநிரைகளை வெட்சியார் கவராதவாறு தடுக்கும் போர் பற்றிய துறைகள் சில கூறப்படுகின்றன.

வீரரைப் பாராட்டும் பொதுவான துறைகள் சில : முன்னே வரும் படையைத் தான் ஒருவனே நின்று தடுத்தல். வாளால் பிறரை வெட்டி வீழ்த்தித் தானும் மாய்தல். இவை இரண்டும் 'பிள்ளைநிலை'த்துறை எனப்படும். இவை இரு பக்கத்துப் பெரிய வீரர்களுக்கும் பொருந்தும். வாட்போர் செய்து வென்றெழுந்த பெரிய வீரனுக்கு, மகிழ்ந்து, பறை முழக்கி, 'நாடு' கொடுத்துக் கொண்டாடுவது 'பிள்ளையாட்டு'. பிள்ளையாட்டு வீரனைக் கொண்டாடுவது, பரிசளிப்பது, பாராட்டுவது, பிள்ளை என்றால் இளைய வீரன் என்பது முன்னைய பொருள்.

**நடு கல்லெடுத்தல் பற்றியன:**

காட்சி – இறந்த பெருவீரனுக்குக் கல்லெடுக்க முதலிற் கல்தேடிக் காணுதல் – தேர்ந்தெடுத்தல். அதனை நாட்டுதற்கு முற்படச் செய்யத் தகுவனயாவும் செய்தல். அக்கல்லைப் புனித நீராட்டுதல். தக்க இடத்தில் நடுதல். சிறப்புமிக்க பெரிய படையலிடுதல். வாழ்த்தி வணங்குதல். இவை இரு மூன்றுடன் வெட்சி சார்ந்ததும் அதேசமயம் பொதுவாக அனைத்துப் போருக்கு முரியனவுமான இருபத்தொரு துறைகளாகும்.

**வஞ்சித்திணை**

2.1. வஞ்சிப் போர் பகைவர் நாட்டு நிலத்தைக் கவரும் ஆசையால் நிகழ்வது. இது முல்லைத் திணைக்குப் புறமாகும்.

2.2. இதன் குறிக்கோள் 'மண்நசை' ஆகும். அதாவது நிலப்பகுதிகளைக் கவரும் ஆசை. ஆநிரை கவரும்போர் வெட்சி; மண் – நிலப்பகுதி – நாடு கவரும் போர் வஞ்சி. இரண்டும் வேறு வேறு போர்கள்.

நிலம் பற்றிய போரின் நிகழ்வுகள்

2.3. படையெடுத்துப் போகும் ஆரவாரம் தொடங்கி, தோற்றோடுபவரைத் தழுவிக் கொள்ளும் தழுஞ்சி முடிய வரும் பதின்மூன்றும் வஞ்சிப் போர் நிகழ்வுகளாகும்.

உழிஞைத்திணை

மதிற்போர்

3.1. உழிஞைப்பூச்சூடி மதிலை வளைத்துப் பெரிய நகரங்களையும் அரண்மனைகளையும் கைப்பற்றச் செய்யும்போர் இது. இது மருதம் எனும் அகத்திணைக்குப் புறமாகும்.

3.2. முழுமையான அடித்தளத்தையுடைய வலிய அரணை முற்றுகையிடுதலும் கைக்கொள்ளுதலும் உழிஞை.

3.3. அது எட்டுவகைப் போர் நிகழ்வுகளை – துறைகளை உடையது.

3.4. 'பகைவர் நாட்டை வெல்லும் முன்பே அது தம்மதென முடிவு செய்தல்' தொடங்கி, எட்டுத் துறைகளையுடையது, அது.

3.5. மேலும் பனிரண்டு துறைகளும் உள. இவையாவும் உழிஞைப்போரில் முற்றமுடிய நடக்குமென்றோ, தொடர்ச்சியாக நடக்குமென்றோ கருதவேண்டாம். இவை தாக்கும் உழிஞைக்கும் காக்கும் நொச்சிக்கும் உரியன. இவற்றுள் நடப்பது நடக்கும். உழிஞைப் போர் ஒன்றே, உழிஞை நொச்சி என்பன போர்வீரர்களின் அடையாளப் பூக்கள்.

**உழிஞையான் போர் முயற்சிகளும் நொச்சியானது காக்கும் முயற்சிகளும் இவற்றில் கூறப்படுகின்றன.**

தும்பைத்திணை

4.1. தும்பை இரங்கற் பொருட்டாகிய நெய்தலுக்குப் புறமாகும்.

4.2. போரிடும் வலிமையையே காரணமாகக் கொண்டு, போரிட வந்த வேந்தனைத் தானும் எதிர்சென்று அவனை முறியடிக்கும் சிறப்பினையுடையது இத் தும்பைப் போர்.

4.3. ஒரு வீரனின் உடலில் அம்புகளும் வேல்களும் நெருக்கமாகப் பாய்ந்து உடல் முழுதுமிருத்தலால் உயிர் சென்ற பிறகும் யாக்கை கீழே விழாமல் நிற்கிறது. அது மிகப் பல கால்களையுடைய அட்டையின்

உடம்பு தரையில் படுதலில்லாதவாறு போல, இவ் வீரன் உடலும் தரையில் விழாது அம்பும் வேலும் தாங்கி நிற்கின்றன. இது போர் மறவனின் வீரச் சிறப்பை மட்டுமன்றிப் போரின் கடுமையையும் காட்டுகிறது.

**தும்பைத்திணையின் போர் நிகழ்வுகள்**

4.4. பகைவர்கள் அஞ்சும்படியான தானை நிலை (காலாட் படை), யானை நிலை, குதிரை நிலை தொடங்கி, ஒருவனுக்குப் பல படைகளும் உடைந்து தோற்று ஓடுதலினால், அவ்வீரன் தனது ஒளி வீசும் வாளைச் சுழற்றி ஆடும் நூழிலாட்டுவரை மிகுந்த அவலம் சார்ந்த பன்னிருதுறைகள் தும்பைப் பாற்படும்.

**வாகைத்திணை**

5.1. வெற்றிக்கு வாகை அடையாளம். சிலர் வாழ்விலும் விளையாட்டிலும் கூட வாகை சூடுவர். அதனால் அகத்தில் பொதுத்திணையான பாலைக்கு இது புறமாயிற்று.

5.2. குற்றமற்ற கோட்பாடுகளையுடைய பெருமக்கள் தத்தமது துறையில், பிறரினும் மேம்பட வேறுபாடு காட்டி, தமது தகுதி உயர்வைப் புலப்படுத்துதல் வாகையாகும்.

**உயர்ந்தோர்க்கான வாகை வகைகள்**

5.3.
1. அறுவகைப்பட்ட பார்ப்பன வாகை
2. ஐவகை மரபின் அரசவாகை
3. வணிகர், வேளாளர் வாகை – ஆறு வகை
4. இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் மூன்றும் பற்றிய குற்றமற்ற செய்திகளை நெறியறிந்து செய்யும் அறிவர் வாகை. கணியர் என்போரும் இவரே என்பர் உரையாசிரியர்.
5. தவம் செய்வார் கைக்கொள்ளும் எட்டுவகை வழக்கங்கள்.
6. பொருநர்வாகை : பாடினியர், பாணர் என இருபாலாக அறியப்பட்ட பொருநர் வாழ்வு.
7. அதுபோன்ற பிற வகைகள். இவை ஏழும் உயர்ந்தோர் வாழ்வில் உயர்வு காட்டும் வாகைத்துறைகள். இவை உரையாசிரியர்கள் தருவனவே. தொல்காப்பியர் தொகை கூறினாரே தவிர, வகை

கூறினாரல்லர். கருத்து வேறுபட வாய்ப்புள்ளவை இவை. அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம் என்றால், பார்ப்பனரில் ஆறுவகையினர் உண்டு என்று தானே பொருள்படும்?

போர் - வென்றிவாகையும் வாழ்க்கை வெற்றிவாகையும்

5.4. இது இரண்டு பகுதியாகக் கூறப்படுகிறது. முதலில் உள்ள ஏழும் ஒருவகை. பிறகு வரும் பதினொன்றும் ஒருவகை. ஆக இவை பதினெட்டுத் துறையும் வாகையாகும்.

காஞ்சித்திணை

6.1. காஞ்சி என்பது நிலையாமை. பெருந்திணையும் உலகில் மிகுதி. எனவே காஞ்சி பெருந்திணைக்குப் புறனாயிற்று.

6.2. ஒப்பற்ற சிறப்புடன், பல வழியாலும் உலக நிலையாமையைப் பற்றிய அடிக்கருத்துக்களை உடையது இது.

6.3. நிலையாமை பற்றிய காஞ்சித்திணை இரு பகுதிகளாகப் பகுத்துக் கூறப்படுகிறது. முதலில் வருவன போர் அவலம்; இறுதியில் வருவன பொது அவலம்.

பாடாண் திணை

7.1. பாடல் பெற்றுப் புகழ்பெறுதற்கான தன்மையுடைய பாடாண் திணை கைக்கிளைக்குப் புறமாகும். பாடல்களை ஆராயுங்கால் இவை தலைமை வாய்ந்த எட்டு வகையின.

7.2. போரில் இறந்து அமரரானவர்களையும் அது போல் தெய்வமானவர்களையும் பாடும் ஆறு வகைகள் உள. குற்றமற்ற காமத்தைப் பொருந்தி வருவன, பெயர் சுட்டின் புறத்தில் வரும் இவை பாடாணில் ஒரு பகுதியாகும்.

7.3. உலக வழக்கிலுள்ளவாறு பல வகையாக நிலைபெற்று, வழிபடுதலும் புகழ்தலும் ஆகிய இரண்டும் கருதிய பாங்கின பிறிதொருவகை. அவை முன்னோர் கூறிவந்த குறிப்பொடு பொருந்தும். இவை யாவும் 'செந்துறை வண்ணப்பகுதி' என ஒருவகை வண்ணச் சந்தத்துடன் பாடப் பெறுதல் நீக்கும் நிலைமை இன்று.

7.4. கடவுளர் பற்றிய பாடல்களிலும் காமப் பொருள் சார்த்திப் பாடுதலை நீக்கமாட்டார்கள். அதாவது கடவுளர் காதலும் பாடப்படுதல்

நீக்கப்படுவன அல்ல. ஏனோர் எனப்பட்ட தலைவர், மன்னர்கள் பற்றியும் பெயர் சுட்டி இவை வரும்.

7.5. குழந்தைகளைப் புகழ்ந்து பாடுதலும் பாடாணுக்கு உரியதேயாம். அதன் வளர்ச்சி நிலைகளைப் பாடுவர்.

7.6. ஊரொடு தோற்றம் என ஊர்வலமாகத் தோன்றி வருகின்றனரெனப் பாடுதலும் இப் பாடாணுக்கு உரியதேயாம்.

7.7. இவை எல்லாம் உலக வழக்கொடு பொருந்திய இலக்கிய வகைகளாகும். (நாட்டுப்புற வழக்கு)

7.8. இவற்றில் பாடப்பெறுபவரது உண்மையான இயற்பெயரை வைத்துப் பாடுவர்.

7.9. கடவுளை வாழ்த்தும் போது மக்களையும் வேந்தனையும் சேர்த்து வாழ்த்துவது ஒரு மரபு. கொடிநிலை - மன்னனது; கொடியைத் தெய்வத்தினது கொடியுடன் இயைத்து வாழ்த்திப் பாடுவர். கந்தழி - பற்றுக் கோடான மதிலை அழிப்பதை, தெய்வத்தினது மதிலழித்த சிறப்புடன் ஒப்பிட்டுப் பாடுவர். வள்ளி – அரசனது புகழைப் பாடி ஆடும் வள்ளிக் கூத்தாகிய ஆட்டமும் கடவுள் வாழ்த்துடன் பொருந்தி வரும். மன்னனைக் காக்க வேண்டிப் பாடுவன இவை.

7.10. கொற்றவள்ளை அகத்தில் வரும் உலக்கைப் பாட்டு. ஆனால் பெயர்சுட்டிப் பகைவனது அழிவுக்கு வருந்தி, வென்றவனது சிறப்பையும் சிறிது பகர்ந்து வரும் இது பாடாணிலும் வரும்.

**பாடாணில் உள்வகைகள்**

7.11.1. கொடை கொடுத்தோரைப் புகழ்தல்; கொடாதோரைப் பழித்தல்; பகைவரை வென்றவனைப் புகழ்ந்து, அவனது நல்லியல்புகளைப் பகரும் இயன்மொழி வாழ்த்து முதலியனவாக வரும் **ஏழுடன்**, இறுதியில் கூறிய **நான்கும்** சேர்த்து இவை பாடாண் பாட்டுத் துறைகளாகும்.

7.11.2. குற்றமற்ற நற்புகழைக் கருதியபடி உறங்கும் மன்னர்களை எழுப்புதற்குச் சூதர்கள் பாடும் துயிலெடைநிலை. பின்பு பள்ளி எழுச்சி எனப்பட்டது. உலகத்தில் வரும் அன்றாட நடைமுறைகளின்படி, முக்காலத்திற்கும் பொருந்துமாறு, பாடாண் பாடல்கள் அவ்வக் கருத்தமையக் காலந்தோறும் பாடப்படும்.

## புறத்திணை இயல்

### வெட்சித்திணை

1002. அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்
வெட்சி தானே குறிஞ்சியது புறனே
உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே.

வெட்சித்திணை

அகத்திணை இலக்கியத்தைக் குற்றமறக் கற்றவர்களுக்குப் புறத்திணையின் இலக்கணத்தை திறம்பட விளக்கினால் வெட்சித்திணை என்பது குறிஞ்சித்திணையின் புறமாகும். அது அச்சம் பொருந்துமாறு அமைந்த பதினான்கு துறைகளை உடையது. (இது தொன்மைமிக்க காலத்துப்போர் முறையாகும். ஆநிரைகளே பெருஞ் செல்வமாக இருந்த காலம் அது. சங்க காலத்தில் நிரை கவர்தல் என்பது, போர் தொடங்கு முன், அச் செல்வமாகிய ஆநிரைகளுக்குத் துன்பம் நேராதவாறு, இரவில் சமயம் பார்த்துக் கவர்ந்துவருவதாகும். இதனால் இது 'களவு' பற்றிய குறிஞ்சிக்குப் புறனாயிற்று. மேலும் இஃது ஒன்றே, போராக இருந்ததால், போர் பற்றிய பல பொதுச் செய்திகள் இத்திணையில் கூறப்படுகின்றன. பின்னர் ஒரு பகைவனைப் போருக்கு அழைக்குமுகமாக, முன்னதாக ஆநிரை கவர்தல் நிகழலாயிற்று. அவ்வாறு கவர்பவர் வெட்சிப்பூச் சூடினர். தங்கள் ஆநிரைகள் 'களவு' போவதை அறிந்த அவற்றிற்கு உரியவர்கள், அவற்றை மீட்கக் 'கரந்தைப்பூ'ச் சூடிப் போர் புரிந்தனர். தொல்காப்பியர் காலத்தில் ஆநிரை கவர்தலும் அவற்றை மீட்டலும் ஒரே போராகவே கருதப்பட்டது. பிற்காலத்தவர் இவற்றை இருதிணை ஆக்கினர். இவ்வாறு தொல்காப்பியர் புறத்திணையும் ஏழு என்றதை, பின்னாளில் பன்னிரண்டாக்கினர். தொல்காப்பியர் சொல்வதே உலகியலுக்கும் நெறிமுறைக்கும் ஒத்தது.

அரில்தப – தவறின்றி. உட்கு – அச்சம். வெட்சியும் குறிஞ்சி நிலப் பூவே. மனித வாழ்வை அடிப்படையாகக் கொண்டு உருவான அகம், புறம் இரண்டும் எல்லையற்றவை. அகத்தை வரையறை செய்து, அதற்கேற்பப் புறத்தை வரையறை செய்துள்ளனர்.

**பகைநாட்டவர் பசுக்களைக் கவர்தல் பழங்காலப் போர்முறை இது; பின்பு பகை வேந்தனைப் போருக்குத் தூண்டுவதும் இது**

**1003. வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்**
**ஆதந்து ஓம்பல் மேவற் றாகும்.**

வேந்தனால் ஏவப்பட்டு, போர்முனை செல்லும் வீரர்கள் பகைவர் நாட்டின்கண் உள்ள ஆநிரைகளை யாருக்கும் தெரியாமல் கவர்ந்து ஓட்டிவந்து பாதுகாத்தலைப் பற்றியது இது.

முனைஞர் - அரசனால் அனுப்பப்பட்டு போர் முனையில் சென்ற வீரர். வேற்றுப் புலம் - பகைவர் ஊர். ஓம்பல் - பாதுகாத்தல். மேவருதல்- பொருந்துதல்.

**வெட்சிப் போர்**

**பதினான்கு துறைகள்**

**1004. படைஇயங்கு அரவம், பாக்கத்து விரிச்சி,**
**புடைகெடப் போகிய செலவே, புடைகெட**
**ஒற்றின் ஆகிய வேயே, வேய்ப்புறம்**
**முற்றின் ஆகிய புறத்திறை, முற்றிய**
**ஊர்கொலை, ஆகோள், பூசன் மாற்றே,**
**நோயின்று உய்த்தல், நுவலுழித் தோற்றம்,**
**தந்துநிறை, பாதீடு, உண்டாட்டு கொடைஎன**
**வந்த ஈரேழ் வகையிற் றாகும்.**

முன்னே கூறிய பதினான்கு துறைகள் வருமாறு : 1. படை புறப்படும் ஆரவாரம் 2. சேரியில் வீட்டுப் புறத்தே நின்று நற்சொல் கேட்டல் (வெற்றி கிடைக்குமா என்பதை ஊரார் சொல்லும் முதல் வார்த்தை செவியில் விழுவதால் அறிவது இது. படை புறப்பட்டதும் விரிச்சி கேட்பர்.) 3. பகைவர் யாரும் அணுகி அறியாதபடி செல்லுதல் 4. பகைவர் ஒற்றுக் கேட்டிருப்பின் அது கெடுமாறு, தமது ஒற்றர்களால் ஒற்றறிந்து அதற்கேற்பப் போதல் 5. அங்ஙனம் ஒற்று அறிந்தபடி சென்று, பகைவர் நாட்டு எல்லையில் முற்றுகையிட்டுப் புறத்தே தங்குவது. 6.முற்றுகையிட்டுச் செய்யும் போரில் அவ் ஊரார் கொல்லப்படுதல் 7. ஆக்களைக் கைப்பற்றுதல் 8. ஆக்களை மீட்க வந்தோர் இடும் சண்டையை மாற்றி, அவர்களை விரட்டுதல் 9. ஆக்களைத் துன்பப்படாமல் தங்கள் ஊர்க்கு ஓட்டிப் போதல்.

10.தங்கள் ஊரார் மகிழ்ச்சியோடு பாராட்டி வரவேற்குமிடத்துச் சென்று சேர்தல் 11.ஆக்களை ஓரிடத்துத் தொகுத்து நிறுத்துதல் 12. போருக்கு உதவியாகச் சென்ற வீரர்கள் உட்பட அனைவருக்கும் அப்பசுக்களை முறைப்படியும் வரிசைப்படியும் பகிர்ந்து கொடுத்தல் 13. அனைவரும் கள்ளுண்டு மகிழ்ந்து ஆடுதல் 14.ஊரிலுள்ள மற்றவர்க்கும் ஆக்களைக் கொடுப்பது.

ஒரு போர் நிகழ்ச்சியின் தொடர்ச்சியை இதில் காணலாம். பிறவற்றில் இத் தொடர்ச்சி அமையாது; அல்லது அருகி வரும்.

**அரவம் - ஆரவாரம். பாக்கத்து விரிச்சி - இற்புறத்தே நின்று நற்சொல் கேட்டல். செலவு - படையெடுத்துப் போதல். புடை - பகைவர் ஒதுங்கி நின்று ஒற்றுக் கேட்டல். வேய் - மறைவாகச் சென்று ஒற்றுக் கேட்பது. முற்றின் ஆகிய புறத்து இறை - முற்றுகையிட்டு புறத்தே தங்குதல். பூசல் மாற்று - எதிர்த்துப் போரிட்டு விரட்டுதல். நோயின்று உய்த்தல் - ஆக்களுக்குத் துன்பமின்றி ஓட்டிச் செல்லுதல். நுவலுழித் தோற்றம் - தம் ஊரார் வரவேற்றுப் பேசுமாறு ஊருட் புகுதல். தந்துநிறை - ஆக்களைத் தந்து, கொட்டங்களை நிறைத்தல். பாதீடு - போரிட்ட வீரர் முதலான அனைவர்க்கும் ஆக்களைப் பகிர்ந்து கொடுத்தல். உண்டாட்டு - மதுவுண்டு ஆடும் கொண்டாட்டம். கொடை - போருக்கு வராத ஊரிலுள்ளார் பலருக்கும் ஆக்களைக் கொடுத்தல்.**

### கொற்றவை பரவலும் வெட்சியுள் அடங்கும்

**1005. மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த**
**கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே.**

கொற்றவையாகிய வெற்றித் தெய்வத்திற்கு துடிகொட்டி ஆடும்போது, அது வீரர்களை ஊக்கப்படுத்தும், அவர்கள் உள்ளே அடங்கிக் கிடந்த மறவுணர்வைக் கிளர்ந்து எழச் செய்யும். அவ்வாறு வழிபட்டு ஆடும் கொற்றவை நிலையும் குறிஞ்சிக்குப் புறமாய் வெட்சித் திணைப்பாற்படும்.

**துடியை அடிக்க அடிக்க மறம் - வீரம் எழுச்சிபெறும். கொற்றம் - வெற்றி. கொற்றவை - வெற்றி தரும் தாய்த் தெய்வம். குறிஞ்சிக்குப் புறமாகி, வெட்சித்திணைப் பாற்படும். (கொற்றவை பாலைக்கும் தெய்வமாகும்.)**

**தொல்பழங்காலத்தில் நிகழ்ந்த ஒரே போர்முறை இது; அதனால் வெட்சித்திணையுள், பொதுவான துறைகள் பலவும் கூறப்படுகின்றன.**

1006. **வெறிஅறி சிறப்பின் வெவ்வாய் வேலன்**
**வெறியாட்டு அயர்ந்த காந்தளும், உறுபகை**
**வேந்துஇடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்**
**போந்தை வேம்பே ஆர்என வரூஉம்.**
**மாபெரும் தானையர் மலைந்த பூவும்,**
**வாடா வள்ளி, வயவர் ஏத்திய**
**ஓடாக் கழல்நிலை உளப்பட ஓடா**
**உடல்வேந்து அடுக்கிய உன்ன நிலையும்,**
**மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்**
**தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்,**

ஆநிரையை மீட்கும் கரந்தைப்போர்

**ஆரமர் ஓட்டலும், ஆபெயர்த்துத் தருதலும்,**
**சீர்சால் வேந்தன் சிறப்பெடுத்து உரைத்தலும்,**
**தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும்,**
**அனைக்குரி மரபினது கரந்தை அன்றியும்.**

கடும்போரும் கல்லெடுத்தலும்

**வருதார் தாங்கல், வாள்வாய்த்துக் கவிழ்தல் என்று**
**இருவகைப் பட்ட பிள்ளை நிலையும்,**
**வாள்மலைந்து எழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க**
**நாடு அவற்கு அருளிய பிள்ளையாட்டும்,**
**காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல்,**
**சீர்த்தகு சிறப்பின் பெரும்படை வாழ்த்தல் என்று**
**இருமூன்று வகையில் கல்லொடு புணரச்**
**சொல்லப் பட்ட எழுமூன்று துறைத்தே.**

போர்கள் அனைத்துக்கும் பொதுவான துறைகள்

1. வேலன் (முருகனைப் போல் கையில் வேல் பிடித்து ஆடும் படிமத்தானாகிய பூசாரி) வெறி ஆடிக் குறிகூறுவான். அத்தகைய சிறப்பினையுடைய, கடிதான சொற்களைக் கூறும் வேலன் காந்தள்பூச்சூடி

'வெறியாட்டு' நிகழ்த்துவது 'காந்தள்' எனப்படும். 2. போர் புரியும்போது, போர் மறவர்கள் எந்த வேந்தன் பக்கத்தவர் என்று அடையாளம் தெரிவதற்காக, பெரிய படைமறவர்கள் மிக்க புகழையுடைய பனம்பூ, வேப்பம்பூ, ஆத்திப்பூ என அடையாளப் பூக்களைச் சூடுதல் (2,3,4) இது பூக்கோள் நிலை எனப்படும். 5. 'வாடாதபூ' என்பது வள்ளிக் கூத்தைக் குறிக்கும். வெற்றி பெற்ற வீரர் வேடமிட்டாடுவது இது. 6. 'கழல்நிலை' என்பதும் ஓர் ஆடல். வீரர்கள் சுற்றி நின்று, பின் வாங்கி ஓடாத பெருவீரத்தைப் புகழ்ந்து பாட, காலில் வீரக் கழல் கட்டி ஆடுவது இது. 7. புறமுதுகு காட்டி ஓடாத, சினம் மிக்க வேந்தர்கள் உன்ன மரம் தளிர்த்தும் உலர்ந்தும் காட்டும் குறியை மாறிமாறிப் பார்க்கின்ற உன்னநிலை. இது ஒருவகை நிமித்தம் பார்ப்பது.

### பூவை நிலை

8. அரசனைக் காத்தற் கடவுளாகிய திருமாலுடன் ஒப்பிட்டுப் புகழ்வது பூவைநிலைத்துறை. பூவையாகிய காயாம்பூ நிறத்து மாயோனுடன் பொருந்திய மிக்க சிறப்பினை, மன்னன் மேல் ஏற்றிக் குறையாத சிறந்த புகழைக் கூறுவது இது. (பின்னர் பிறதெய்வங்களுடன் சார்த்தி வாழ்த்துவனவும் 'பூவைநிலை' எனப்பட்டன.)

### கரந்தைத் துறைகள்

இனிக் கரந்தைப் பூச்சூடித் தங்கள் ஆநிரைகளை வெட்சியார் கவராதவாறு தடுக்கும் போர்பற்றிய துறைகள் சில கூறப்படுகின்றன : 9. அரிய ஆநிரை கவரும் போரில் பகைவரை வென்று, நிரை கவராதபடி ஓட்டுதல். 10. ஆக்களை மீட்டுக்கொணர்தல். 11. சீர்மை பொருந்திய தங்கள் வேந்தனது புகழ்ச்சிறப்பை எடுத்து மொழிதல். 12. முயற்சிமிக்க வஞ்சின மொழியைத் தன்னொடு சார்த்திக் கூறுதல். அதாவது 'நிரையை மீட்காவிடில் யான் உயிர்விடுவேன்' என்பது போலச் சூளுரைத்தல். இது 'நெடுமொழி' எனவும் படும். இவை போலும் மரபுடையன 'கரந்தை' என வெட்சியின் உட்துறைகளாகும்.

### பெரும்போர் மறவர் சிறப்பு

13. முன்னே வரும் தூசிப் படையைத்தான் ஒருவனே நின்று தடுத்தல். 14.வாளால் பிறரை வெட்டி வீழ்த்தித் தானும் மாய்தல். இவை இரண்டும் 'பிள்ளை நிலை'த்துறை எனப்படும். இவை இரு பக்கத்துப் பெரிய வீரர்களுக்கும் பொருந்தும். 15. வாட்போர் செய்து வென்றெழுந்த பெரிய வீரனுக்கு, மகிழ்ந்து, பறை முழக்கி, 'நாடு' கொடுத்துக் கொண்டாடுவது 'பிள்ளையாட்டு'. பிள்ளையாட்டு வீரனைக் கொண்டாடுவது, பரிசளிப்பது, பாராட்டுவது. (பிள்ளை – இளம் வீரன்)

கல்லெடுத்தல்

16. காட்சி - இறந்த பெருவீரனுக்குக் கல்லெடுக்க முதலிற் கல் தேடிக் காணுதல் - தேர்ந்தெடுத்தல். 17. அதனை நாட்டுதற்கு முற்படச் செய்யத்தகுவன யாவும் செய்தல் 18. அக் கல்லைப் புனித நீராட்டுதல் 19. தக்க இடத்தில் நடுதல் 20.சிறப்பு மிக்க பெரிய படையலிடுதல். 21. வாழ்த்தி வணங்குதல். இவை ஆறும் வெட்சி சார்ந்தன. அதே சமயம் பொதுவாக இவை அனைத்துப் போருக்கு முரியன. இவை இருபத்தொரு துறைகளாகும்.

வெவ்வாய் - மிகக் கடிதான சொற்களைப் பேசுவான். வேலன் - முருகன் போல ஒப்பனை செய்து கொண்ட படிமத்தான், சாமியாடி. வெறியாட்டு - சாமிவந்து ஆடுவது; அருள் வந்தாடுவது என்பதுமுண்டு. போர்க்களத்தே, எப்பக்கத்து வீரர் என அறியச் சூடுவன அடையாளப் பூக்கள். போந்தை - பனை, ஆர் - ஆத்தி. அதனுடன் ஆநிரை கவர்வோர் வெட்சிப் பூவும், தம் நிரையைக் காப்போர் கரந்தைப்பூவும் சூடுவர். வாடாவள்ளி - வள்ளிக்கூத்து. வயவர் - வீரர். ஓடாக் கழல்நிலை - காலில் கழலைக்கட்டி ஆடும் கூத்து. உன்னநிலை - உன்னமரம் தளிர்த்தல் நல்ல அறிகுறி. உலர்ந்தால் தீய அறிகுறி. வேந்தர்கள் இவ்வறிகுறியை மாறி மாறிப் பார்த்துப் போரிடச் செல்வர். அரசனை காத்தற் கடவுளாகிய திருமாலுடன் சார்த்திப் புகழ்வது பூவை நிலைத் துறை. பூவை - காயாம்பூ. திருமால் - காயாம்பூ மேனியன்.

அமர் - போர். பெயர்த்துத்தருதல் - பசுக்களை மீட்டல். தலைத்தாள் நெடுமொழி - தலைமை வாய்ந்த முயற்சியுள்ள வஞ்சினம் கூறுதல். இவை யாவும் கவர்ந்து சென்ற தமது ஆநிரையை மீட்கும் கரந்தையார் பற்றியவை.

தார் - தூசிப்படை, முன்னே வரும்படை. (கூழை - பின்னின்று தாங்கும் பயிற்சிமிக்க படை.) வாள்வாய்த்து - மாற்றானை வாளால் வெட்டி. கவிழ்தல் - தானும் இறந்து விடுதல். இருவகைப்பட்ட பிள்ளை - இரு பக்கத்தாரும் வீரராய் விளங்கும் நிலை. வாளால் வென்று உயர்ந்தவனுக்கு நாடு (நிலம்) அளித்துச் சிறப்பித்தல். பிள்ளையாட்டு - வீரனைக் கொண்டாடுதல். பிள்ளை - இளைய வீரன். தூங்க - ஒலிக்க.

நடுகல் எடுப்பது பற்றிய ஆறுதுறைகள். காட்சி - கல் தேடிக் காணுதல். கால்கோள் - முன்னதாக ஆவன செய்தல். நீர்ப்படை - புனித நீராட்டுதல். நடுகல் - நடுதல். பெரும்படை - பெரிய படையலிடுதல், படைத்தல் என்பர். வழிபாடு. வாழ்த்தல் - வாழ்த்தி வணங்குதல். கல்லொடு - நடுகல் விழாவுடன்.

## வஞ்சித்திணை

### முல்லைத் திணைக்குப் புறம் இது. நிலத்தைக் கவரவும் நாடு பிடிக்கவும் நடத்தும் போர்

1007. வஞ்சி தானே முல்லையது புறனே.

வஞ்சிப் போர் பகைவர் நிலத்தைக் கவரும் ஆசையால் நிகழ்வது. பிற நாட்டுப் பகுதிகளைத் தமதாக்கிக் கொள்ள முயல்வது. இது முல்லைத் திணைக்குப் புறமாகும்.

### மண்ணைக் கவர ஆசைப்பட்டுப் பகை வேந்தன் மேல் படையெடுத்துச் சென்று போரிடுவது. நாட்டைக் கவர்வதுடன் காப்பதும் தொடர்பான போர் வஞ்சி

1008. எஞ்சா மண்நசை, வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்று.

இதன் குறிக்கோள் 'மண் நசை' ஆகும். அதாவது நிலப்பகுதியைக் கவரும் ஆசை. மண் – நிலப்பகுதி. நாடு – கவரும் போர் வஞ்சி.

குறையாத மண்ணாசையால் வேந்தனை மற்றொரு வேந்தன் அஞ்சும்படி படையெடுத்துச்சென்று, இருவரும் போர் செய்தலைக் குறிப்பது இது. இருவரது மண்ணாசையுமே காரணமாகிறது. நசை – விருப்பம், ஆசை. அடல் – வெல்லுதல்.

### வஞ்சிப்போர்த் துறைகள்

1009. இயங்குபடை அரவம், எரிபரந்து எடுத்தல்
வயங்கல் எய்திய பெருமை யானும்
கொடுத்தல் எய்திய கொடைமையானும்
அடுத்துஊர்ந்து அட்ட கொற்றத் தானும்
மாராயம் பெற்ற நெடுமொழி யானும்
பொருளின்று உய்த்த பேராண் பக்கமும்
வருவிசைப் புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமை யானும்
பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலையும்
வென்றோர் விளக்கமும் தோற்றோர் தேய்வும்
குன்றாச் சிறப்பின் கொற்ற வள்ளையும்
அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇக்
கழிபெருஞ் சிறப்பின் துறைபதின் மூன்றே.

நிலம் கவரும் போர்

1. படையெடுத்துப் போகும் ஆரவாரம் 2. பகைவர் ஊர்களில் நெருப்புப் பரவுமாறு கொளுத்துதல். 3. வீரத்துடன் விளங்கித் தோன்றும் பெருமை 4. வீரர்களுக்கு ஊக்கம் உண்டாக்குதற்காக நிலக்கொடை முதலானவை தருதல் 5. வென்று அடக்கி அழித்த வெற்றி 6. அரசனால் வீரர்கள் சிறப்புப்பட்டம் பெற்றுப் புகழப்படுதல் 7. பகைவரை ஒரு பொருட்டாகக் கருதாது அவர்களை அடக்கிய பேராண்மை 8. வெள்ளம் பெருக்கெடுத்து விசையோடு வரும்பொழுது, அதைத்தடுக்கும் ஒரு கல்லணை போலத் தனி ஒருவனாய்ப் பெரும் படை வெள்ளத்தைத் தடுக்கும் பெருமை 9. படைஞர்க்கு மிகுந்த உணவு வழங்கும் பெருஞ் சோற்றுநிலை 10. வென்றவர் ஒளிவீசிக் கொண்டாடுதல் 11. தோற்றவர் ஒளியிழந்து நலிதல் 12. வள்ளைப்பாட்டு - உலக்கைப்பாட்டு. கொற்றவள்ளை - வெற்றியைக் கொண்டாடும் பாட்டு. குறையாத சிறப்பினையுடைய இது வென்றவர் சிறப்பை மட்டுமல்லாமல், தோற்றவர் நலிவையும் அவரது ஊரழிவு முதலியவை பற்றியும் மனம் உருகப் பாடப்படுவது. 13. அழிவுதரும் படைக்கலத்தைத் (அம்பு, வேல், வாள் போன்றவற்றால்) தடுத்துப் புண்பட்டவீரர்களைத் தழுவிக் காக்கும் தழிஞ்சி. இவ்வாறு வரும் பதின்மூன்றும் வஞ்சிப்போர் நிகழ்வுகளாகும்.

படை எடுத்துப் போகும் ஆரவாரம், பகைவர் ஊர்களில் எரியூட்டுதல். வயங்கல் - வீரத்துடன் விளங்கித் தோன்றுதல். கொடுத்தல் - வீரர்களுக்கு, நிலமும் பிறவும் அளித்தல். அடுத்து ஊர்தல் - வென்று மேலே செல்லுதல். மாராயம் - அரசனாற் பெறும் சிறப்புப் பட்டப் பெயர். நெடுமொழி - புகழ். பொருள் இன்று - பகைவரைப் பொருட்படுத்தாது.

கற்சிறை - கல்லணை. ஒருவனே படைகளை அணை போலத் தடுத்தல். பிண்டம் - மிகுந்த உணவு. கொற்றவள்ளை - வெற்றியைச் சிறப்பித்தும் தோற்றவர்க்கு இரங்கியும் பாடும் வள்ளைப்பாட்டு. வள்ளைப் பாட்டு - உரல் பாட்டு என்பர். நெல் குற்றும் போது பாடுவது. அதே இசையில் வெற்றியைப் பாடி ஆடுவர். அழிபடை - அழிவு தரும் படைக்கலத்தால். தட்டோர் - தடுத்துப் புண்பட்ட வீரர்கள். தழிஞ்சி - தழுவிப் போற்றுதல்.

**தலைநகரங்களில் மதிலை முற்றுகையிடுதலும் தடுக்கும்நொச்சிப் போருமான மதிற்போர் பற்றிய உழிஞைத்திணை**

**1010. உழிஞை தானே மருதத்துப் புறனே.**

மதிற்போர்

உழிஞைப்பூச்சூடி மதிலை வளைத்துப் பெரிய நகரங்களையும் அரண்மனைகளையும் கைப்பற்றச் செய்யும் போர் இது. உள்ளிருப்போர் நொச்சிப்பூச்சூடித் தம்மைக் காத்துக்கொள்ள முயல்வர். இரண்டும் மதிற்போரே. இது மருதம் எனும் அகத்திணைக்குப் புறமாகும். மருத நிலத்தேதான் பெரிய நகரங்களும் தலைநகரங்களும் தோன்றி வளர்ந்திருந்தன. எனவே மதிலைப் பற்றிய போர், மருதத்திற்குப் புறனாயிற்று.

நகரங்களிலே தான் மதில்கள். அகழிகள். காவற்காடுகள் இருந்தன. உழிஞைப்போர் அதனால் மருதப் புறமாயிற்று.

### உழிஞைப் போர் இருவகை

**1011. முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்**
**அனைநெறி மரபிற்று ஆகும் என்ப.**

முழுமையான அடித்தளத்தையுடைய வலிய அரணை முற்றுகையிடுதலும் கைக்கொள்ளுதலும் ஆகிய அத்தகைய நெறி மரபினையுடையது உழிஞை.

முழுமுதல் அரணம் - மதில் முற்றுவதும் கையகப் படுத்துவதும் உழிஞையே.

**1012. அதுவே தானும் இருநால் வகைத்தே.**

உழிஞைப்போர் நிகழ்வுகள் எட்டுவகைப்படும்.

### உழிஞைப் போரின் எட்டு நிலைகள்

**1013. கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமும்**
**உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்**
**தொல்லெயிற்கு இவர்தலும் தோலின் பெருக்கமும்**
**அகத்தோன் செல்வமும் அன்றி முரணிய**
**புறத்தோன் அணங்கிய பக்கமும் திறம்பட**
**ஒருதான் மண்டிய குறுமையும் உடன்றோர்**
**வருபகை பேணார் ஆர்எயில் உளப்படச்**
**சொல்லப் பட்ட நாலிரு துறைத்தே.**

அது எட்டுவகைப் போர் நிகழ்வுகளை – துறைகளை உடையது. 1. பகைவர் தேயத்தைக் கைக்கொள்ள உறுதிபூண்ட கொற்றம். வெல்லுமுன்பே தம்மதென முடிவு செய்தல். 2. நினைத்ததை நினைத்தபடி முடிக்கும் வேந்தனது சிறப்பு 3.பழமையான எயிலின்மீது ஏறுதல். 4. மதிற்போராதலின் மேலிருந்து வரும்

படைக்கலங்களைத் தாங்கித் தடுக்கும் தோற்படைகளின் பெருக்கம் 5. மதிலின் அகத்தோனது பெருஞ்செல்வவளம் 6. அல்லாமல் பகைத்துவந்த மதிற் புறத்தோனாம் பகைவனை, அவ் அகத்தோன் வருத்திய நிலைமை 7. திறமை மிகத் தான் ஒருவனே சென்று நெருங்கிப் போர் செய்தல் (குற்றுழிஞை), 8. பகைத்து வருகின்றவர்களின் வலிமையைப் பொருட்படுத்தாத அரிய மதிலின் சிறப்பு. இவ்வாறு எட்டுவகையின உழிஞைப்போர் ஆகும்.

மேலும் பனிரண்டு துறைகளும் உள. இவை யாவும் உழிஞைப் போரில் முற்றமுடிய நடக்குமென்றோ, தொடர்ச்சியாக நடக்குமென்றோ கருதவேண்டாம். இவை தாக்கும் உழிஞைக்கும் காக்கும் நொச்சிக்கும் உரியன. இவற்றுள் நடப்பவை நடக்கும். போர் ஒன்றே. உழிஞை நொச்சி என்பன போர்வீரர்களின் அடையாளப் பூக்கள். இன்றேல், குழப்பத்தில் தன் பக்கத்தவனையே தாக்க நேருமல்லவா?

கொள்ளார் - தன் ஆணையை ஏற்காத பகைவர். தேஎம் - தேயம். குறித்தல் - வெல்ல முடிவுசெய்தல். உள்ளியது - நினைத்ததை. தொல் எயிற்கு - பழைமையான மதிலைப் பிடிக்க. இவர்தலும் - மேலே ஏறுதல். தோல் - கேடயப் படை. தற்காப்புக்கு உதவுவது. மதிற் போரில் இதன் தேவை கூடுதல். புறத்தோன் - முற்றுகையிட்டோனை. அணங்கிய - தாக்கி வருத்திய. தான் ஒருவனேயாகத் தாக்குதல். குற்றுழிஞை - குறுமை. சினந்து வரும் பகையைப் பேணாத அரிய மதிலின் சிறப்பு.

**மதிலைக் காக்கும் 'நொச்சி'யானுடன், அதைத் தாக்கும்**
**உழிஞையானின் போர் முயற்சிகள்**

**1014. குடையும் வாளும் நாள்கோள், அன்றி**
**மடையமை ஏணிமிசை மயக்கமும் கடைஇச்**
**சுற்றுஅமர் ஒழிய வென்றுகைக் கொண்டு**
**முற்றிய முதிர்வும் அன்றிமுற்றிய**
**அகத்தோன் வீழ்ந்த நொச்சியும் மற்றதன்**
**புறத்தோன் வீழ்ந்த புதுமை யானும்**
**நீர்ச்செரு வீழ்ந்த பாசியும் அதாஅன்று**
**ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்**
**மதின்மிசைக்கு இவர்ந்தோன் பக்கமும் இகன்மதில்**
**குடுமி கொண்ட மண்ணுமங் கலமும்**
**வென்ற வாளின் மண்ணோடு ஒன்றத்**
**தொகைநிலை என்னும் துறையொடு தொகைஇ**
**வகைநான் மூன்றே துறைஎன மொழிப.**

**உழிஞையான் போர் முயற்சிகளும்**

**நொச்சியானது காக்கும் முறைகளும்**

1. குடை நாட்கோள் 2. வாள் நாட்கோள் போருக்குப் புறப்படு முன் நல்லநாள் பார்த்து, வெண் கொற்றக்குடை வீரவாள் இவற்றைப் ஊர்ப் புறத்தே எடுத்துச் சென்று பாடி வீட்டில் வைப்பர். பிறகு எப்போது வேண்டுமாயினும் சூழலறிந்து புறப்படுவர் (நல்ல நாள், முழுத்தம் பார்ப்பது தமிழர் நம்பிக்கையே) 3.படியுள்ள ஏணியை மதிலிற் சார்த்தி, அதனின்று செய்யும் போர் 4. முன்னேறி மதிலைச் சுற்றிலும் போரை முடித்து வென்று புறமதிலைக் கைக்கொண்டு, பிறகு அகமதிலுக்குள் போர் செய்ய முற்றுகை இடுவர். 5. முற்றப்பட்ட மதிலின் அகத்தோன் ஆகிய நொச்சியான் தோற்றுவிழுதல் 6. அம்மதிலின் புறத்தோனாய் முற்றுகையிட்டோன் தோற்று வீழ்தலால், போர் மாற்றமாகும் புதுமை 7. அகழியில் செய்யும் போர் நீர்ச்செரு எனப்படும். அது பாசிபோல் மிதந்து, நீந்திச் செய்வதால் பாசி நிலை எனப்படும். 8. அதுவன்றி ஊரினுள் புகுந்து செய்யும் போரில் நொச்சியான் மறத்துடன் போரிட்டுத் தோற்றல். 9. மதிலைக் கைப்பற்றி அதன்மீது ஏறியவன் வெற்றிச் சிறப்பு 10. பகைவரது மதிலை வென்று அதன் உச்சியைக் கைப்பற்றியதற்கு அடையாளமாக, அதனைப் புனித நீராட்டிக் கொண்டாடுவது மண்ணுமங்கலம் எனப்படும். 11. வீரவாளையும் அவ்வாறு நன்னீராட்டிக் கொண்டாடுவது வாண்மங்கலம். 12. படைகளை ஒருவழிக் கூட்டிப் பாராட்டுதல். இவை உழிஞைப்போர் பற்றியன.

**குடை நாட்கோள், வாள் நாட்கோள் - நல்ல நாள் பார்த்துப் புறவீடு விடுதல். போருக்குப் புறப்பாடு. மடை - படிகள். ஏணிமிசை மயக்கம் - மதிற் போராதலின் ஏணியில் ஏறிச் செய்யும் போர். கடைஇ - படை செல்லுமாறு முன்னேறி. சுற்று அமர் - மதிற் சுற்றுப் போர். முற்றிய முதிர்வு - முற்றுகை. அகத்தோன் மதிலைக் காப்பவன், நொச்சிப்பூச் சூடியவன். முற்றுகை இடுபவன் உழிஞைப்பூச்சூடியிருப்பான். புறத்தோன் வீழ்ந்த புதுமை - மதிலைத் தாக்கச் சென்றவன் தோற்றுவீழ்ந்த போர்மாற்றம். நீர்ச்செரு - அகழிப்போர். பாசி - பாசிபோல் நீந்திப் போரிடல். ஊர்ச்செரு - ஊரினுள் புகுந்து போரிடல். மதில் மேல் ஏறியவன் நிலை. குடுமி கொண்ட மண்ணுமங்கலம் - மதிலுச்சியைக் கைப்பற்றி. அதை நீராட்டிக் கொண்டாடுதல். இதுவே குடமுழுக்கு நன்னீராட்டுவதாகவும் நீர் தெளித்தலாகவும் சமய உலகிற் புகுந்தன. மண்ணுதல் - நீராட்டுதல். வெற்றி தந்த வாளைக் கழுவி நீராட்டிக் கொண்டாடுதல். தொகைநிலை - படைகளை ஒருவழித் தொகுத்துப் பாராட்டுதல்.**

## தும்பைத் திணை

### நால்வகைப் படைகளும் ஒரு பரந்த போர்க்களத்தில் நேருக்குநேர் நின்று போர் செய்வது தும்பை

**1015. தும்பை தானே நெய்தலது புறனே.**

தும்பைத்திணை

தும்பை என்பது கடும்போர். அது இரங்கற் பொருட்டாகிய நெய்தலுக்குப் புறமாகும்.

தும்பை - வலிமையை நில்லநாட்டச் செய்யும் கடும் போர். நெய்தல் - இரங்கல் பொருட்டாதலின் அதன் புறமாயிற்றுத் தும்பைப் போர்.

ஆநிரைப் போர் வெட்சியும் (கரந்தையும்), நாடும் நிலமும் பற்றியபோர் வஞ்சி, மதிற்போர் உழிஞை (நொச்சி), வலிமையைக் காட்ட நடத்தும் போர் தும்பை - இவை தனித்தனிப் போர் வகைகள்

### தும்பைப் போருக்குக் காரணம் ஒருவனைவிட ஒருவன் வலியவன் என்பதை நிலைநிறுத்துவதே

**1016. மைந்துபொரு ளாக வந்த வேந்தனைச்**
**சென்றுதலை அழிக்கும் சிறப்பிற் றென்ப.**

போரிடும் வலிமையையே காரணமாகக் கொண்டு, போரிட வந்த வேந்தனைத் தானும் எதிர்சென்று அவனை முறியடிக்கும் சிறப்பினையுடையது இத் தும்பைப் போர்.

மைந்து - வலிமை. வலிமை கருதி வந்தவனை எதிர்த்து அழிக்கும் இருவரது போருடற்றலும் தும்பை எனப்படும்.

### தும்பைப்போர் மிக்க கடியபோர் அதன் கடுமையும் கொடுமையும்

**1017. கணையும் வேலும் துணையுற மொய்த்தலின்**
**சென்ற உயிரின் நின்ற யாக்கை**
**இருநிலம் தீண்டா அருநிலை வகையோடு**
**இருபாற் பட்ட ஒருசிறப் பின்றே.**

ஒரு வீரனின் உடலில் அம்புகளும் வேல்களும் நெருக்கமாகப் பாய்ந்து உடல் முழுதுமிருத்தலால் உயிர் சென்ற பிறகும் யாக்கை கீழே விழாமல் நிற்கிறது. அது மிகப் பல கால்களையுடைய அட்டையின் உடம்பு தரையில் படுதலில்லாதவாறுபோல, இவ்வீரன் உடலும் தரையில் விழாது அம்பும் வேலும் தாங்கிநிற்கின்றன. மேலும் அட்டை இரண்டாக வெட்டினாலும் உயிர் போகாது

ஊர்ந்து செல்லும்.வீரனும் இறந்த பின்பும் சினத்துடன் கூடிய போர்முகம் காட்டுகின்றான். இது இரு பக்கத்தாரும் சமமாகப் போரிடுதலால், ஒரு பக்கத்திற்கே சிறப்பென்று கூறவியலாத நிலை. இது போர் மறவனின் வீரச் சிறப்பை மட்டுமன்றிப் போரின் கடுமையையும் காட்டுகிறது.

அட்டை போல் இறந்தும் இறவாத நிலை. கணைகள், வேல்கள், உடம்பு முழுதும் மொய்த்துள்ளன. உயிர் போயும், உடம்பு நிற்கிறது. யாக்கை - உடம்பு. இருநிலம் - பூமி. நிலத்தில் விழாது நூற்றுக்கணக்கான கால்களையுடைய அட்டை போல் உடம்பு நிற்கிறது. இருபாற்பட்ட சிறப்பு - இருவரும் சமமாகப் போரிடும் சிறப்பு. ஒரு சிறப்பு இன்று - ஒருபக்கம் மட்டும் சிறப்புக் கூற இயலா நிலை. அரு - அட்டை. அட்டை கால்கள் பலவாதலால் மண்மேல் கிடந்து ஊரும். கணைகளும் வேல்களும் மொய்த்தலால், இறந்த வீரன் உடல் நிலத்தில் விழவில்லை. அட்டைகள் இருதுண்டாக வெட்டினும் உயிர் வாழும். வீரனும் மாய்ந்த பிற்பாடும், வீரத்துடிப்பு இருக்கும்.

### தும்பைத் திணையின் போர் நிகழ்வுகள்

1018. தானை யானை குதிரை என்ற
நோனார் உட்கும் மூவகை நிலையும்
வேன்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன்
தான் மீண்டு எறிந்த தார்நிலை, அன்றியும்
இருவர் தலைவர் தபுதிப் பக்கமும்
ஒருவன் ஒருவனை உடைபடை புக்குக்
கூழை தாங்கிய எருமையும் படைஅறுத்துப்
பாழி கொள்ளும் ஏமத் தானும்
களிறு எறிந்து எதிர்ந்தோர் பாடும் களிற்றொடு
பட்ட வேந்தனை அட்டவேந்தன்
வாளோர் ஆடும் அமலையும், வாள்வாய்த்து
இருபெரு வேந்தர் தாமும் சுற்றமும்
ஒருவரும் ஒழியாத் தொகைநிலைக் கண்ணும்
செருவகத்து இறைவன் வீழ்ந்தெனச் சினைஇ
ஒருவன் மண்டிய நல்லிசை நிலையும்
பல்படை ஒருவற்கு உடைதலின், மற்றவன்
ஒள்வாள் வீசிய நூழிலும் உளப்படப்
புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்தே.

1. பகைவர்கள் அஞ்சும்படியான தானைநிலை (காலாட் படை) 2. யானை நிலை 3. குதிரை நிலை.4. வேற்படை மிக்க வேந்தனைப் பகைவீரர்கள் மொய்த்துச் சூழ்ந்த போது, முன்னணிப் படையில் ஒருவன் மட்டும் அதில் தப்பித்து மீண்டு, பகைவர்களை வெட்டி வீழ்த்துவது தார்நிலை. 5. இருபக்கத்துத் தலைவர்களும் இறந்து போன நிலை. 6. உடைந்து தோற்று ஓடிவரும் தன் படையுள் புகுந்து எதிர்த்த ஒருவனைத்தான் ஒருவனாக வென்று மேல்வரும் கூழைப் படையையும் (பின்னணிப் படையை) தடுப்பது எருமை நிலை. 7. தன் மீது பாய்ந்த படைக்கலத்தை அறுத்தெடுத்து வீசி விட்டு புண்பட்ட தன் உடல் வலிமையால் மட்டுமே போரிடுவது பாழி நிலை 8. களிற்றை வெட்டி வீழ்த்தி அதனை எதிர்த்த வீரர்களின் பெருமை 9. தன் களிற்றுடன் தானும் இறந்த வேந்தனைக் கொன்ற வென்ற வேந்தனின் வாள் வீரர் ஆடுவது அமலை ஆட்டம் 10. வாளால் வெட்டுண்டு, எதிரெதிர் எதிர்த்து நின்ற இருபெரு வேந்தரும் சுற்றமாம் படைத்தளபதிகளும் வீரரும் ஒருவரும் எஞ்சாது அனைவரும் இறந்துபோவது தொகைநிலை. 11.போரில் தன் மன்னன் இறந்து வீழ்ந்தானெனச் சினங் கொண்டு, தனி ஒருவனே போரினுட் புகுந்து போரிடுவது புகழ்மிகுநிலை 12. தனி ஒருவனாகப் பல படைகளும் உடைந்து தனக்குத் தோற்று ஓடுதலினால், அவ்வீரன் தனது ஒளி வீசும் வாளைச் சுழற்றிஆடுவது நூழிலாட்டு, இவை மிகுந்த அவலம் சார்ந்த பன்னிரு துறைகளாகும்.

நோனார் - பகைவர். பகைவர் அஞ்சும்படியான தானை நிலை (காலாட் படை), யானைநிலை, குதிரை நிலை, வேந்தனைப் பகைவீரர் மொய்த்த வழி, தான் ஒருவனாய் அவரை வென்று வீழ்த்திக் காத்த, தார்நிலை. இருவர் தலைவரும் இறந்துபோனது ஒரு நிலை. தபுதி - தவறுதல். இறத்தல். தன் படை உடைந்து பின் வாங்கி ஓடிவர அதனுட் புகுந்து, கூழைப் படையை (பின்னணிப் படை) தான் ஒருவனே தாங்கித் தடுக்கும் எருமை நிலை. தன் மீது பாய்ந்த படைக் கலத்தை அறுத்தெடுத்து, தன் உடல்வலியால் மட்டுமே போரிடும் பாழிநிலை. பாடு - பெருமை. பட்ட - இறந்த. அட்ட - வென்ற. வாளோர் - வென்ற வேந்தனின் வீரர்கள் வாளுடன் ஆடுதல். அமலை - கூடி ஆடுதல், வாய்த்து - வெட்டப்பட்டு. தொகைநிலை - இருபக்கத்து அனைவரும். இறைவன் - மன்னன். மண்டிய - நெருங்கிப் போரிட்ட. இசை - புகழ். நூழில் - பலரைக் கொன்று தனி ஒருவனே ஆடும் ஆட்டம். புல்லித் தோன்றுதல் - மிகுந்த அவலத்தால் பொலிவிழந்து தோன்றுதல்.

## வாகைத்திணை

### போர் வெற்றியையும் வாழ்க்கை வெற்றியையும் பாடும் வாகை. அனைத்துப்போருக்கும் பொது.

**1019. வாகை தானே பாலையது புறனே.**

வாகை மாலை சூடுவது போர் வெற்றிக்கு அடையாளம். சிலர் வாழ்விலும் விளையாட்டிலும் கூட வாகை சூடுவர். பல போர்களிலும் பெறும் வெற்றியெல்லாம் வாகைதானே. அதனால் அகத்தில் பொதுத்திணையான பாலைக்கு இது புறமாயிற்று.

### தத்தமது இயற்கைத் தகுதியில் தாம்தாம் மேம்படுவதே வாகை – தொல்காப்பியரின் தொலைநோக்கு விளக்கம் இது.

**1020. தாவில் கொள்கைத் தத்தங் கூற்றைப்**
**பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப.**

குற்றமற்ற கோட்பாடுகளையுடைய பெருமக்கள் தத்தமது துறையில், பிறரினும் மேம்பட வேறுபாடு காட்டி, தமது தகுதி உயர்வைப் புலப்படுத்துதல் வாகையாகும். போரும் இதில் அடங்கும்.

தாஇல் – குற்றமற்ற. கொள்கை – கோட்பாடுகள். தத்தம் கூற்றை – அவரவர் தத்தம் இயல்பை. மிகுதிப் படுத்தல் – மேம்படுதல். போர் வென்றி மட்டுமன்று, அவரவர் தத்தமது கொள்கை பணி முயற்சிகளில் பிறரினும் மேம்படுவன யாவும் வாகையே. தொல்லாசான் தொலைநோக்கு விளக்கம் இது.

### உலகில் உயர்ந்தோர் எனப்படுவோர்க்கான வாகை வகைகள்

**1021. அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்**
**ஐவகை மரபின் அரசர் பக்கமும்**
**இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்**
**மறுவில் செய்தி மூவகைக் காலமும்**
**நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்**
**நாலிரு வழக்கின் தாபதப் பக்கமும்**
**பாலறி மரபின் பொருநர் கண்ணும்**
**அனைநிலை வகையோடு ஆங்கெழு வகையின்**
**தொகைநிலை பெற்றது என்மனார் புலவர்.**

1. அறுவகைப் பட்ட பார்ப்பன வாகை.

ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்

2. ஐவகை மரபின் அரசவாகை

கற்றல், வேட்டல், ஈதல், படைவழங்கிப் பயிற்றுவித்தல், குடியோம்புதல்

3. ஆறுவகைப்பணியுடைய வணிகர், வேளாளர் வாகை

கற்றல், உழுதொழில், ஈதல், வாணிகம், விருந்தோம்பல். ஆநிரை காத்தல்.

4. இறந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் மூன்றும் பற்றிய குற்றமற்ற செய்திகளை நெறியறிந்து செய்யும் அறிவர் வாகை. இவர்கள் வானியல் வல்லுநர். காலம், பருவம் என்பன பற்றி இவர்களே மக்களுக்கு அறிவிப்பர். மேலும் மூவகைக் கால வானியல்நிகழ்வுகள், உலகியல் நிகழ்வுகள் யாவற்றையும் முன்னறிந்து கூறுவர். கணியர் என்போரும் இவரே என்பர் உரையாசிரியர்.

5. தவம் செய்வார் கைக்கொள்ளும் எட்டுவகை வழக்கங்கள்; நீராடல், நிலத்திடை வாழ்தல், தோலுடுத்தல், சடை புனைதல், ஊரினுள் புகாமை, காட்டிலுள்ள உணவுண்ணல், தெய்வபூசை, விருந்தோம்பல்.

6. பொருநர் வாகை: பாடினியர், பாணர் என இருபாலாக அறியப்பட்ட பொருநர் வாழ்வு.

7. அதுபோன்ற பிற வகைகள். இவை ஏழும் உயர்ந்தோர் வாழ்வியல் உயர்வு காட்டும் வாகைத் துறைகள்.

இவை உரையாசிரியர்கள் தருவனவே. தொல்காப்பியர் தொகை கூறினாரே தவிர, வகை கூறினாரல்லர். கருத்து வேறுபட வாய்ப்புள்ளவை இவை.

**அறிவர் மூவகைக் காலமும் அறிந்து குற்றமற்ற வகையில் வழிகாட்டுபவர். அறிவன் - கணியன்.**

(சங்கறுத்து அணிகள் செய்தல் பார்ப்பனர் தொழில்களுள் ஒன்று எனச்சங்கப் பாடல்களில் வருகிறது. பார்ப்பான் தலைவனுக்குப் பாங்கனாகவும் தூதுவனாகவும் தொல்காப்பியத்தில் குறிக்கப்படுகின்றான் ஆதலின் இவை யாவும் மேலும் ஆராயத் தக்கன. இடைக் கால வயப்பட்ட உரைகள் இவை)

## வாகைத் திணையின் உட்துறைகள் வெற்றியைக் கொண்டாடும் விழாக் கோலங்கள்

**1022. கூதிர் வேனில் என்றுஇரு பாசறைக்**
**காதலின் ஒன்றிக் கண்ணிய மரபினும்**
**ஏரோர் களவழி அன்றிக் களவழித்**
**தேரோர் தோற்றிய வென்றியும் தேரோர்**
**வென்ற கோமான் முன்தேர்க் குரவையும்**

பெரும்பகை தாங்கும் வேலி னானும்
அரும்பகை தாங்கும் ஆற்ற லானும்
புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கமும்
ஒல்லார் நாணப் பெரியவர்க் கண்ணிச்
சொல்லிய வகையின் ஒன்றொடு புணர்த்து
தொல்லுயிர் வழங்கிய அவிப்பலி யானும்
ஒல்லார் இடவயின் புல்லிய பாங்கினும்
பகட்டி னானும் ஆவி னானும்
துகள்தபு சிறப்பின் சான்றோர் பக்கமும்
கட்டில் நீத்த பாலி னானும்
எட்டுவகை நுதலிய அவையத் தானும்
கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை யானும்
இடையில் வண்புகழ்க் கொடைமை யானும்
பிழைத்தோர்த் தாங்கும் காவ லானும்
பொருளொடு புணர்ந்த பக்கத் தானும்
அருளொடு புணர்ந்த அகற்சி யானும்
காமம் நீத்த பாலி னானும்என்று
இருபாற் பட்ட ஒன்பதின் துறைத்தே.

வென்றி வாகையும் வாழ்க்கை வெற்றி வாகையும்

1. கூதிர்ப் பாசறை 2. வேனிற் பாசறை (போர் முடியாமையின் தலைவி மாட்டுக் கொண்ட காதலில் பொருந்திக் கட்டுப்பாட்டுடன் போரிடத்து இருத்தல்). 2.ஏர் உழவர் 'களவழி' பாடுவது போலத் தேருடைய வீரர் வெற்றி பெற்றுத் தோற்றுவித்த 'போர்க் களவழி'. 3. வென்ற அரசனின் வீரர்கள் அவனது தேர்முன் ஆடிப்பாடு முன் தேர்க்குரவை.4. பெரும் பகையையும் தடுத்து வெல்லும் வே வாழ்த்துதல். 5. அரிய பகையைத் தாங்கும் ஆற்றல். 6.நிலைய வாழ்க்கையின் வீர வல்லாண்மையைப் பாடுதல். 7. பகைவர் வெட்கப்பட போ தலைவர்களைக் காக்கக் கருதி, வஞ்சினம் சொல்லிய வகையினொடு பொருந் இவை யாவும் பழைமையான உயிரை அவிப்பலி கொடுத்தல். இவை யாவு ஒருவகையின. 8. பகைவரிடம் பகைநட்பாகக் கொண்டு ஒழுகும் பாங்கு. 9.காளைகளைக் காத்தல். 10. ஆக்களைக் காத்தல். இவற்றைச் சான்றோர் காப்பர் 11. அரசு கட்டிலைத் துறந்த வாகை. 12. எட்டுவகைச் சிறப்பை நுவலும் அறங்கூறு அவையம். அவை வருமாறு : குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவு நிலைமை, அழுக்காறாமை, அவாவின்மை. 13.கட்டுப்பாடமைந்த குடும்ப

ஒழுக்கத்துக்குரிய அன்பு 14. தடைப்படாத மிக்க புகழைத்தரும் கொடைப்பண்பு 15. பிழை செய்தோரைத் திருத்தி நல்வழிப்படுத்தும் காவல் முறை. 16. பொருட்செல்வத்துடன் சேர்ந்த வெற்றிவாகை. 17. அருளொடு சேர்ந்த துறவு வாகை 18. காம ஒழுக்கத்தைத் துறந்த தூய துறவு வாழ்வு முறை. இவை பதினெட்டும் வாகைத் திணையின் வகைகளாகும்.

கூதிர்ப்பாசறை - கூதிர் காலத்தும் போர் முடியாமையின் பாசறையிலிருத்தல். வேனிற்பாசறை - வேனிற் காலத்தும் அவ்வாறிருத்தல். காதலின் ஒன்றி - விருப்பத்தோடிருத்தலையும் சுட்டும்.

ஏரோராம் உழவர் நெல் அறுவடை செய்து கொண்டாடும் விழா 'களவழி'. தேரோராம் வீரரும் வெற்றி விழா எடுப்பர்.

வென்ற மன்னனின் தேர்முன் ஆடுவது முன்தேர்க் குரவை. பகையைத் தடுக்கும் வேற்படையைப் புகழ்வர். ஆற்றல் - ஆற்றலைப் பாடுதல்.

புல்லா - நிலையற்ற. வல்லாண்மையைப் பாடுதல். ஒல்லார் - பகைவர். பெரியவர் - தலைவர். கண்ணி - காக்கக் கருதி. சொல்லியவகை - வஞ்சினம் கூறியது. தொல் உயிர் வழங்கல் - உயிர் விட்டு அவிப்பலி கொடுத்தல். இதுவரை ஒரு பிரிவு.

பிறிதொரு வகை : ஒல்லார் - பகைவர். பகைவரிடம் பொருந்திப் பகையை நட்பாக்கும் பண்பு. புல்லிய - பொருந்திய. பகடு - காளை. ஆ - பசு. இவற்றைக் காக்கும் குற்றமற்ற சிறப்பு. இவற்றைக் காப்போர் சான்றோர் எனப்படுகின்றனர்.

கட்டில் நீத்த பால் - அரசு கட்டிலைத் துறத்தல். அறங்கூறு அவையத் தாரது எட்டுவகைச் சிறப்பு; குடிப்பிறப்பு கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவுநிலைமை, அழுக்காறாமை, அவாவின்மை. கட்டமை ஒழுக்கம் - குடும்ப ஒழுக்கம், இல்லறம். கண்ணுமை - அன்பும் அருளும். கொடையில் மேம்படுதலும் ஒருவகை வாகை. பிழை செய்தோரைத் திருத்திக் காக்கும் காவல்முறை (ஆட்சி). பொருட்செல்வமேம்பாடு. அருளுடன் இவ்வுலகை அகன்று நீத்தாராய்த் தாமரையிலைத் தண்ணீர் போல் வாழ்தல். துறவுள்ளம் : காமம் நீத்த பால் - காம இன்பத்தைத் துறந்த வாழ்வு நெறி. இவ்வாறு போர்வென்றியும் வாழ்க்கை வென்றியுமான இருபகுதிப் பட்டது வாகைத்திணை.

### காஞ்சித்திணை

**1023. காஞ்சி தானே பெருந்திணைப் புறனே.**

காஞ்சி என்பது நிலையாமை. உலகில் நிலையாமையே மிகுதி. பேரவலமாக நினைப்பன பல. பெருந்திணையும் உலகில் மிகுதி. எல்லை கடந்ததும் அது. எனவே காஞ்சி பெருந்திணைக்குப் புறனாயிற்று.

**காஞ்சி - நிலையாமை. பெருந்திணைபோல, நிலையாமையின் மிகுதி கருதி இவை இயைபுபடுத்தப் பட்டுள்ளன.**

நிலையாமையை விளக்கும் திணை, போரில் ஏற்படும் நிலையாமை மட்டுமன்றி, உலகப் பொது நிலையாமையையும் கூறுவது, தொல்காப்பியரின் விழுமிய நோக்கை விளக்குகிறது.

### காஞ்சித்திணை விளக்கம்

**1024. பாங்கருஞ் சிறப்பின் பல்லாற் றானும்**
**நில்லா உலகம் புல்லிய நெறித்தே.**

ஒப்பற்ற சிறப்புடன், பல வழியாலும் நிலையற்ற உலகத்தைப் பற்றிய அடிக்கருத்துக்களை உடையது இது.

**நிலை நில்லா உலகம் பற்றிப் பாடுவது. இதனைப் பாங்கு அரும் சிறப்பினையுடையதாய்ப் பலவகையாலும் நிலை நில்லாதது என்றது, இதுவே இவ்வுலகின் தனிப்பெருமை என்பது போல் உளது. யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வ நிலையாமை என முடிவே இல்லாத பலவகைகளை உடையது இது. பாங்கு + அரும் = ஒப்பு இல்லாத.**

### காஞ்சித் திணையின் உட்பிரிவுத்துறைகள்

**1025. மாற்றரும் கூற்றம் சாற்றிய பெருமையும்**
**கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்**
**பண்புற வரூஉம் பகுதி நோக்கிப்**
**புண்கிழித்து முடியும் மறத்தி னானும்**
**ஏமச் சுற்றம் இன்றிப் புண்ணோன்**
**பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும்**
**இன்னன்என்று இரங்கிய மன்னை யானும்**
**இன்னது பிழைப்பின் இதுவா கியர்எனத்**
**துன்னரும் சிறப்பின் வஞ்சினத் தானும்**
**இன்னகை மனைவி பேஎய்ப் புண்ணோன்**

துன்னுதல் கழந்த தொடாஅக் காஞ்சியும்
நீத்த கணவற் தீர்த்த வேலின்
பெயர்த்த மனைவி ஆஞ்சி யானும்
நிகர்த்து மேல்வந்த வேந்த னொடுமுதுகுடி
மகட்பாடு அஞ்சிய மகட்பா லானும்
முலையும் முகனும் சேர்த்திக் கொண்டோன்
தலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ
ஈரைந்து ஆகும் என்ப; பேரிசை
மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம்
ஆய்ந்த பூசல் மயக்கத் தானும்
தாமே எய்திய தாங்கரும் பையுளும்

கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதா னந்தமும்
நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்த
தனிமகள் புலம்பிய முதுபாலையும்
கழிந்தோர் தேஎத்து அழிபடர் உறீஇ
ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்

காதலி இழந்த தபுதார நிலையும்
காதலன்இழந்த தாபத நிலையும்
நல்லோள் கணவனொடு நனிஅழல் புகீஇச்
சொல்லிடை யீட்ட பாலை நிலையும்
ஆய்பெருஞ் சிறப்பின் புதல்வற் பயந்த

தாய்தப வரூஉம் தலைப்பெயல் நிலையும்
மலர்தலை உலகத்து மரபுநன்கு அறியப்
பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்தொடு
நிறையருஞ் சிறப்பின் துறைஇரண்டு உடைத்தே.

நிலையாமை பற்றிய காஞ்சித்திணை இரு பகுதிகளாகப் பகுத்துக் கூறப்படுகிறது.

1. மாற்றுவதற்கு அரிய கூற்றுவனின் கொடுமையைக் கூறுவது பெருங்காஞ்சி. 2. இளமை கழிந்த முதியவீரர்கள் மற்றவர்க்குக் கூறிய அறிவுரை முதுகாஞ்சி. 3. மறப்பண்பு பொருந்திவரும் இயல்பு கருதி, தன் மேற்பட்ட புண் கிழித்துச் சாவது மறக்காஞ்சி, 4. பாதுகாக்கும் சுற்றத்தார் எவருமின்றிப் புண்பட்டுப்

போர்க்களத்தே கிடந்தோனைப் பேய்கள் பாதுகாத்தது பேய்க் காஞ்சி 5. வீரனை இத்தகையன் என அவன் இறந்த பிறகு சொல்லி இரங்குவது மன்னைக்காஞ்சி 6. 'யான் இன்னதை முடிக்காது விடுவேனாயின், இப்படி ஆகுக' என மேற்கொள்ளுதற்கரிய சூளுரை கூறுவது வஞ்சினக் காஞ்சி. 7. இனிய புன்னகையுடையளாம் மனைவி இப்போது, புண்பட்டுக் கிடந்தோனைக் கண்டு அவனைப் பேய் தொடாதவாறு காத்தது தொடாக் காஞ்சி 8. இறந்துபோன கணவனைச் சாகடித்த வேலினால், மனைவி தன் உயிரையும் மாய்த்துக் கொள்ளுதல் ஆஞ்சிக் காஞ்சி, 9. தம்மைப் பகைத்துப் படையெடுத்துச் செருக்குடன் வந்த வேந்தனுக்குத் 'தொல்'குடிப் பெருமக்கள் தம் மகளை மணம் செய்து கொடுக்க மறுப்பது மகட்பாற் காஞ்சி. 10.போர்க்களத்தில் இறந்து கிடக்கும் கணவனுடன் தன் மார்பையும் முகத்தையும் சார்த்திக் கிடந்து, தலையொடு தலை மோதிச்சாவது. இவை பத்தும் ஒருவகை என்பர் தொல்காப்பியர். இவை போர் பற்றியன. இனி வருவன போருக்குமட்டுமன்றிப் பொதுவானவையும் ஆகும்.

1. மிக்க புகழுடன் இறந்த வீரமகனைச் சுற்றத்தார் சுற்றி நின்று, அவன் பெருமைகளைச் சொல்லிப் புலம்புதல். 2. யாருமின்றித் தாமே தனித்திருந்து, தம் கணவன்மார் இறந்து கிடப்பதைக் கண்டு அழுகின்ற தாங்குதற்கரிய துன்பம். 3.ஒரு மனைவி தன் கணவனொடு இறந்து கிடந்த துன்பத்தைப் பார்த்து, அவ்வழிச் செல்வோர் கூறிய மூதானந்தம். 4. மிக்க வெப்பமுள்ள பாலை வழியில், கணவனை இழந்து, ஒருபெண் தன்னந்தனியளாய்ப் புலம்புகின்ற முதுபாலை. 5. பொதுவாக இறந்து போனவர்களைப் பற்றி, இருப்பவர் பலர் கூடிப் பெருந்துன்பப்பட்டுப் புலம்பும் கையறுநிலை. 6. காதலியை இழந்த கணவனின் நிலை தபுதார நிலை. 7. காதலனை இழந்த மனைவியின் நிலை – அவள் தவம் நோற்கும் நிலை – தாபதநிலை. 8. கற்புடைய நல்லவள் ஒருத்தி, தன் கணவனுடன் எரியும் நெருப்பில் விழுந்து, தன் அவலத்தினைச் சொல்லி மடிந்த பாலைநிலை. 9. மிக்க சிறப்பினையுடைய புதல்வனைப் பயந்த தாய், அவனைப் போர்க்களத்தில் மடிந்து கிடக்கக் கண்டு தானும் மடிந்த தலைப்பெயல் நிலை. 10. பரந்த இடத்தையுடைய இவ்வுலகின் இயல்பை நன்கு அறியச் செய்கின்ற, உலகே பலரும் மாய்ந்து போகவும் தான் மாயாது நிலையாக இருக்கின்ற சுடுகாட்டை வாழ்த்தும் காடு வாழ்த்து. இவை பத்தும், முன்னைய பத்துமாகிய துறைகள் இரண்டு பகுதிப்படும்.

**மாற்ற முடியாத கூற்றுவனைப் பற்றிய பெருங்காஞ்சி. கழிந்தோர் – அகவை கடந்தோர், ஒழிந்தோர் – இளையோர். முதுமை – அறிவுரை. இது முதுகாஞ்சி. வீரன் வீரப் பண்பால் தன் புண் கிழித்து முடியும் மறம் – மறக்காஞ்சி. ஏமம் – காப்பு. யாரும் இன்மையால் பேய் காக்கும் பேய்க்**

காஞ்சி. இன்னான் என இறந்த வீரனுக்கு இரங்குவது மன்னைக்காஞ்சி. மன் - கழிந்ததைக் குறிக்கும் இடைச்சொல். வஞ்சினக்காஞ்சி சூளுரைப்பது. துன்ன அரும் - நெருங்குதற்கு அரிய. பேய் கணவனைத் தொடாதபடி மனைவி, புண்பட்ட கணவனைக் காக்கும் தொடாக் காஞ்சி. இறந்த கணவனைக் கொன்ற வேலை எடுத்து அதனாலேதன் உயிரையும் நீத்த மனைவி பற்றியது ஆஞ்சிக் காஞ்சி. ஆஞ்சி - அச்சம். தம்மை எதிர்த்துச் செருக்குடன் வந்து வேந்தன் ஒருவன் பெண் கேட்க, தொல்குடியினர் தம் மகளைக் கொடுக்க மறுப்பது மகட்பாற் காஞ்சி. இங்கு அச்சம் மகளின் வாழ்வு கெடுமே என்பது. கணவனுடன் தன் மார்பையும் முகத்தையும் சேர்த்துத் தலையொடுதலை மோதி முடியும் காஞ்சி ஒன்று. இவை பத்தும் போரினால் ஏற்படும் நிலையாமை பற்றியன. பேரிசை - மிக்க புகழ். மகனது வீரம். ஆய்ந்த பூசல் - நடந்ததை அரற்றுதல். சிறைப்பட்டார் சுற்றமின்றித் தாமே அழுதல். பையுள் - துன்பம். படர்ச்சி - உடன் சாதல் இது. மூதானந்தம். சுரம் - பாலைவழி. தனிமகள் - கணவனைப் பறிகொடுத்தவள். அது முதுபாலை. கழிந்தோர் - செத்தோர். படர் - துன்பம். ஒழிந்தோர் உயிருடன் இருப்போர். இது கையறுநிலைத் துறை. கை அறு நிலை - செயலற்ற நிலை. காதலன் மனைவியை இழந்தது தபுதார நிலை. காதலனை இழந்த மனைவி நிலை தாபதநிலை. கணவனுடன் எரி தழலில் உடன்கட்டை ஏறும்போது, மனைவி புலம்பிக் கூறுவன பாலை நிலை. மகன் போர்க்களத்தே மாயத் தாயும் உடன்மாய்வது தலைப்பெயல் நிலை - தலைப்பெயல் - உடன்கலத்தல், சேர்ந்து மடிதல். பலர்செல - பலர் சாவவும். செல்லா - தான் மட்டும் மறையாத, இது காடு வாழ்த்து. காடு - சுடுகாடும் இடுகாடும். முன்னது எரித்தல் பின்னது புதைத்தல். இவை பொதுவான உலக நிலையாமை. இவ் இரண்டு கூறுகளை உடையது காஞ்சித்திணை.

### பாடாண் திணை

**போரில் வெற்றிபெற்ற வீரரைப் புகழ்ந்து பாடுவது. வாழ்வில் மேம்பட்ட இருபாலரையும் பாடுவதும் பாடாண்திணையே**

**1026. பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே**
**நாடுங் காலை நாலிரண்டு உடைத்தே.**

பாடப் பெறுதற்கான தகுதியுடைமை சிலர்க்கே உண்டு. ஆண் - ஆளுமை. பாடாண் - பாடிப் புகழ்பெறுதற்கான ஆளுமையுடைமை. அது கைக்கிளைப் புறமாகும். கைக்கிளை ஒருவன் தன் காதலை வெளிப்படுத்தல். ஒருவரது

விருப்பத்தாலும் மற்றவர் மீது கொண்ட மதிப்பாலும் பிறப்பதால் இது கைக்கிளைக்குப் புறமெனப்பட்டது. பாடல்களை ஆராயுங்கால் இவை தலைமை வாய்ந்த எட்டுவகை. இவை பின்னே வருவன. அமரர்கள் முடியும் அறுவகை. புரைதீர் காமம் புல்லிய வகை. பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கு ஆகிய முன்னோர் கூறிய குறிப்பு. ஆக எட்டுவகை.

### புகழ்பாடுவதில் ஒருவகை

**1027. அமரர்கண் முடியும் அறுவகை யானும்**
**புரைதீர் காமம் புல்லிய வகையினும்**
**ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப.**

வெட்சி முதல் காஞ்சியீறாகப் போரில் இறந்து அமரரானவர்களையும் அதுபோல் தெய்வமானவர்களையும் பாடும் ஆறுவகைகள். சான்றோர், புலவர், வேந்தர், ஆன், மழை, உலகம் என ஒரு கருத்துண்டு. குற்றமற்ற காமத்தைப் பொருந்தி வருவன, பெயர் சுட்டின் புறத்தில் வரும். இவை ஒரு பகுதியாகப் பாடாணில் பொருந்தும். முனிவர், பார்ப்பார், ஆன், மழை, வேந்தர், உலகு என்றும் கூறுவர்.

அமரர்கண் முடியும் அறுவகை - போரில் அமரரான தெய்வ வாழ்த்துக்கள். காமம் பற்றியது பெயர் சுட்டி வருமேல்புறத்தில் பொருந்தும். புரை - குற்றம்.

### புகழ்பாடுவதில் மற்றொரு வகை

**1028. வழங்கியல் மருங்கின் வகைபட நிலைஇப்**
**பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும்**
**முன்னோர் கூறிய குறிப்பினும் செந்துறை**
**வண்ணப் பகுதி வரைவின்று ஆங்கே.**

உலக வழக்கிலுள்ளவாறு பல வகையாக நிலைபெற்று, வழிபடுதலும் புகழ்தலும் ஆகிய இரண்டும் கருதிய பாங்கின பிறிதொருவகை. அவை முன்னோர் கூறிவந்த குறிப்பொடு பொருந்தும். இவையாவும் 'செந்துறை வண்ணப் பகுதி' என ஒருவகை வண்ணச் சந்தத்துடன் பாடப்பெறுதல் நீக்கும் நிலைமை இன்று.

இவை உலக வழக்கையும் இலக்கிய வழக்கையும் பற்றியனவாய், வழிவழியாகப் பாடப்பெற்ற வகைகளாகும். மேல் வருவனவும் இவற்றுள் அடங்கும்.

செந்துறை வண்ணம் - பாடாணில் ஒருவகை. ஒருவகை ஓசையுடன் பாடும் வண்ணம். கடவுளரையும் சான்றோரையும் கருதிப்

**பாடுபவை இவை. வழங்கியல் மருங்கு உலக வழக்கிற் காணப்படுவது. பரவல் - முன்னிலைப்படுத்தி வாழ்த்தி வணங்குதல். புகழ்ச்சி - ஏத்தி ஏத்திப் புகழ்தல். உலக வழக்கை வகைப்படுத்திக் கொண்டு முன்னோர் கூறிய குறிப்பையும் சார்த்திப் பாடுவர். கடவுள் வாழ்த்து - பத்திமைப் பாக்களாகப் பாடப்படுதல் நீக்கும் நிலைமை இன்று. இவ்வாறு மன்னர்களும் பெரியோர்களும் பாடப்படுதலும் உண்டு. வண்ணப்பா வகைகளில் ஒன்றுதான் செந்துறை வண்ணம்.**

### முற்கூறியவற்றின் உள்வகை சில

**1029. காமப் பகுதி கடவுளும் வரையார்**
**ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்**

கடவுளர் பற்றிய பாடல்களிலும் காமப் பொருள் சார்த்திப் பாடுதலை நீக்க மாட்டார்கள். பிற்காலத்தே இது வளர்ந்து பிற மன்னர் வள்ளல்கள் பற்றியும், காதல் கொண்டதாகப் பாடுவது உண்டு. ஏனோர் எனப்பட்ட தலைவர், மன்னர்கள் பற்றியும் பெயர் சுட்டி இவை வரும்.நாயகி நாயகிபாவம் - இதிலிருந்து வளர்ந்ததே.

**கடவுளர் பற்றிய பாடல்களிலும் காதல் பொருள் பற்றிப் பாடுதலை நீக்க மாட்டார்கள். பிற தலைவர், மன்னர் பற்றியும் இது வரலாம். வள்ளி திருமணம் போல்வன, நாட்டுப் புற வழக்கின.**

**1030. குழவி மருங்கினும் கிழவ தாகும்**

குழந்தைகளைப் புகழ்ந்து பாடுதலும் பாடாணுக்கு உரியதேயாம். அதன் வளர்ச்சி நிலைகளைப் பாடுவர்.

**குழவி - குழந்தை. அதன் பல வளர்நிலைகளைப் புகழ்ந்து பாடும் நாட்டுப்பாடல்கள். பின்னர் இவை இறைவன் மேல் ஏற்றிப் பாடப்பட்டன. செந்துறை வண்ணத்தில் அகமரபுகள் வருதலும் குழந்தையாகப் பாடுதலும் அன்று உலக வழக்கில் இருந்துள்ளன.**

**1031. ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப**

ஊரொடு தோற்றம் என ஊர்வலமாகத் தோன்றி வருகின்றனரெனப் பாடுதலும் இப் பாடாணுக்கு உரியதேயாம்.

**ஊர்வலமாகக் கடவுளரும் பெரியோரும் வருவதாகப் பாடும் புகழ்ப் பாட்டும் உலக வழக்கினதே. தோற்றம் - வெளிப்பட்டுவருதல்.**

**1032. வழக்கொடு சிவணிய வகைமை யான**

இவை எல்லாம் உலக வழக்கொடு பொருந்திய இலக்கிய வகைகளாகும்.

மேலே கூறப்பட்டவை மூன்றும் உலக வழக்கொடு பொருந்திய இலக்கிய வகைகள். சிவணிய – பொருந்திய.

**1033. மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே**

இவற்றில் பாடப்பெறுபவரது உண்மையான இயற்பெயரை வைத்துப் பாடுவர்.

இவை 'சுட்டி ஒருவர்ப் பெயர் கொள்ளாத' அகப் பாடல் போலாது உண்மையான இயற்பெயர் வைத்துப் பாடப்படும். மெய்ப்பெயர் –இயற்பெயர்.

**1034. கொடிநிலை கந்தழி வள்ளி என்ற**
**வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்**
**கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே**

கடவுளை வாழ்த்தும் போது மக்களையும் வேந்தனையும் சேர்த்து வாழ்த்துவது ஒரு மரபு. கொடிநிலை – மன்னனது கொடியைத் தெய்வத்தினது கொடியுடன் இயைத்து வாழ்த்திப்பாடுவர். கந்தழி – பற்றுக் கோடான மதிலை அழிப்பதை, தெய்வத்தினது மதிலழித்த சிறப்புடன் ஒப்பிட்டுப் பாடுவர். வள்ளி – வள்ளிக் கூத்தாகிய அரசனது புகழைப் பாடி ஆடும் ஆட்டமும் கடவுள் வாழ்த்துடன் பொருந்தி வரும். மன்னனைக் காக்க வேண்டிப் பாடுவன இவை.

இதுவும் கடவுள் வாழ்த்துப் பற்றியதே. கொடிநிலை – மன்னனின் கொடி இறைவாழ்த்துடன் பாடப்படும். கந்தழி – பகைவர்க்குப் பற்றுக் கோடான அரணை அழிப்பதும் இறை வாழ்த்துடன் சார்த்திப் பாடப்படும். வள்ளி – வள்ளிக் கூத்து,அரசனை வாழ்த்திப் பாடி ஆடப்படும். கடவுள் வாழ்த்தும் மன்னர், மக்களைச் சார்த்தியே பாடப்பெற்றன.

**1035. கொற்ற வள்ளை ஓரிடத்தான**

வள்ளை அகத்தில் வரும் உலக்கைப் பாட்டு. ஆனால் பெயர் சுட் பகைவனது அழிவுக்கு வருந்தி, வென்றவனது சிறப்பையும் பகர்ந்து வரு கொற்றவள்ளை.

வள்ளை – வள்ளைப்பாட்டு. உரல் குத்தும் போது பாடும் பா அரசன் வெற்றியை வாழ்த்திப் பாடுவது. இயற்பெயரின்றி இ அகப்பாடலில் வரும்.

பாடாண் திணையின் உட்துறைகள்

1036. கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலும்
அடுத்தூர்ந்து ஏத்திய இயன்மொழி வாழ்த்தும்
சேய்வரல் வருத்தம் விட வாயில்
காவலர்க்கு உரைத்த கடைநிலை யானும்
கண்படை கண்ணிய கண்படை நிலையும்
கபிலை கண்ணிய வேள்வி நிலையும்
வேலை நோக்கிய விளக்கு நிலையும்
வாயுறை வாழ்த்தும் செவியறி வுறூஉவும்
ஆவயின் வரூஉம் புறநிலை வாழ்த்தும்
கைக்கிளை வகையோடு உளப்படத் தொகைஇத்
தொக்க நான்கும் உளவென மொழிப.

1. கொடை கொடுத்தோரைப் புகழ்தல்; 2. கொடாதோரைப் பழித்தல். 3.பகைவரை வென்றவனைப் புகழ்ந்து; அவனது நல்லியல்புகளைப் பகரும் இயன்மொழி வாழ்த்து 4. மிக நீண்ட தூரத்திலிருந்து வந்த வருத்தம் தீருமாறு, வாயில் காவலரிடம் தன் வருகையை அரசனிடம் கூறுமாறு சொல்லும் கடைநிலை, 5. அரசனது உறக்கத்திற்காகப் பாடுகின்ற கண்படைநிலை. 6. கபிலைப் பசுவைக் கொடையாகத்தரும் வேள்விநிலை. 7. வேலினை விளக்கேற்றி வழிபடுதல் 8.உள்ளதை வெளிப்படக் கூறும் வாயுறை வாழ்த்து 9.அறிவுரை பகரும் செவியுறை வாழ்த்து (உறை - மருந்து. இவை மருந்துபோல் அரசரைத் திருத்தி, நல்வழிப்படுத்தப் பாடுவன.) 10. குலதெய்வம் காக்க எனப்பாடும் புறநிலை வாழ்த்து, புறத்தில் பெயர் சுட்டிவரும் கைக்கிளை வகைகள். இறுதியில் கூறிய நான்கும் சேர்த்து இவை பாடாண் பாட்டுத்துறைகளாகும்.

**புலவர்க்கும் பாணர்க்கும் புகழ்தலும் பழித்தலும் இயல்பே. அடுத்தூர்ந்து - மன்னன் பகைவரை வெற்றி கொண்டபோது. இயன்மொழி - இயல்பைக் கூறுவது. சேய்வரல் - நீண்ட தூரத்திலிருந்து நடந்து வந்தமை. வாயில் காவலனிடம் பாடுவது கடைநிலை. கண்படை - மன்னர் பள்ளி கொண்டு உறங்க. சிவலைப் பசுவை அளிக்கும் வேள்வி நிலை. இது ஒரு கொடை. விளக்கை வாழ்த்தும் விளக்கு நிலை. அறிவுரை கூறும் வாயுறை வாழ்த்து. கடிந்து கூறும் செவியறிவுறுத்தல். குல தெய்வம் காக்க எனும் புறநிலை வாழ்த்து. இயற்பெயர் சுட்டிக் காதலை வெளிப்படையாகப் பாடும் கைக்கிளை வகைகள் (முத்தொள்ளாயிரம் போல்வன). தொக்க நான்கு - இறுதியில் சொன்ன நான்கு. முற்பட ஏழு உள.**

## மேலும் சில உட்துறைகள்

பள்ளி எழுச்சி

1037. தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்

ஆற்றுப்படை

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன்எதிரச் சொன்ன பக்கமும்

பிறந்த நாள் பெருமங்கலம்

சிறந்த நாளணி செற்றம் நீக்கிப்
பிறந்த நாள்வயிற் பெருமங்கலமும்

பிற துறைகள்

சிறந்த சீர்த்தி மண்ணுமங் கலமும்
நடைமிகுத் தேத்திய குடைநிழல் மரபும்
மாணார்ச் சுட்டிய வாள்மங் கலமும்
மன்எயில் அழித்த மண்ணுமங் கலமும்
பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும்
பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி
நடைவயின் தோன்றும் இருவகை விடையும்
அச்சமும் உவகையும் எச்ச மின்றி
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்
காலங் கண்ணிய ஓம்படை உளப்பட
ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பில்
காலம் மூன்றொடு கண்ணிய வருமே.

1. குற்றமற்ற நற்புகழைக் கருதியபடி உறங்கும் மன்னர்களை எழுப்புதற்குச் சூதர்கள் பாடும் துயிலெடை நிலை. (பின்பு பள்ளி எழுச்சி எனப்பட்டது). 2. கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் வழியிடையே ஒருவருக்கொருவர் எதிராகச் சந்தித்து, பரிசில் பெற்று செல்வச் சிறப்புடன் வருபவன் தனக்கு எதிரே வறியராய் வருபவர்க்கு, இவ்வழியாகச் சென்று இத்தகைய தலைவனைக் கண்டு, எம்மைப்

போல நீங்களும் பரிசில் பெற்றுப் பயனடைவீர்களாக என வழிகாட்டும் ஆற்றுப்படை. 3. பிறந்த நாளன்று சினத்தை கைவிட்டு நல்லருள் பல செய்து அதைச் சிறந்த நாளாகச் சிறப்புறக் கொண்டாடும் பெருமங்கலம். 4.ஆண்டுதோறும் சிறந்த புகழ் விளங்குமாறு, புனிதநீராடி முடிசூடிக் கொண்டாடுதல் 5. உலகத்துக்கு நிழல் தந்து காக்கும் இயல்பைப் புகழ்ந்துரைக்கும் வெண் கொற்றக் குடைச்சிறப்பு 6. பகைவரை வென்ற வாளுக்கு மாலை சூட்டிப்பாடிக் கொண்டாடும் வாள் மங்கலம் 7. நிலைபெற்ற பகைவர் மதிலை அழித்து, பின்பு அதைப் புனித நீராட்டிப் பாடி வாழ்த்தும் மண்ணு மங்கலம். 8.பரிசில் கடாவும் (கேட்டுப் பாடும்) கடைக் கூட்டுநிலை (பரிசில் பெறும் நிலை). 9.பெற்ற பிறகு அரசனது பெருஞ்செல்வத்தைப் புகழ்ந்து, உலக நடைமுறையில் தோன்றும் இருவகையான விடை பெறுதல். ஒன்று அரசனே விடைதந்தனுப்புதல்; மற்றொன்று பரிசிலர் தாமே விடைப் பெற்றுப் புறப்படுதல். 10. நாள் (நட்சத்திரம்) புள் (சகுனம்), பிற நிமித்தங்கள் இவற்றால் ஏற்படக் கூடிய அச்சம் நீக்கியும் உவகையை ஆக்கியும் இவற்றால் குறைவுபடாமல், முக்காலமும் கருதிப் பாதுகாப்பாக வாழ்க என வாழ்த்துகின்ற ஓம்படை நிலை. இவை உளப்பட உலகத்தில் வரும் அன்றாட நடைமுறைகளின்படி, முக்காலத்திற்கும் பொருந்துமாறு, பாடாண் பாடல்கள் அவ்வக் கருத்தமையக் காலந்தோறும் பாடப்படும்.

உறங்கும் வேந்தரைப் புலர் காலையில் எழுப்பச் சூதர்கள் பாடுவது துயிலெடை நிலை (திருப்பள்ளி எழுச்சி).

கூத்தர் பாணர் பொருநர் விறலியர் செல்வம் பெற்று வருபவர், வழியிடையே வரும் தம் போன்ற வறியவரைக் காணுதல் - உறழத் தோன்றுதல். வேறுபடக் காணப்படுதல். இந்நிலையில் பரிசு பெற்றவர்கள், பெறாதவர்க்கு இவ்வழிச் சென்று இன்ன தலைவனைக் கண்டால் நீங்களும் பரிசில் பெறுவீர் என வழி கூறுவர். இது ஆற்றுப்படை இலக்கணம். பெருமங்கலம் - பிறந்தநாள் விழா. அச்சிறந்த நாளில் மன்னன் சினம் நீங்கிக் கொடை செய்து மக்களை மகிழ்விப்பான். மண்ணு மங்கலம் - முடிசூட்டு விழா. புனித நீராட்டி முடிசூட்டுவர். மன்னன் குடை - மக்களைக் காப்பது. வெண்கொற்றக் குடையைப் புகழ்வர். நடை மிகுந்து - அருள் நிழல் தந்து காக்கும் சிறப்பு. பகைவரை வென்ற வாளை மாலைசூட்டி வாழ்த்துவர். பகைவர் மதிலை அழித்துப் பின் அதைத் தூய்மை செய்து நன்னீராட்டிக் கொண்டாடுதல் - புகழ்ந்து பாடுங்கால்

இது பாடாணில் வரும். கடைஇய - கடாவிய. கடைக்கூட்டு நிலை - அதற்கான முயற்சிகள் யாவும். நடைவயின் - உலக வழக்கப்படி, இருவகை விடை - தானே விடைகேட்டல்; அவன் விடை கொடுத்து அனுப்பல்.

பொதுவான வாழ்த்துக்களும் பாடாணாகும். அவை மூன்று காலமும் பற்றியவை (கடந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம்). நாளும் - நல்ல நாள். புள் - நல்ல சகுனம். பிற நிமித்தம் - குறிபார்த்தல். இவற்றால் நன்மை உண்டாக வேண்டுதல். காலம் கண்ணிய ஓம்படை - நல்ல காலத்தைத் தருமாறு பாதுகாப்பு வேண்டுதல். ஞாலத்து வரும் நடக்கையது குறிப்பு - இவை உலக மக்களிடையே அவர்கள் நடக்கையின்கண் காணப்படுவன. இவை பற்றிய நல்வாழ்த்துக்கள் என்பன தமிழ் மக்கள் அன்றும் இன்றும் ஒரே படித்தான சில தெய்வ நம்பிக்கைகளுடன் இருப்பதைக் காட்டும்.

## புறத்திணை
## நூற்பா முதற்குறிப்பு


| வரிசை எண் | நூற்பா | நூற்பா எண் |
|---|---|---|
| 1. | அகத்திணை | 1002 |
| 2. | அதுவே தானும் | 1012 |
| 3. | அமரர்கண் | 1027 |
| 4. | அறுவகை | 1021 |
| 5. | இயங்குபடை | 1009 |
| 6. | உழிஞை | 1010 |
| 7. | ஊரொடு | 1031 |
| 8. | எஞ்சா | 1008 |
| 9. | கணையும் | 1017 |
| 10. | காஞ்சிதானே | 1023 |
| 11. | காமப்பகுதி | 1029 |
| 12. | குடையும் | 1014 |
| 13. | குழவி | 1030 |
| 14. | கூதிர் | 1022 |
| 15. | கொடிநிலை | 1034 |
| 16. | கொடுப்போர் | 1036 |
| 17. | கொள்ளார் தேஎம் | 1013 |
| 18. | கொற்ற | 1035 |
| 19. | தாவில் | 1020 |
| 20. | தாவில் நல்லிசை | 1037 |
| 21. | தானை | 1018 |
| 22. | தும்பை | 1015 |
| 23. | படையியங்கு | 982 |
| 24. | பாங்கரும் | 1024 |
| 25. | பாடாண் | 1026 |
| 26. | மறங்கடை | 1005 |
| 27. | மாற்றரும் | 1025 |
| 28. | முழுமுதல் | 1011 |
| 29. | மெய்ப்பெயர் | 1033 |
| 30. | மைந்து | 1016 |
| 31. | வஞ்சி | 1007 |
| 32. | வழக்கொடு | 1032 |
| 33. | வழங்கியல் | 1028 |
| 34. | வாகை | 1019 |
| 35. | வெறியறி | 1006 |
| 36. | வேந்துவிடு | 1003 |

மீனாட்சி
புத்தக நிலையம்